
# 1991 அவ்யக்த முரளி



<u>பொருளடக்கம் - 11</u>

**18.01.1991** உலகத்திற்கு நன்மை செய்வதற்காக அனைத்து நினைவுகளின் மூலம் நிரம்பியவர் ஆகி அனைவருக்கும் ஒத்துழைப்பு கொடுங்கள்!

**13.02.1991** உலக மாற்றத்தில் தீவிரத்தன்மையைக் கொண்டு வருவதற்காக சாதனம் -ஒருமுகப்படுத்தும் சக்தி மற்றும் ஒரே மாதிரியான நிலை!

**25.02.1991** எண்ணம் மற்றும் செயலில் சமநிலை கொண்டு வருவது தான் பரமாத்மா அன்பிற்கு பிரதிபலன் கொடுப்பதாகும்!

**17.03.1991** பிராமண வாழ்க்கையின் உயர்ந்த மேலாண் தோற்றப்பொலிவு **(Personality) -**திருப்தி!

**03.04.1991** அனைத்து எல்லைக்கு உட்பட்டவைகளிலிருந்து விலகி எல்லைக்கு அப்பாற்பட்ட வைராக்கி ஆகுங்கள்!

**10.04.1991** இதய சிம்மாசனம் மற்றும் உலக சிம்மாசானத்திற்குரியவராக ஆவதற்கு சுகம் கொடுங்கள் மற்றும் சுகம் எடுங்கள்!

**26.10.1991 தபஸ்யாவின் பிரத்யக்ஷபலன் -குஷி!**

**04.12.1991 வெற்றிகரமான தபஸ்வி என்றாலே தூய்மையெனும் பர்சனாலிட்டி (தோற்றம்) மற்றும் ராயல்டி (உயர்வு) உடையவராவார்!**

**11.12.1991 சத்தியம் என்ற பண்பு தான் உண்மையான உயர்தன்மை (ராயல்டி)!**

**18.12.1991 ஒவ்வொரு செயலிலும் நேர்மையை பிரயோகம் செய்வதே தபஸ்யா!**

**31.12.1991 உண்மையான சார்ட்டின் (அட்டவணை) அர்த்தம் முன்னேற்றம் மற்றும் மாற்றம்!**

**ஓம் சாந்தி சாந்தி சாந்தி!**

# 18.01.1991 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# உலகத்திற்கு நன்மை செய்வதற்காக அனைத்து நினைவுகளின் மூலம் நிரம்பியவர் ஆகி அனைவருக்கும் ஒத்துழைப்பு கொடுங்கள்!

சதா விஷ்வ கல்யாணகாரி அவ்யக்த பாப்தாதா தனது குழந்தைகளிடம் பேசுகிறார்: இன்று சக்திசாலியான தந்தை தனது நினைவு சொரூபமான குழந்தைகளை பார்த்து புன்முறுவல் செய்து கொண்டிருக்கிறார். உலகத்திலுள்ள உள்நாடு மற்றும் வெளி நாட்டை சேர்ந்த அனைத்து குழந்தைகளும் நினைவு நாளை கொண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். இன்றைய நினைவு குழந்தைகளுக்கு தனது பிராமண வாழ்க்கை அதாவது சக்திசாலியான வாழ்க்கையை நினைவூட்டுகிறது, ஏனெனில் பிரம்மாபாபாவின் வாழ்க்கை வரலாற்றின் கூடவே பிராமண குழந்தைகளின் வாழ்க்கை வரலாறும் கூட இருக்கிறது. நிராகார பாபா, சாகார பிரம்மாவுடன் பிராமணர்களை உருவாக்கினார். அப்பொழுது தான் பிராமணர்களின் மூலம் அழிவற்ற யக்ஞம் உருவாகிறது. பிரம்மாபாபா பிராமணர்களாகிய உங்களுடன் ஸ்தாபனைக்கு நிமித்தம் ஆகிறார், எனவே பிரம்மாபாபாவோடு முதன்மையான பிராமணார்களுக்கும் கூட வாழ்க்கை வரலாறு இருக்கிறது. ஆதி தேவ் பிரம்மா மற்றும் ஆதி பிராமணர்கள் இருவரின் மகத்துவமும் யக்ஞத்தின் ஸ்தாபனையில் இருக்கிறார்கள். அனாதி (அழிவற்ற) தந்தை ஆதி தேவ் பிரம்மா மூலம் முதன்மையான பிராமணர்களை படைக்கிறார் மேலும் முதன்மையான பிராமணர்கள் மூலம் பல பிராமணர்களின் வளர்ச்சி ஏற்படுகிறது. இது தான் ஸ்தாபனையின், பிரம்மாபாபாவின் வரலாறு. இன்றைய நினைவு நாளில் வர்ணனை செய்கிறார்கள். நினைவு நாள் என்று சொல்கிறீர்கள் என்றால் பிரம்மாபாபாவை மட்டும் நினைவு செய்கிறீர்களா அல்லது

# 1991 அவ்யக்த முரளி

பிரம்மாபாபாவின் மூலம் என்னவெல்லாம் சிவபாபாவின் நினைவுகளை (மகிமைகளை) ஏற்படுத்தினாரோ, அந்த அனைத்து நினைவுகளும் நினைவில் வருகிறதா? ஆரம்பத்திலிருந்து இப்பொழுது வரை என்னவெல்லாம் மேலும் எவ்வளவு நினைவுகளை ஏற்படுத்தினாரோ -நினைவில் இருக்கிறதா? அமிர்த வேளையில் இருந்து இரவு வரை கூட அனைத்து நினைவுகளையும் முன்னால் கொண்டு வாருங்கள் -ஒரே நாளில் முடிந்து விடுமா! மிகப் பெரிய பட்டியல் இருக்கிறது அல்லவா! ஸ்மிருதி (நினைவு) வாரம் கூட கொண்டாடினீர்கள் என்றாலும் கூட விரிவாக்கம் அதிகமாக இருக்கிறது ஏனெனில் ரிவைஸ் (revise திரும்ப சொல்லுதல்) மட்டும் செய்யாதீர்கள் ஆனால் ரியலாயிஸ் (realise உணருங்கள்) செய்யுங்கள். ஆகையால் நினைவு சொரூபம் என்று தான் சொல்லப்படுகிறது. சொரூபம் என்றாலே ஒவ்வொரு நினைவுகளின் அனுபவமாகும். நீங்கள் நினைவு சொரூபம் (பாபாவை போன்று ஆவது) ஆகிறீர்கள் மேலும் பக்தர்கள் நினைவுப்படுத்திக் (புகழ் பாடுதல்) கொள்கிறார்கள். எனவே என்னென்ன நினைவுகளின் அனுபவம் செய்தீர்கள் -இதற்கான விரிவாக்கம் மிகப் பெரியது. பாபாவின் அறிமுகம் எவ்வளவு நீண்டதாக இருக்கிறது ஆனால் அதை நீங்கள் 5-விஷயங்களில் கூட சுருக்கிக் கொள்ளலாம், ஆரம்பத்திலிருந்து இப்பொழுது வரை பாப்தாதா எத்தனை பெயர்களில் நினைவூட்டினார்கள். எத்தனை பெயர்கள், நீண்டதாக இருக்கிறதல்லவா! ஒவ்வொரு பெயரையும் நினைவில் கொண்டு வாருங்கள் மேலும் சொரூபமாகி அனுபவம் செய்யுங்கள், திரும்ப திரும்ப (கிளிப்பிள்ளை போன்று) சொல்லாதீர்கள். நினைவு சொரூபம் ஆவதற்கான ஆனந்தம் மிக தனிப்பட்டதாகவும், அன்பானதாகவும் இருக்கும். பாபா உங்களை கண்ணின் மணி என்ற பெயரில் நினைவூட்டுகிறார். பாபாவின் கண்ணின் மணிகளே! கண்ணின் மணிக்கு என்ன விசேஷத்தன்மை இருக்கிறது, கண்ணின் மணியின் என்ன கடமை இருக்கிறது, கண்ணின் மணிக்கு என்ன சக்தி இருக்கிறது? அப்படி அனுபவம் செய்யுங்கள் அதாவது நினைவு சொரூபம் ஆகுங்கள். இந்த முறையில் ஒவ்வொரு பெயரின் (சுவமான்) நினைவை அனுபவம் செய்து கொண்டேயிருங்கள். இது ஒரு உதாரணமாக சொல்லபட்டது. அந்த மாதிரி சிரேஷ்ட சொரூபத்தின் நினைவுகள் எவ்வளவு இருக்கிறது? பிராமணர்களாகிய உங்களுக்கு எத்தனை வடிவங்கள் (ரூபம்) இருக்கிறது, பாபாவின் ரூபங்கள் அனைத்தும்

உங்களுடையதாகவும் இருக்கிறது. அந்த அனைத்து ரூபங்களின் நினைவுகளையும் (ஞாபகார்த்தம்) அனுபவம் செய்யுங்கள். பெயர், ரூபம், குணம் -அனாதி (பரந்தாமம்) ஆதி (சத்யுகம்) மற்றும் இப்பொழுது (சங்கமயுகம்), பிராமண வாழ்க்கையில் அனைத்து குணங்களிலும் நினைவு சொரூபம் ஆகுங்கள். இது போன்ற காரியங்கள், எத்தனை சிரேஷ்ட கடமைகளுக்கு நிமித்தமாகி இருக்கிறீர்கள்! அந்த கடமைகளின் நினைவுகளை வெளிப்படுத்துங்கள். 5-வது விஷயம் பாப்தாதா அனாதி-ஆதி (பரந்தாமம், சத்யுகம்) உலகத்தை நினைவூட்டுகிறார். உலகத்தின் நினைவு மூலம் திரும்ப வீட்டிற்கு செல்வதற்கான சக்தி வந்து விடுகிறது. தனது ராஜ்யத்தில் ராஜ்ய அதிகாரி ஆவதற்கான தைரியம் வந்துவிடும் மேலும் தற்சமயத்தில் சங்கம யுகம் என்ற உலகத்தில் குஷியான வாழ்க்கை வாழ்வதற்கான கலை நினைவில் வந்து விடுகிறது. வாழும் கலை நல்ல முறையில் வந்து விடுகிறது (கற்றுக் கொள்வோம்) அல்லவா? உலகத்தினர் (கலியுகம்) இறந்து போவதற்கான கலையில் வேகமாக போய்க் கொண்டிருக்கிறார்கள் மேலும் பிராமணர்களாகிய நீங்கள் சுகம் நிறைந்த மகிழ்ச்சியான வாழும் கலையில் பறந்து கொண்டிருக்கிறீர்கள். எவ்வளவு வேறுபாடு இருக்கிறது.

எனவே நினைவு சொரூபம் என்றாலே அனைத்து நினைவுகளின் ஆன்மீக நஷாவின் அனுபவம் செய்ய வேண்டும். இந்த நினைவு நாளில் உலகத்தினரை போன்று அப்படியெல்லாம் எங்களுடைய பிரம்மாபாபா வாழ்ந்தார் என்று நீங்கள் அனைவரும் இந்த வார்த்தையை சொல்லாதீர்கள். அவர் இவ்வாறு சொல்லியிருந்தார், இதை செய்தார், உலகத்தினர் தான் செய்தார், சொன்னார்... என்று சொல்லிக் கொண்டேயிருந்தார்கள் மேலும் துக்கத்தின் அலைகளை பரப்பிக் கொண்டேயிருந்தார்கள் ஆனால் பிராமணர்களாகிய உங்களின் விசேஷத்தன்மை -இப்பொழுதும் கூட எங்களுடன் தான் இருக்கிறார் என்று சொல்லுங்கள். கூடவே இருப்பதை அனுபவம் செய்கிறீர்கள், எனவே உங்கள் அனைவரின் இந்த விசேஷத்தன்மை இருக்கிறது. பிரம்மாபாபா சென்று விட்டார் என்று நீங்கள் சொல்ல மாட்டீர்கள். கூடவே இருப்பேன், ஒன்றாகவே செல்வோம் -இது வாக்குறுதி கொடுத்திருக்கிறார் அல்லவா! ஒருவேளை ஆதி ஆத்மாவே (ஆதி தேவ்) வாக்குறுதியை நிறைவேற்றவில்லையென்றால், வேறு யார்

நிறைவேற்றுவார்கள்? ரூபம் மற்றும் சேவையின் முறை மட்டும் தான் மாறியுள்ளது. உங்கள் அனைவரின் குறிக்கோள் -ஃபரிஸ்தாவிலிருந்து தேவதை ஆவது. ஃபரிஸ்தா ரூபத்தின் உதாரணம் பிரம்மாபாபா ஆகியிருக்கிறார். அனைத்து குழந்தைகளுக்கும் பாலனை (கவனிப்பு) இப்பொழுதும் கூட பிரம்மாபாபாவின் மூலம் தான் நடந்து கொண்டிருக்கிறது. ஆகையால் பிரம்மாகுமார் மற்றும் பிரம்மாகுமாரிகள் என்று சொல்லப்படுகிறது. புரிந்ததா? நினைவு நாளின் மகத்துவம் என்னவாக இருக்கிறது? இந்த நினைவலைகளில் எப்பொழுதுமே அன்பில் மூழ்கியிருங்கள். இதற்கு தான் சொல்லப்படுகிறது -பாபாவிற்கு சமமாக ஆவதற்கான அனுபவம். ஆத்மாக்களாகிய நீங்கள் பாபாவிற்குச் சமமானவர் என்ற அனுபவம் செய்தீர்களா? இந்த சமமானவர் என்ற வார்த்தையை உலகத்தினர் கலந்துவிடுதல் என்று சொல்லி விடுகிறார்கள். ஆத்மா பரமாத்மாவுடன் ஒன்றிவிடுவதில்லை ஆனால் பாபாவிற்குச் சமமாக ஆகிறீர்கள். அனைத்து குழந்தைகளும் அவரவர் பெயரிலிருந்து நினைவு நாளுக்கான நினைவலைகளை அனுப்பியிருக்கிறார்கள். பலர் சந்தேசி (செய்தியாளர்) ஆகி அன்பு நினைவுகளை கொண்டு வருகிறார்கள் மேலும் ஒவ்வொருவரும் சொல்கிறார்கள் என்னுடைய நினைவுகளை முக்கியமாக கொடுக்க வேண்டும். எனவே ஒவ்வொருவருக்கும் தனித்தனியாக நினைவுக் கடிதம் எழுதுவதற்கு பதிலாக மனதின் மூலம் கடிதம் எழுதிக் கொண்டிருக்கிறார். ஒவ்வொருக்கும் மனதின் அன்பு பாப்தாதாவின் கண்களில், மனதில் நிறைந்திருக்கிறது மேலும் இப்பொழுது விசேஷமாக மூழ்கியிருக்கிறது. சிறந்த முறையில் நினைவு செய்பவர்களுக்கு பாப்தாதாவும் கூட சிறப்பாக இப்பொழுது கூட இமர்ஜ் (வெளிப்படுத்தி) செய்து அன்பு நினைவுகளை கொடுத்துக் கொண்டிருக்கிறார். ஒவ்வொருவரின் மனதின் ஊக்கம் மற்றும் மனதின் ஆன்மீக உரையாடல், இதயபூர்வமான உரையாடல், மனதிற்கு ஒய்வு அளிக்கக் கூடியவரிடம் சென்றடைகிறது. பாப்தாதா அனைத்து குழந்தைகளுக்கும் எப்பொழுதுமே மனதில் உள்ளீர்கள், சேவையில் கூடவே உள்ளீர்கள் மற்றும் சூழ்நிலைகளில் சதா சாட்சியாக இருக்கிறீர்கள் என்ற நினைவை கொடுக்கிறார். எனவே சதா மாயாஜீத் என்ற கொடி அசைந்து கொண்டேயிருக்கும். அனைத்து குழந்தைகளுக்கும் எதுவும் புதிதல்ல என்ற பாடத்தை ஒவ்வொரு சூழ்நிலையிலும் எப்பொழுதுமே நினைவில் வையுங்கள். பிராமண

வாழ்க்கை என்றாலே கேள்விக்குறி, ஆச்சரியத்தின் கோடு இருக்காது. எத்தனை முறை இந்த விஷயத்தை கேட்டிருக்கிறீர்கள். புது விஷயமா என்ன? இல்லை. பிராமண வாழ்க்கை என்றாலே ஒவ்வொரு செய்தியை (விஷயத்தை) கேட்டாலும் கூட போன கல்பத்தின் போல நினைவில் சக்தி இருக்க வேண்டும் -என்ன நடக்கிறதோ, அது நடந்து கொண்டிருக்கிறது, ஆகையால் என்ன ஆகுமோ? இந்த கேள்வி வரவே முடியாது. திரிகாலதரிசியாக இருக்கிறீர்கள். நாடகத்தின் முதல் இடை இறுதி நிலையை தெரிந்திருப்பதால் நிகழ்காலத்தைப் பற்றி தெரியாதா என்ன? பயப்படுவதில்லைதானே? பிராமண வாழ்க்கையில் ஒவ்வொரு அடியிலும் நன்மை அடங்கியிருக்கிறது. பயப்படுவதற்கு என்ன விஷயமுள்ளது? தனது அமைதி சக்தியின் மூலம் அசாந்தியான ஆத்மாக்களுக்கு அமைதியின் கிரணங்களை கொடுப்பது தான் உங்களுடைய கடமையாகும். உங்களுக்கு முன்னாலே உங்களுடைய சகோதர சகோதரிகள் இருக்கிறார்கள், எனவே தனது ஈஸ்வரிய குடும்பத்தின் சம்மந்தத்தோடு உதவியாளர் ஆகுங்கள். எந்தளவு முடியுமோ யுத்தத்தில் முழ்கியிருப்பவர்களுக்கு, யோகி ஆத்மாக்களின் நினைவு அவர்களை அமைதியடைவதற்கான உதவி அளியுங்கள். ஆகையால் மேலும் விசேஷமான நேரத்தை ஒதுக்கி அமைதியின் உதவி (தானம்) கொடுங்கள் -இது தான் பிராமண ஆத்மாக்களாகிய உங்களுடைய கடமை. நல்லது.

அனைத்து நினைவு சொரூபமான சிரேஷ்ட ஆத்மாக்களுக்கு சதா பாபாவிற்குச் சமமாக ஆவதற்கான லட்சியம் மற்றும் லட்சணத்தை தாரணை செய்யக்கூடிய ஆத்மாக்களுக்கு, சதா தன்னை பாபாவுடன் அனுபவம் செய்யக்கூடிய அருகாமையிலுள்ள அத்மாக்களுக்கு, சதா எதுவும் புதிதல்ல என்ற பாடத்தை எளிதாக சொரூபத்தில் கொண்டு வரக்கூடிய, சதா உலகத்திற்கு நன்மை செய்யக்கூடியவராகி உலகத்திலுள்ள ஆத்மாக்களுக்கு உதவி தரக்கூடிய -அதுபோல சதா வெற்றி ரத்தினங்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்தே.

பார்டிகளுடன் அவ்யக்த பாப்தாதாவின் சந்திப்பு: தாதிகளுடன்: முதன்மையான பிராமணர்களின் மாலை பிரம்மாபாபாவுடன் முதல் பிராமணர்கள் தான் நிமித்தமாகி இருக்கிறீர்கள் அல்லவா. ஆதி

பிராமணர்களின் மிகப் பெரிய மகத்துவம் இருக்கிறது. ஸ்தாபனை பாலணை மற்றும் மாற்றம் செய்வது, விநாசம் என்ற வார்த்தை கொஞ்சம் அதிகாரத்தன்மையாக தெரிவதால், ஸ்தாபனை, பாலனை மற்றும் உலகத்தை மாற்றம் செய்வதில் ஆதி பிராமணர்களுக்கு சிறப்பான நடிப்பு இருக்கிறது. சக்திகளுக்கான பூஜை மிகவும் விமர்சையாக (கோலாகலமாக) நடைபெறுகிறது. நிராகார் பாபா மற்றும் பிரம்மாபாபாவின் பூஜை இந்தளவு விமர்சையாக நடைபெறுவதில்லை. பிரம்மாவின் கோவிலும் கூட மிகவும் ரகசியமாகவே இருக்கிறது ஆனால் சக்தி சேனை பக்தியில் கூட பிரபலமாக இருக்கிறது. ஆகையால் இறுதி வரை மேடையின் மீது விசேஷமாக குழந்தைகளுக்கு நடிப்பு இருக்கிறது. பிரம்மாபாபாவிற்கும் கூட குப்தமான நடிப்பு இருக்கிறது. அவ்யக்த ரூபம் அதாவது குப்தமானதாக இருக்கிறது. பிராமணர்களுக்கு உருவாக்குகிறார் மேலும் பிரம்மாபாபாவின் நடிப்பு கூட குப்தமாக இருக்கிறது. சரஸ்வதிக்கு (மம்மாவிற்கு) கூட குப்தமாக காட்டப்படுகிறது, ஏனெனில் அவருக்கு நாடகத்தில் குப்தமான நடிப்பு நடந்து கொண்டிருக்கிறது. அனைத்து ஆதி பிராமண ஆத்மாக்களுமே ஒருவர் மற்றவரின் அருகாமையில் இருக்கிறீர்கள் மற்றும் சக்திசாலியாகவும் இருக்கிறீர்கள். உடல் கூட பலவீனமாக இல்லை, சக்திசாலியாகத் தான் இருக்கிறது. (தாதி ஜானகியிடம்) இவரோ இடையில் ஒய்வு கொடுப்பதற்கான சாதனமாக இருக்கிறார். மற்றபடி வேறு யாருமில்லை. அதுபோல யாரும் ஓய்வு எடுப்பதில்லை. ஓய்வு எடுப்பதற்கு ஏதாவது காரணம் தேவைப்படுகிறது. அனைத்து தாதிகளிடமும் அன்பு இருக்கிறது அல்லவா. பாபாவின் கூடவே நிமித்தமான ஆதி பிராமணர்களிடமும் கூட அன்பு இருக்கிறது. எனவே உங்கள் அனைவரின் அன்பான ஆசீர்வாதங்கள், சுப பாவனை ஆதி பிராமண ஆத்மாக்களை (தாதிஜி போன்றவர்களை) ஆரோக்கியமாக வைக்கிறது. நல்லது! அமைதியின் சேவைக்கான நடிப்பு நன்றாக கிடைத்திருக்கிறது. எத்தனை ஆத்மாக்கள் அசாந்தியில் இருக்கிறார்கள், எத்தனை பேர் பிராத்தனை செய்து கொண்டேயிருக்கிறார்கள். அவர்களுக்கு ஏதாவது கொஞ்சமாவது அஞ்சலியை (ஆறுதல்) கொடுப்பீர்கள் தானே? தேவதைகளிடம் சென்று சக்தியை யாசிக்கிறார்கள் அல்லவா! எனவே சக்தியை கொடுப்பது விசேஷமான ஆத்மாக்களாகிய உங்களுடைய கடமையாக இருக்கிறதல்லவா? நாளுக்கு நாள் எங்கிருந்து அமைதியின் கிரணங்கள்

வந்து கொண்டிருக்கிறது என்று அனுபவம் செய்வார்கள், பிறகு தேடுவார்கள், அனைவருடைய பார்வை பாரதத்தின் பூமி மீது வரும். நல்லது!

**குரூப்-1**: நிச்சய புத்தி வெற்றியடைந்த ஆத்மாக்களாக இருக்கிறீர்களா? அவ்வாறு அனுபவம் செய்கிறீர்களா? சதா நம்பிக்கை துண்டிக்கப்படாமல் இருக்கிறதா? அல்லது அவ்வப்பொழுது தடுமாற்றம் ஏற்படுகிறதா? நிச்சய புத்தியுடைவர்களின் அடையாளம் -அவர்கள் ஒவ்வொரு காரியத்திலும், நடைமுறையிலும், சேவையாக இருந்தாலும், ஆனால் ஒவ்வொரு காரியத்திலும் வெற்றியின் அனுபவம் செய்வார்கள். சாதாரண செயலாக இருந்தாலும், வெற்றியின் அதிகாரம் அவசியம் கிடைக்கிறது, ஏனெனில் பிராமண வாழ்க்கையின் சிறப்பு வெற்றி நமது பிறப்புரிமையாகும். எந்த வித காரியத்திலும் நாம் மனமுடைந்து போவதில்லை, ஏனெனில் வெற்றி நமது பிறப்புரிமை என்ற நம்பிக்கை இருக்கிறது. எனவே இந்தளவு அதிகாரத்தின் நஷா இருக்கிறதா? யாருக்கு கடவுளே உதவியாளராக இருக்கிறாரோ, அவர்களுக்கு வெற்றி கிடைக்காமல் யாருக்கு கிடைக்கும். எங்கு கடவுள் இருக்கிறாரோ, அங்கு வெற்றி கிடைக்கும் என்று போன கல்பத்தின் நினைவுச்சின்னமாக காட்டப்படுகிறது. 5-பாண்டவர்களை காட்டியிருக்கிறார்கள் ஆனால் வெற்றி ஏன் ஏற்பட்டது? பகவானின் துணை இருக்கிறது. எனவே போன கல்பத்தை போன்றே நினைவுச்சின்னத்தில் வெற்றியாளராகி இருக்கிறார்கள், இப்பொழுதும் கூட வெற்றி கிடைக்குமல்லவா? இது நடக்குமா, நடக்காதா, வெற்றி கிடைக்குமா அல்லது கிடைக்காதா, நடக்குமா... போன்ற எண்ணம் ஒருபொழுதும் வரக்கூடாது, இந்த கேள்வியே வராது. ஒருபொழுதும் பாபாவின் கூடவே இருப்பவர்களுக்கு தோல்வி ஏற்பட முடியாது. இது ஒவ்வொரு கல்பத்திலும் நிச்சயிக்கப்பட்டிருக்கிறது. இந்த எதிர்காலத்தை யாராலும் தடை போட முடியாது. இந்தளவு உறுதியான நம்பிக்கையினால்தான் சதா முன்னேற்றம் ஏற்பட்டுக் கொண்டிருக்கும். எனவே சதா வெற்றியின் குஷியில் நடனமாடிக் கொண்டேயிருப்பார்கள்.

2. எப்பொழுதும் தன்னை பாக்கியத்தை அளிக்கும் வள்ளலின் பாக்கியசாலி குழந்தை என அனுபவம் செய்கிறீர்களா? பல மடங்கு

பாக்கியசாலியாக இருக்கிறீர்களா அல்லது சௌபாக்கியசாலியாக (நூறு மடங்கு) இருக்கிறீர்களா? யாருக்கு இந்தளவு சிரேஷ்ட பாக்கியம் இருக்கிறதோ, அவர்கள் சதா புன்முறுவலுடன் இருப்பார்கள். ஏனெனில் பாக்கியசாலி ஆத்மாவிற்கு எந்த விதத்திலும் இல்லை என்பதே இல்லை. எனவே எங்கு அனைத்து பிராப்திகளும் இருக்கிறதோ, அங்கு எப்பொழுதும் மகிழ்ச்சி இருக்கும். ஒரு சிலருக்கு குறுகிய காலத்தின் லாட்டரி கிடைக்கிறது என்றால் ஏதோ கிடைத்திருக்கிறது என்று அவர்களின் முகத்தில் தெரிய வருகிறது. யாருக்கு பல மடங்கு பாக்கியம் கிடைக்கிறதோ அவர்கள் எப்படி இருப்பார்கள்? எப்பொழுதுமே மகிழ்ச்சியாக இருப்பார்கள். யாராவது நம்முடைய மகிழ்ச்சியை பார்த்து கேட்பார்கள், உங்களுக்கு என்ன கிடைத்தது? எந்தளவு முயற்சியில் முன்னேறிக் கொண்டே செல்வீர்களோ, அந்தளவு நீங்கள் பேச வேண்டிய அவசியம் ஏற்படாது. இவர்களுக்கு ஏதாவது கிடைத்திருக்கிறது என்று உங்களுடைய முகத்தைப் பார்த்து சொல்வார்கள், ஏனெனில் முகம் என்பது கண்ணாடியாக (பிரதிப்பலிக்கிறது) இருக்கிறது. எந்த பொருள் எப்படி இருக்கிறதோ, அப்படியே கண்ணாடி பிரதிபலிக்கிறது. எனவே உங்களுடைய முகம் கண்ணாடியின் வேலையை செய்கிறது. பல ஆத்மாக்களிடமிருந்து கிடைக்கும் செய்தியை அமர்ந்து கேட்குமளவிற்கு உங்களுக்கு நேரம் எங்கிருக்கிறது? நேரம் கூட மிகவும் நெருடலாக இருக்கிறது. கேட்பதற்கான நேரம் கூட கிடைப்பதில்லை. எனவே எப்படி சேவை செய்வீர்கள்? தனது முகத்தின் மூலம். மியூசியத்தில் உள்ள ஸித்திரங்கள் சேவை செய்வதைப் போன்று. ஸித்திரங்களைப் பார்த்து தாக்கம் ஏற்படுகிறது அல்லவா! எனவே உங்களுடைய சைத்தன்யமான ஸித்திரம் (முகம்) சேவைக்கு நிமித்தமாகி விடுகிறது -அதற்கு தயாராக ஸித்திரம் (முகம்) இருக்கிறதல்லவா? இத்தனை சைதன்யமான ஸித்திரங்கள் தயாராகி விட்டால் உங்கள் குரல் (செய்தி பரவும்) ஒலிக்கும். எந்த காரியம் செய்து கொண்டிருந்தாலும் நடந்தாலும், உட்கார்ந்தாலும் நாம் சைதன்யமான ஸித்திரமாக இருக்கிறேன் என்ற நினைவில் இருங்கள். முழு உலகத்திலுள்ள ஆத்மாக்களின் பார்வை நம் பக்கம் இருக்கும். சைதன்யமான ஸித்திரத்தில் அனைவரையும் ஈர்க்கக்கூடிய விஷயம் என்னவாக இருக்கிறது? சதா குஷியாக இருப்பார்கள். எனவே சதா குஷியாக இருக்கிறீர்களா அல்லது அவ்வப்பொழுது குழப்பத்தில் வந்துவிடுகிறீர்களா? இல்லையென்றால்

அங்கு (அவரவர் இருக்கும் இடம்) சென்று சொல்வீர்களா இப்படி நடந்துவிட்டது ஆகையால் குஷி குறைந்து விட்டது. என்ன நடந்தாலும், குஷி போகக்கூடாது. அதுபோல உறுதியாக இருக்கிறீர்களா? ஒருவேளை பெரிய பேப்பராக (பிரச்சனை) வந்தாலும் கூட தேர்ச்சி பெற்றுவிடுவீர்களா? யாரெல்லாம் சரி தேர்ச்சி பெறுவோம் என்று சொல்லும் அனைவரின் புகைப்படத்தையும் படம் பிடிக்கிறார். அந்த சமயத்தில் சொல்லி விட்டோம் என்று சொல்லக் கூடாது. அடுத்தாக சர்வ சக்திவானுக்கு முன்னால் எதுவும் பெரிய விஷயமில்லை. நமக்கு வெற்றி நிச்சயிக்கப்பட்டிருக்கிறது என்ற நம்பிக்கை உங்களிடம் இருக்கிறது. ஆகையால் எதுவும் பெரிய விஷயமில்லை. எவரிடம் அனைத்து சக்திகளின் பொக்கிஷம் இருக்கிறதென்றால், எந்த சக்திக்கு கட்டளை கொடுக்கிறீர்களோ, அந்த சக்தி உதவியாளராக வரும். கட்டளையை மட்டும் கொடுக்கும் தைரியசாலி வேண்டும். எனவே கட்டளை கொடுக்க வருகிறதா அல்லது கட்டளைப்படி நடக்க மட்டும்தான் வருகிறதா? ஒருபொழுதும் மாயாவின் கட்டளைப்படி நடப்பதில்லை தானே? ஏதாவது விஷயம் வருகிறது முடிந்து விடுகிறது, பிறகு யோசிக்கிறீர்கள் -அப்படி செய்திருந்தால் நன்றாக இருந்திருக்கும் என்று இல்லை தானே? அப்படி இல்லை அல்லவா? சமயத்தில் அனைத்து சக்திகளும் காரியத்திற்கு வருகிறதா அல்லது சிறிது நேரத்திற்கு பிறகு தான் வருகிறதா? ஒருவேளை மாஸ்டர் சர்வ சக்திவான் என்ற இருக்கையில் அமர்ந்தீர்கள் என்றால் சக்திகள் கட்டளைக்கு கீழ்படிவதில்லை என்பது கிடையாது. ஒருவேளை இருக்கையில் இருந்து கீழே வந்து விடுகிறீர்கள் என்றால் பிறகு கட்டளை செய்தீர்கள் என்றால் அது கட்டளைக்கு கீழ் படியாது. லௌகீகத்தில் கூட யாராவது நாற்காலியில் (பதவியில்) இல்லையென்றால் அவர்களுடைய கட்டளையை ஏற்றுக்கொள்வதில்லை. ஒருவேளை ஏதாவது சக்தி கட்டளைக்கு கீழ்படிவதில்லை என்றால் அவசியம் பதவியின் இருக்கையிலிருந்து கீழே வந்துவிடுவார்கள். எனவே சதா மாஸ்டர் சர்வ சக்திவானின் இருக்கையில் அமர்ந்து கொள்ளுங்கள். சதா ஆடாத அசையாத நிலையில் இருங்கள். குழப்பத்தில் வர வேண்டாம். பாப்தாதா சொல்கிறார் உடலை விட்டாலும் குஷியை விடக் கூடாது. பணம் என்பது குஷிக்கு முன்னால் ஒன்றுமில்லை. யாரிடம் சூஷியின் பொக்கிஷம் இருக்கிறதோ அவர்களுக்கு முன்னால் எதுவும் பெரிய

விஷயமில்லை மேலும் பாப்தாதா சதா சகயோகி சேவாதாரி குழந்தைகளுக்கு துணையாக இருக்கிறார். குழந்தைகள் தந்தையுடன் இருப்பது என்ன பெரிய விஷயம்? ஆகையால் பயப்படுவதற்கு என்று எதுவுமில்லை. பாபா அமர்ந்திருக்கிறார், குழந்தைகளுக்கு என்ன கவலை இருக்கிறது. பாபா மிகப் பெரிய செல்வந்தராக இருக்கிறார். எப்படியாவது குழந்தைகளை பாலனை செய்ய வேண்டும் ஆகையால் கவலையற்ற மகாராஜா. துக்கதாமத்தில் சுகதாமத்தை ஸ்தாபனை செய்து கொண்டிருக்கிறார், அதனால் துக்கதாமத்தில் குழப்பம் இருக்கத்தான் செய்யும். வெப்பம் நிறைந்த காலத்தில் வெப்பம் இருக்குமல்லவா ஆனால் பாபாவின் குழந்தைகள் சதா பாதுகாப்பாக இருக்கிறார்கள், ஏனெனில் பாபாவின் துணை இருக்கிறது.

அனைத்து குழந்தைகளுக்காக பாப்தாதாவின் செய்தி: அனைத்து தபஸ்வி குழந்தைகளுக்கு அன்பு நினைவுகள். குழந்தைகளே பாருங்கள், காலத்தின் செய்திகளை கேட்டாலும் கூட உயர்ந்ததிலும் உயர்ந்த சாட்சி நிலை என்ற ஆசனம் மற்றும் கவலையற்ற மகாராஜா என்ற சிம்மாசனத்தில் அமர்ந்து அனைத்து விளையாட்டையும் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள் அல்லவா? இந்த பிராமண வாழ்க்கையில் பயம் என்பது கனவில் கூட எண்ணம் வரக் கூடாது. இந்த தபஸ்யா ஆண்டில் நிரந்தரமான ஆர்வம் என்ற அக்னியில் எல்லைக்கு அப்பாற்பட்ட வைராக்கிய உள்ளுணர்வு ஒளி வீசும் எரிமலையாக இருக்க வேண்டும். நீங்கள் பாபாவிற்குச் சமமாக முழுமை ஆவதற்கான எண்ணம் இருக்கிறது அதாவது வெற்றியின் கொடியை அசைந்து பறக்க வைப்பதற்கான திட்டத்தை உருவாக்க வேண்டும், எனவே மறுபக்கம் முடிவிற்கான குழப்பமும்கூட கூடவே நிச்சயிக்கப்பட்டிருக்கிறது அல்லவா? ரிகர்சல் (rehearsal ஒத்திகை) கூட நாடகத்தின் ரீலை (reel பதிவை) முடிப்பதற்கான சாதன மாக இருக்கிறது, ஆகையால் எதுவும் புதிதல்ல. நேரத்தின் சூழ்நிலைக்கு தகுந்தாற் போல் வந்து போவதில் மற்றும் ஏதாவது பொருட்களை பெறுவதில் ஈர்ப்பு (இழுக்கிறது) ஏற்படுகிறது. மனதின் எண்ணங்களின் ஈர்ப்பிற்கு வரவேண்டாம். எங்கு எந்த சூழ்நிலையில் இருக்கிறீர்களோ, மனதிற்கு பிடித்த இனிப்பை (சூழ்நிலைகளை ஏற்றுக் கொள்ளுங்கள்) சாப்பிட்டுக் கொண்டேயிருங்கள். மகிழ்ச்சியாக இருங்கள், ஃபரிஸ்தாக்களோடு சேர்ந்து பறங்கள். கூடவே இந்த சமயத்தில் ஒவ்வொரு சென்டரிலும்

விசேஷமாக தபஸ்யாவின் நிகழ்ச்சி நடைபெறட்டும். யார் எந்தளவு அதிகமான நேரத்தை ஒதுக்க முடியுமோ, அந்தளவு அமைதிக்கான உதவியைக் கொடுங்கள். நல்லது. ஓம்சாந்தி.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## 13.02.1991 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# உலக மாற்றத்தில் தீவிரத்தன்மையைக் கொண்டு வருவதற்கான சாதனம் -ஒருமுகப்படுத்தும் சக்தி மற்றும் ஒரே மாதிரியான நிலை!

இன்று தூர தேச தந்தை தனது தூர தேச மற்றும் உள்நாட்டுக் குழந்தைகளுக்கு சந்திப்பிற்கான வாழ்த்துக்களைத் தர வந்துள்ளார். தந்தையும் தூர தேசத்திலிருந்து வந்துள்ளார். குழந்தைகள் தந்தைக்கு வாழ்த்து சொல்ல வந்துள்ளனர் மற்றும் தந்தை குழந்தைகளுக்கு கோடி மடங்கு வாழ்த்துக்களைத் தருகிறார். கொண்டாடுவது என்றால் சமம் ஆவது. உலகினர் வெறுமனே கொண்டாடுகின்றனர் ஆனால் தந்தை கொண்டாடுகிறார் என்றால் சமம் ஆக்குகிறார். எல்லா குழந்தைகளும், சாகார ரூபத்தில் எதிரில் இருந்தாலும், சூட்சும ரூபத்தில் எதிரில் இருந்தாலும், எல்லா குழந்தைகளும் உலகில் ஒவ்வொரு மூலையிலும் தந்தையின் வைரத்திற்குச் சமமான ஜெயந்தியைக் கொண்டாடிக் கொண்டிருக்கின்றனர். பாப்தாதா சூட்சும ரூபத்தில் எதிரில் குழந்தைகளுக்கும் கூட வைரத்திற்குச் சமமான ஜெயந்தியின் வைரத்திற்குச் சமமான கோடனுகோடி வாழ்த்துக்களைத் தந்து கொண்டிருக்கிறார். இந்த மகான் அவதாரம் செய்த ஜெயந்தியை குழந்தைகள் நீங்கள் அனைவரும் கொண்டாடியபடியே தன்னையும் வைரத்திற்குச் சமமாக ஆக்கி விட்டீர்கள். இதற்குத்தான் கூறப்படுகிறது கொண்டாடுவது, என்றால் ஆக்குவது! ஒவ்வொரு குழந்தையின் நெற்றியில் கோடானுகோடி பாக்கியசாலி ஆவதற்கான நட்சத்திரம் ஜொலித்துக் கொண்டிருக்கிறது எனில் கொண்டாடி கொண்டாடியே சதா காலத்திற்கும் பாக்கியசாலி ஆகி விட்டீர்கள். இத்தகைய அலௌகீக ஜெயந்தி முழு கல்பத்திலும் ஒருவர்கூட கொண்டாடுவதில்லை. மகான் ஆத்மாக்களுக்கும் ஜெயந்தி கொண்டாடுகின்றனர் ஆனால் அந்த மகான்

ஆத்மாக்கள் கொண்டாடுபவர்களை மகான் ஆக்குவது இல்லை. இந்த சங்கமத்தில் குழந்தைகள் நீங்கள் பரமாத்ம ஜெயந்தி கொண்டாடி, மகான் ஆகி விடுகிறீர்கள். சிரேஷ்டத்திலும் சிரேஷ்ட ஆத்மாக்கள் ஆகி விடுகிறீர்கள். ஜென்ம ஜென்மத்திற்கும் வைரம் மற்றும் ரத்தினங்களால் விளையாடிக் கொண்டே இருக்குமளவு அத்தகைய வைரத்திற்குச் சமமான வாழ்க்கையை உருவாக்குகிறீர்கள். இன்றைய ஞாபகார்த்த நாள் தந்தைக்கு மட்டுமில்லை ஆனால் குழந்தைகளுக்கும் கூட பிறந்த நாள் ஆகும், ஏனென்றால் எப்போது தந்தை அவதரிக்கின்றாரோ அப்போது தந்தையுடன் கூடவே தாதா பிரம்மாவும் கூட மாற்றமடைந்த ஆத்மாவாக அவதரிக்கின்றார். தந்தை மற்றும் தாதா இருவருமே சேர்ந்தே அவதரிக்கின்றனர். பிராமணர்கள் இன்றி பாப்தாதாவால் ஸ்தாபனையின் யக்ஞத்தைப் படைக்க முடியாது ஆதலால் பாப்தாதா மற்றும் பிராமணக் குழந்தைகள் சேர்ந்தே பிறக்கிறீர்கள். எனில் யாருடைய பிறந்த நாள் எனக் கூறுவோம் -உங்களுடையதா அல்லது தந்தையுடையதா? உங்களுடையதும்தானே! எனவே நீங்கள் தந்தைக்கு வாழ்த்து அளிக்கிறீர்கள் மற்றும் தந்தை உங்களுக்கு வாழ்த்து அளிக்கின்றார்.

சிவ ஜெயந்தி என்றால் பரமாத்ம ஜெயந்தியை மகா சிவராத்திரி என ஏன் கூறுகிறார்கள்? சிவ ராத்திரி என்று மட்டும் சொல்வதில்லை ஆனால் மகா சிவராத்திரி என்கின்றனர் ஏனென்றால் இந்த உலகத்தைத் தூய்மையின் விரதத்தினால் உன்னதமாக்குவோம் என இந்த அவதரித்த நாளில் சிவ தந்தை, தாதா பிரம்மா மற்றும் பிராமணர்கள் உன்னதமான சங்கல்பத்தின் விரதம் எடுத்தனர். விசேஷமாக ஆதி தேவ் பிரம்மா தனது நிமித்த பிராமண ஆதி குழந்தைகளுடன் இந்த உன்னதமான விரதம் எடுப்பதற்காக நிமித்தம் ஆனார் எனில் மகான் ஆவதற்கான விரதம் எடுப்பதற்கான தெய்வீக நாள் இது. மேலும் பிராமணக் குழந்தைகள் நீங்கள் இந்த மகான் விரதத்தை எடுத்திருந்தீர்கள் ஆதலால் இதன் ஞாபகார்த்த ரூபத்தில் இன்று வரையிலும் பக்தர்கள் விரதம் இருக்கின்றனர். இந்த உன்னதமான ஜெயந்தி உறுதிமொழி எடுப்பதற்கான ஜெயந்தி. ஒருபக்கம் பிரத்யக்ஷம் ஆவதற்கான ஜெயந்தி, மறுபக்கம் உறுதிமொழி எடுப்பதற்கான ஜெயந்தி. ஆரம்பக் காலத்தில் உங்களுள் யார் நிமித்தம் ஆனார்களோ, ஆதி தேவனுடன் கூடவே உருவான ஆதி ரத்தினங்களுடைய உறுதிமொழியின் பிரத்யக்ஷ பலன்,

நீங்கள் அனைவரும் வெளிப்பட்டுள்ளீர்கள். பாருங்கள் எங்கெங்கோ மூலைமுடுக்குகளுக்குச் சென்று விட்டனர், ஆனால் தந்தை சேற்றில் மாட்டிக் கொண்டிருந்த தனது வைரத்திற்குச் சமமான குழந்தைகளைத் தேடி, கண்டெடுத்து விட்டாரல்லவா! இப்போது உலகின் மூலைமுடுக்குகளில் புனிதமான மற்றும் மிக உயர்ந்த (holiest and highest) வைரங்கள் ஜொலித்துக் கொண்டிருக்கின்றன எனில் இது பரமாத்ம ஜெயந்தியின் விரதம் மற்றும் உறுதிமொழியின் பலன் ஆகும்! குழந்தைகள் நீங்கள் அனைவரும் நாலா பக்கமும் சிவ தந்தையின் கொடியின் முன்பாக உறுதிமொழி எடுக்கிறீர்களா; எனில் இந்த ஆரம்ப கால வழக்கத்தை இது வரை நீங்களும் செய்து கொண்டிருக்கிறீர்கள். இது பரமாத்ம ஜெயந்தி, அதை சிவராத்திரி எனவும் கூறுகின்றனர். ராத்திரி என்றால் காரிருள். காரிருளில் எந்த ஒரு மனிதனோ, பொருளோ எப்படி உள்ளதோ அப்படியேத் தெரியாது; இருந்தாலும்கூட கண்ணுக்குத் தெரியாது. எப்போது தந்தை அவதரிக்கிறார் என்றால் நீங்களும் யாராக, எவ்வாறு, எப்படி இருக்கிறீர்களோ அது போலவே தன்னைத்தானே பார்க்க முடியாமல் இருந்தீர்கள், தந்தையையும் கூட பார்த்தாலும் அடையாளம் கண்டு கொள்ள முடியாமல் இருந்தீர்கள். நான் ஆத்மா ஆவேன், இது இருந்தும்கூட ஞானம் மேலும் அனுபவத்தின் கண் மூலம் பார்க்க முடியாமல் இருந்தீர்கள். கண் இருந்தும்கூட காரிருளில் இருந்தீர்கள். கண் சரியாக வேலை செய்யவில்லை, தெளிவாகத் தெரியவில்லை எனில் நீங்களும்கூட காரிருளில் இருந்தீர்களா. தன்னைக்கூட பார்க்க முடியாமல் இருந்தீர்கள். எனவே தந்தை முதலில் இந்த காரிருளை அழிக்கிறார் எனில் சிவராத்திரி என்றால் காரிருளை அழித்து, உண்மையின் ஒளியைப் பரவச் செய்வதாகும். ஆதலால் சிவராத்திரி என சொல்லி கொண்டாடுகின்றனர். பக்தி மார்க்கத்தின் முறைகளும்கூட உங்களது சரியான முறைகளின் ஞாபகார்த்தம்தான். ஒருபக்கம் பக்தர்களின் முறை மற்றும் மறுபக்கம் குழந்தைகளின் சம்பூர்ண முறை. இரண்டையும் பார்த்து தந்தை மகிழ்ச்சி அடைகிறார். நமது பக்தர்கள் பின்பற்றுவதில் எவ்வளவு புத்திசாலிகள் என நீங்களும்கூட மகிழ்ச்சி அடைகிறீர்களா. இவை அனைத்தும் தந்தை மற்றும் உங்களுடைய பிந்து ரூபத்தின் அதிசயம். சிவபாபாவுடன் சேர்த்து சாலிகிராமங்களுக்கும் பூஜை நடக்கிறது. நீங்கள் அனைவரும் பிந்து சொரூபத்தின் மகத்துவம் தெரிந்தவர்கள். ஆதலால் இன்று வரை

பக்தியிலும் சிவன் அதாவது பிந்து ரூபத்திற்கு மகத்துவம் உள்ளது. அவர்களுக்கு பிந்து ரூபம் மட்டுமே தெரியும், உண்மையானது தெரியாது. உங்கள் ரூபத்தின் மூலம் தெரியும்; ஆனால் நீங்களோ தந்தையை பிந்து ரூபத்தில் மட்டுமல்லாது, ஆனால் பிந்துவுடன் சேர்த்து சர்வ கஜானாக்களின் சிந்துவை (கடலை), அதாவது பிந்துவுடன் சிந்து ரூபத்தையும் தெரிந்துள்ளீர்கள். இரண்டு ரூபத்தின் மூலமும் போக வேண்டும்தானே? சிந்து ரூபத்தைத் தெரிந்துள்ளதால் நீங்களும்கூட மாஸ்டர் சிந்து ஆகி விட்டீர்கள். உங்களுக்குள் எத்தனை கஜானாக்கள் நிரம்பி உள்ளது -கணக்கு எடுக்க முடியுமா? எண்ணற்ற, எல்லையற்ற மற்றும் அழியாத கஜானாக்கள் உள்ளன.

தபஸ்யா வருடத்தில் என்ன செய்யப் போகிறீர்கள்? தபஸ்யா என்றால் என்ன சங்கல்பம் செய்வீர்களோ அது உறுதியானது; தபஸ்யா என்றால் -ஒருமுகப்படுத்துதல் மற்றும் உறுதித்தன்மை! இப்போதும்கூட யோகி வாழ்க்கையில் தான் உள்ளீர்கள். நீங்கள் அனைவரும் யோகி வாழ்க்கைக்காரர்களா? இல்லை, 8-மணி நேரம், 6-மணி நேரம் அல்லது கொஞ்ச நேரம் யோகத்தில் இருப்பவர்களா? யோகி வாழ்க்கையோ உள்ளது, பின்பு முக்கியமாக தபஸ்யா வருஷம் என ஏன் வைத்துள்ளார்கள்? பாப்தாதா எல்லா குழந்தைகளையும் யோகி வாழ்க்கைக்கார யோகிகளை ஆத்மாவின் ரூபத்தில் பார்க்கின்றார் மற்றும் இருப்பதும் யோகி வாழ்க்கையில்தான். அந்த வாழ்க்கையோ முடிந்து விட்டது. அலைந்து கொண்டிருக்கும் போகி வாழ்க்கை மூலம் களைப்படைந்து, நம்பிக்கையிழந்து, சிந்தித்து புரிந்து கொண்டு யோகி ஆகி இருக்கிறீர்கள். சிந்தித்து புரிந்து கொண்டு யோகி ஆகி இருக்கிறீர்களா அல்லது யாராவது சொல்லி ஆனீர்களா? அனுபவம் செய்துதான் ஆனீர்களா அல்லது அனுபவத்தைக் கேட்டு ஆனீர்களா? அனுபவம் செய்து யோகி ஆனீர்களா அல்லது வெறுமனே கேட்டது மற்றும் பார்த்ததில் நன்றாக இருந்தது என்றா? பார்த்து விட்டு ஒப்பந்தம் செய்தீர்களா அல்லது கேட்டதை வைத்து ஒப்பந்தம் செய்தீர்களா? எங்காவது யாராவது ஏமாற்றப்பட்டு வரவில்லைதானே? நல்ல விதமாக பார்த்தீர்களா? இப்போதும்கூட பாருங்கள். ஏதாவது மந்திரம் போடவில்லைதானே? மூன்று கண்களையும் திறந்து வைத்துதானே ஒப்பந்தம் செய்தீர்கள்? ஏனெனில் புத்தியும் கூட கண்தான்! இந்த (ஸ்தூல) இரண்டு கண்கள் மற்றும் புத்தியின் கண், மூன்றையும் திறந்து

வைத்துதான் ஒப்பந்தம் செய்தீர்கள், அனைவரும் உறுதியாக இருக்கிறீர்களா?

எல்லா குழந்தைகளும் மிக இனிமையாக ஆன்மீக உரையாடல் செய்கிறார்கள். கூறுகிறார்கள் -பாபா நாங்களோ உங்களுடையவர் மற்றும் வேறு எங்குமே செல்ல மாட்டோம். மற்றும் ஞானி-யோகி வாழ்க்கையும் மிகவும் நன்றாக உள்ளது ஆனால் கொஞ்சம் கொஞ்சம் ஏதாவது விஷயத்தில் பொறுத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. அந்த நேரத்தில் மனம் புத்தி குழம்பி இது எது வரை நடக்கும், எப்படி நடக்கும்,....? என்றாகி விடுகிறது. இடையிடையே என்ன குழப்பம் ஆகிறதோ -தன்னாலோ, சேவையிலோ, கூட இருப்பவராலோ -இந்த குழப்பம் நிரந்தரமாக வித்தியாசத்தில் கொண்டு வந்து விடுகிறது. எனில் பொறுமை சக்தியின் சதவிகிதம் குறைந்து விடுகிறது. உறுதியாக இருக்கிறீர்கள் ஆனால் சில சமயம் உறுதியையும் கூட இந்த விஷயங்கள் ஆட்டி விடுகின்றன. எனில் தபஸ்யா வருஷம் என்றால் சர்வ குணங்களில், சர்வ சக்திகளில், சர்வ சம்பந்தங்களில், சர்வ சுபாவ-சமஸ்காரங்களில் நூறு சதவீதம் தேர்ச்சி பெற வேண்டும். இப்போது தேர்ச்சி பெற்று விட்டீர்கள் ஆனால் முழுத் தேர்ச்சி அடையவில்லை. ஒன்று தேர்ச்சி, இன்னொன்று முழுத் தேர்ச்சி மற்றும் மூன்றாவது மதிப்புடன் தேர்ச்சி பெறுவது! எனில் தபஸ்யா வருஷத்தில் ஒருவேளை கொஞ்சமாவது மதிப்புடன் தேர்ச்சி பெற்றால், முழுத் தேர்ச்சியோ அனைவரும் பெற முடியும். மற்றும் முழுத் தேர்ச்சி பெற மிக எளிய சாதனம் -எந்த பேப்பர் வந்தாலும் அது இந்த தபஸ்யா வருடத்திலும் வரும். அப்படியில்லை வராது என்பது, வரும் ஆனால் பேப்பர் என புரிந்து கொண்டு தேர்ச்சி பெறுங்கள். விஷயத்தை விஷயம் என நினைக்காதீர்கள், பேப்பர் என நினையுங்கள். பேப்பருடைய கேள்வியின் விஸ்தாரத்தில் செல்லாதீர்கள் -இது ஏன் வந்தது, எப்படி வந்தது, யார் செய்தது? தேர்ச்சி பெறுவதற்காக சிந்தித்து பேப்பரைக் கடந்து செல்லுங்கள். எனில் பேப்பர் என புரிந்து கொண்டு தேர்ச்சி பெறுங்கள். இது என்ன இப்படி நடந்தது, இப்படியும் நடக்குமா அல்லது தனது பலவீனத்தினால் கூட இப்படி நினைக்காதீர்கள் இதுவோ நடக்கத்தான் செய்யும் என. தனக்காக சிந்திக்கிறீர்கள் -இதுவோ நடக்கத்தான் செய்கிறது, இந்தளவாவது நடந்ததே மற்றும் பிறருக்காக இவர் என்ன செய்தார், என்ன செய்தார் என சிந்திக்கிறீர்கள். இந்த எல்லா

விஷயங்களையும் பேப்பர் என புரிந்து கொண்டு முழுத் தேர்ச்சி பெற லட்சியம் வைத்து தேர்ச்சி பெறுங்கள். தேர்ச்சி பெற்றாக வேண்டும், கடந்தாக வேண்டும் மற்றும் தந்தையுடன் கூடவே இருக்க வேண்டும் என்றால் முழுத் தேர்ச்சி பெற வேண்டும். புரிந்ததா.

பெரும்பான்மையோர் நிறைய விஷயங்களில் நல்ல விதமாக தேர்ச்சி அடைந்துள்ளீர்கள், ஆனால் தனது பழைய சுபாவ சமஸ்காரம் அவ்வப்போது புதிய வாழ்க்கையில் தலைதூக்கி விடுகிறது. தனது அல்லது பிறரது சுபாவ சமஸ்காரமும் சண்டையிடுகிறது. தனது பலவீனமான சமஸ்காரம் பிறரது சம்ஸ்காரத்துடன் மோதுகிறது. இந்த பலகீனம் இப்போது விசேஷ லட்சியத்தை அடைவதில் தடையை ஏற்படுத்துகிறது. முழு தேர்ச்சிக்குப் (full pass) பதிலாக தேர்ச்சி மதிப்பெண் (pass mark) பெற்றுத் தருகிறது. தனது சுபாவ சமஸ்காரத்தை சங்கல்பத்திலோ, செயலிலோ கொண்டு வராதீர்கள், பிறரது சுபாவ சமஸ்காரத்துடன் மோதாதீர்கள். இரண்டிலுமே பொறுமை சக்தி மற்றும் எதிர்கொள்ளும் சக்தியின் அவசியமாகிறது. இது முழு தேர்ச்சி பெற அருகில் வர விடுவதில்லை மற்றும் இந்த காரணத்தினால் அலட்சியமும் சோம்பலும் வருகின்றன. தபஸ்யா வருடத்தில் மனம் புத்தியை ஒருமுகப்படுத்த வேண்டும், என்றால் ஒரே எண்ணத்தில் இருக்க வேண்டும் -நான் முழு தேர்ச்சி பெற்றே ஆக வேண்டும். ஒருவேளை மனம் புத்தி கொஞ்சமாவது திசைதிரும்பியது என்றால் உறுதியுடன் மீண்டும் அதை ஒருமுகப்படுத்துங்கள். செய்தேத் தீரணும், அடைந்தேத் தீரணும்! இந்த எல்லா பலவீனங்களையும் தபஸ்யாவின் யோக அக்னியில் எரித்து விடுங்கள். யோக அக்னி கொழுந்து விட்டு எரிகின்றதுதானே? ஈடுபாட்டின் அக்னியில் இப்பவும் கூட இருக்கிறீர்கள் ஆனால் அவ்வப்போது அக்னி கொஞ்சம் சதவீதத்தில் குறைந்து விடுகிறது. அணைந்து விடுவதில்லை, குறைந்து விடுகிறது. நன்றாக எரியும் அக்னியில் எந்த ஒரு பொருளைப் போட்டாலும் மாற்றமடையும் அல்லது சாம்பலாகி விடும். மாற்றமடைய, சாம்பலாக்க, இரண்டிற்குமே நன்றாக எரியும் அக்னி வேண்டும். யோகமும் அக்னி தான்! ஈடுபாட்டின் அக்னியும் எரிந்து கொண்டிருக்கிறது ஆனால் சதா நன்றாக எரிய வேண்டும். சில சமயம் நன்றாக, சில சமயம் குறையக் கூடாது. எப்படி இங்கு ஸ்தூல அக்னியிலும் ஒருவேளை ஏதாவது ஒரு பொருளை நன்றாக மற்றும் தக்க நேரத்தில் தயார் செய்ய விரும்புகிறீர்கள்

என்றால் அக்னியை அந்த ரூபத்தில் வைப்பீர்கள் அதனால் அந்தப் பொருள் சரியான நேரத்தில் நல்ல விதமாகத் தயார் ஆகி விடுகிறது. ஒருவேளை நடுவில் அக்னி அணைந்து விட்டது என்றால் தக்க சமயத்தில் அது தயாராகுமா? எனில் உங்களுடைய யோக அக்னியும் கூட இடையிடையே தணிந்து விடுகிறது என்றால் சம்பன்னம் ஆவீர்கள் ஆனால் இறுதியில் ஆவீர்கள். இறுதியில் சம்பன்னம் ஆகுபவர்களுக்கு சீக்கிரமாகவும், முதலாவதாகவும் (fast and first) ராஜ்ய பாக்கியத்தின் அதிகாரம் கிடைக்க முடியாது. உங்கள் அனைவரது லட்சியமும் முதல் ஜென்மத்தில் ராஜ்ய பாக்கியம் அடைவதா அல்லது இரண்டாவது, மூன்றாவது ஜென்மத்தில் வருவீர்களா? முதல் ஜென்மத்தில்தான் வர வேண்டும் அல்லவா?

தபஸ்யா வருடம் என்றால் விரைவாக முயற்சி செய்து முதல் ஜென்மத்தில் முதல் நம்பர் ஆத்மாக்களுடன் ராஜ்யத்தில் வருவது. வீட்டிற்கும் சேர்ந்தே செல்ல வேண்டும்தானே? பின்பு ராஜ்யத்திலும்கூட பிரம்மா தந்தை கூடவே வர வேண்டும்தானே. என்றால் தபஸ்யா வருஷம் ஏன் வைக்கப்பட்டது என புரிந்ததா? ஒருமுகப்படுத்தும் சக்தியை அதிகரியுங்கள். இப்போதும்கூட விரும்பாவிடினும்கூட வீணானவை ஓடிக் கொண்டுதான் உள்ளது. சில சமயம் தூய்மையான உயர்ந்த எண்ணங்களை விட வீணானதின் பக்கம் அதிகம் பாராமாகி விடுகிறது. தபஸ்யா என்றால் வீண் எண்ணங்களை முடிப்பது, ஏனென்றால் இந்த முடிப்பதுதான் முழுமையைக் கொண்டு வரும். சமாப்தி செய்யாமல் சம்பூர்ணதா வராது! எனில் இன்று முதல் தபஸ்யா வருடம் ஆரம்பமாகிறது. ஊக்கம் உற்சாகத்திற்காக பாப்தாதா வாழ்த்துகள் அளிக்கின்றார். நான்கு பாடங்களிலும் முழு தேர்ச்சி பெறக்கூடிய மதிப்பெண்கள் எடுக்க வேண்டும். நானோ மூன்று பாடங்களில் சரியாக உள்ளேன், ஒரே ஒன்றில் தானே குறைவாக உள்ளேன் என்று இப்படி நினைக்காதீர்கள். முழு தேர்ச்சி பெறுவீர்களா? இல்லை, இருந்தாலும் தேர்ச்சியின் பட்டியலில் வருவீர்களா? முழு தேர்ச்சி என்றால் நான்கு பாடங்களிலும் முழு மதிப்பெண்கள் எடுப்பதாகும். சதா ஒவ்வொரு ஆத்மா குறித்தும் நன்மைக்கான பாவனை, அவர் உங்களுடைய ஸ்திதியை ஆடச் செய்ய முயற்சி செய்யட்டும் ஆனால் கெடுதல் செய்பவர் மீதும் கூட நன்மையின் பாவனை, நன்மையின் பார்வை, நன்மையின் உள்ளுணர்வு,

நன்மையின் செயல் இருக்கட்டும். நன்மை செய்யும் ஆத்மா! என இவரைத்தான் சொல்லப்படுகிறது. சிவன் என்பதன் அர்த்தமும் கல்யாணகாரிதானே? எனில் சிவ ஜெயந்தி என்றால் கல்யாணகாரி பாவனை! நன்மை செய்பவருக்கு நன்மை செய்வது என்பது அஞ்ஞானிகளும் கூட செய்கின்றனர். நல்லவரோடு நல்லவர் சேர்வது இதுவோ எல்லோருக்குமேத் தெரியும்; ஆனால் கெட்ட உள்ளுணர்வு உடையவருக்கும் தனது நன்மையான உள்ளுணர்வு மூலம் மாற்றம் செய்யுங்கள் அல்லது மன்னித்து விடுங்கள். மாற்றம் செய்ய முடியாவிட்டாலும் மன்னிக்க முடியும்தானே. மாஸ்டர் மன்னிக்கும் கடல்தானே நீங்கள்! எனில் உங்களுடைய மன்னிப்பு அந்த ஆத்மாவிற்கு ஒரு பாடமாக அமையும். இந்நாட்களில் பாடம் புகட்டினால் சிலர் புரிந்து கொள்கின்றனர், சிலர் புரிந்து கொள்வதில்லை. இப்படிச் செய்தால் அதுவே பாடமாகி விடும். மன்னித்தல் என்றால் சுப பாவனையின் ஆசீர்வாதங்களை அளித்தல், உதவி செய்தல். பாடம் புகட்டுவதற்கான நேரம் கூட இப்போது முடிந்து விட்டது. இப்போது அன்பைக் கொடுங்கள், மரியாதை கொடுங்கள், மன்னியுங்கள். சுப பாவனை வையுங்கள், சுப விருப்பம் வையுங்கள் -இதுவே பாடம் புகட்டுவதற்கான விதி! அந்த விதி இப்போது பழையதாகி விட்டது எனில் புதிய விதி வருகிறதுதானே? தபஸ்யா வருஷத்தில் இந்த புது விதி மூலம் எல்லோரையும் அருகில் கொண்டு வாருங்கள். கூறினோம்தானே, மாலை மணிகள் கொஞ்சம் தயாராகி உள்ளன ஆனால் மாலை தயாராகவில்லை என! நூலும் உள்ளது, மணிகளும் உள்ளன ஆனால் மணி மணிகளின் அருகில் இல்லை ஆதலால் மாலை தயாராகவில்லை! தங்களது முறைப்படி மணிகள் தயாராக உள்ளன ஆனால் குழுவில், அருகாமையில் தயாராகவில்லை. எனில் தபஸ்யா வருஷத்தில் தந்தைக்குச் சமமாக ஆக வேண்டும் ஆனால் மணி மணிகளின் நெருக்கத்திலும் வர வேண்டும். புரிந்ததா! மற்றபடி யோகியாக இருந்தீர்கள், யோகியாக இருக்கிறீர்கள், சதா யோகி வாழ்க்கையிலேயே இருக்கவும் வேண்டும். டிராமாவில் ஒவ்வொரு காட்சியையும் அன்பாகப் பார்த்துக் கொண்டே செல்லுங்கள். ஒவ்வொரு காட்சியும் அன்பானதுதான். உலகினருக்கு எது அன்பற்ற காட்சியோ அது உங்களுக்கு அன்பானது. எது நடந்தாலும் அதில் ஏதாவது ரகசியம் நிரம்பியதாக இருக்கும்! ரகசியத்தைத் தெரிந்து கொள்வதால் எப்போதாவது எந்த விஷயத்திலாவது, எந்த காட்சியிலாவது கோபப்பட

மாட்டீர்கள். ரகசியத்தைத் தெரிந்தவர் கோபப்பட மாட்டார். ரகசியத்தைத் தெரியாதவர் கோபமடைவார்.

இரட்டை வெளிநாட்டினரும் இந்த முறை சிவ ஜெயந்தி கொண்டாடுவதற்காக சரியான நேரத்தில் வந்தடைந்து விட்டீர்கள். உறுதியான நிச்சயம் வைத்தீர்கள் சென்றே ஆக வேண்டும் என ஆதலால் வந்தடைந்து விட்டீர்கள் அல்லவா? போவோமா இல்லையா என இப்படி சிந்தித்தவர்கள் அங்கேயே இருந்து விட்டனர். இப்போதோ இது ஒன்றுமே இல்லை, இனிமேல்தான் நடக்கப் போகிறது. இப்போது இயற்கை முழு வீச்சில் குழப்பத்தை ஆரம்பிக்கவில்லை. செய்கிறது ஆனால் உங்களைப் பார்த்த பின்னர் கொஞ்சம் அமைதியாகி விடுகிறது. எனது எஜமானன் தயாராக இல்லை என அதுவும் கூட பயந்து விடுகிறது. யாருடைய தாசி ஆவது? பயமற்றவர்தானே? பயப்படுபவர்கள் இல்லைதானே? இறப்பதற்கு மனிதர்கள் பயப்படுகின்றனர் ஆனால் நீங்கள் இருப்பதோ இறந்தவர்களாகத்தானே! பழைய உலகிலிருந்து இறந்து விட்டீர்களா? புதிய உலகிற்குச் செல்கிறீர்கள், பழைய உலகிலிருந்து இறந்து விட்டீர்கள் எனில் இறந்து விட்டவர்களுக்கு இறப்பதற்கு என்ன பயம் இருக்கும்? மற்றும் டிரஸ்டிதானே? ஒருவேளை ஏதாவது எனது என்பது இருந்தால் மாயா பூனை மியாவ் மியாவ்னு கத்தும். நான் வரட்டுமா, நான் வரட்டுமா (மை ஆஊம்!)...! நீங்களோ டிரஸ்டி ஆகி விட்டீர்கள். இந்த உடலும் என்னுடையதல்ல. மனிதர்கள் இறப்பதற்காக கவலைப்படுகின்றனர் அல்லது பொருட்கள் மீதோ, குடும்பத்தினர் மீதோ கவலை வருகிறது. நீங்களே டிரஸ்டி ஆகி விட்டீர்கள். விடுபட்டவர்கள் தானே, இல்லை கொஞ்சம் கொஞ்சம் ஈர்ப்பு உள்ளதா? தேக உணர்வு இருக்கிறது எனில் கொஞ்சம் கொஞ்சம் ஈர்ப்பு உள்ளது. ஆதலால் தபஸ்யா என்றால் ஜுவாலா சொரூபம், பயமின்மை! நல்லது.

விசேஷமான மூத்த தாதிகள் இருவரும் கேட்டுக் கொண்டிருக்கின்றனர், பார்த்துக் கொண்டிருக்கின்றனர். கொஞ்சம் புதுமையைக் காண விரும்புகிறீர்களா. பாப்தாதா முன்பும் கூறியிருந்தார் ஒன்று வார்த்தையின் சேவை, இரண்டாவது பரிஷ்தா உருவம் மற்றும் சக்திசாலியான அன்பு நிறைந்த பார்வையின் சேவை. சிறிது காலம் இவர்களுக்கு இந்த சேவையின் பாகம் கிடைத்துள்ளது.

# 1991 அவ்யக்த முரளி

ஆரம்பத்திலிருந்தே சொல் மற்றும் செயலால் சேவை செய்து கொண்டேயுள்ளனர். இந்த முறையிலான சேவையும் டிராமாவில் உள்ளது, இறுதியில் இந்த சேவைதான் இருக்கும். இந்த பாகமும் கொஞ்ச காலத்திற்காக இவர்களுக்குக் கிடைத்துள்ளது. இருந்தாலும் விசேஷமான மூத்த குழந்தைகள் அல்லவா! இவர்களுடைய கணக்கு வழக்கு முடிவடைவதிலும்கூட சேவை இருக்கிறது. பொறுப்பின் கணக்கு ஆனால் ரகசியம் சேவையுடையது. எல்லையற்ற விளையாட்டில் இதுவும் ஒரு அற்புதமான விளையாட்டு. இருவருடைய பாகமும் புதுமைதான்! இவர்கள் சீக்கிரம் சீக்கிரமாக கணக்கு வழக்கை முடித்து விட்டு சம்பன்னதா மற்றும் சம்பூர்ணதாவின் அருகில் சென்று கொண்டிருக்கின்றனர். தனியாக செல்ல மாட்டார்கள் -இவ்வாறு யாரும் நினைக்க வேண்டாம். ஒவ்வொருவரும் முடித்தே ஆக வேண்டும் ஆனால் சிலர் முடிக்க மட்டும் செய்கின்றனர், சிலர் முடித்துக் கொண்டே சேவையும் செய்கிறார்கள். முழு வெற்றியடைந்து விட்டீர்களா? எல்லோருடைய ஆசீர்வாதங்களின் மருந்தும் கூட கழுமரத்தை முள்ளாக்கி விடுகிறது. கணக்கு வழக்கின் பிரபாவத்தில் வரவில்லை. இருவரும் குணமடைந்து விட்டனர். பத்தியத்தில் மட்டும் இருக்கின்றனர். ஓய்வும் கூட பத்தியம் தான்! எப்படி உணவில் பத்தியம் இருக்கிறது. இதுவோ போவது வருவது பேசுவதின் பத்தியம். அன்பு என்னதான் செய்ய முடியாது! பழமொழி உள்ளது -அன்பு கல்லையும் கரைத்து விடும் என! எனில் இந்த நோய் தீரதா என்ன? தீர்ந்து விட்டதல்லவா! இதய நோய் குணமாகி விட்டது. பாறையிலிருந்து தண்ணீராகி விட்டது, எனில் இது உங்கள் அனைவருடைய அன்பு தான்! இப்போது மீதம் கொஞ்சம் தண்ணீர்தான் உள்ளது, பாறையோ இல்லாமல் போய் விட்டது. ஓய்வில் இருந்ததால் இருவரின் முகமும் மின்னுகிறது. பரிவாரத்தின் அன்பும் கூட மிக்க உதவி அளிக்கிறது. நல்லது.

நாலா புறமும் உள்ள எல்லா உலக நன்மைக்கான உயர்ந்த பாவனையை வைக்கக்கூடிய, நாலா புறமும் உள்ள திட சங்கல்பம் செய்கிறவர்கள், தபஸ்யா மூலம் தன்னை மற்றும் உலகை மாற்றம் செய்யக்கூடிய, ஒருமுகப்படுத்தும் சக்தி மூலம் ஒரே மாதிரியான தீவிர நிலையில் இருக்கக்கூடிய, அத்தகைய தபஸ்வி ஆத்மாக்களுக்கு, சிநேகி ஆத்மாக்களுக்கு, சதா தந்தையுடன் இருக்கக்கூடிய

## 1991 அவ்யக்த முரளி

ஆத்மாக்களுக்கு, சதா விதவிதமான முறைகள் மூலம் சேவையில் உடனிருக்கும் குழந்தைகளுக்கு மகா பரமாத்ம ஜெயந்தியின் வாழ்த்துக்கள், அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்!

தாதிஜீ, தாதி ஜானகி ஜீ மற்றும் முக்கிய சகோதர-சகோதரிகளுடன் பாப்தாதா மேடையில் நின்றவாரே கொடி அசைத்து அனைவருக்கும் வாழ்த்து கூறினார். 55-மெழுகுவர்த்திகள் ஏற்றப்பட்டன, அப்படியே தபஸ்யா வருஷத்தின் சுப ஆரம்பத்தில் 14-மாதங்கள் தபஸ்யாவிற்கான அடையாளமாக 14-மெழுகுவர்த்திகள் மற்றும் பாப்தாதாவின் நினைவினுடைய இரண்டு மெழுகுவர்த்திகள் ஏற்றி வைத்து, பாப்தாதா கேக் வெட்டினார்! நாலா புறமும் உள்ள எல்லா அதிசிநேகி சகயோகி மற்றும் சேவையில் உடனிருப்பவர்களுக்கு நிரந்தரமாக உற்சாகத்தில் இருப்பதற்காக இந்த சிவ ஜெயந்தி உற்சவத்தினுடைய வாழ்த்துக்கள், வாழ்த்துக்கள்! சதா எல்லா கஜானாக்களால் பை நிரம்பி இருப்பதற்கான வாழ்த்துக்கள்!

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋
❋❋❋❋❋❋❋❋

# 25.02.1991 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# எண்ணம் மற்றும் செயலில் சமநிலை கொண்டு வருவது தான் பரமாத்மா அன்பிற்கு பிரதிபலன் கொடுப்பதாகும்!

இன்று பாப்தாதா தன்னுடைய அனைத்து சுய இராஜ்ய அதிகாரி குழந்தைகளைப் பார்த்து மகிழ்ச்சியடைகிறார். ஏனென்றால் யார் சுய இராஜ்ய அதிகாரியோ அவர் தான் அனேக பிறவிகள் உலக இராஜ்ய அதிகாரி ஆகிறார்கள். இன்று வெளி நாட்டுக் குழந்தைகளிடம் பாப்தாதா சுய இராஜ்யத்தின் செய்தியைக் கேட்கிறார். ஒவ்வொரு இராஜ்ய அதிகாரியின் இராஜ்யம் நன்றாக நடந்து கொண்டிருக்கிறதா? உங்களுடைய இராஜ்யத்தை நடத்தும் துணைவர்கள், உதவியாளர்கள், உடன் இருப்பவர்கள் எப்பொழுதும் தேவையான நேரத்தில் சரியான உதவி கொடுத்துக் கொண்டிருக்கிறார்களா? இல்லை இடையிடையே எப்போதாவது ஏமாற்றியும் விடுகிறார்களா? என்னென்ன உதவி புரியும் சேவகர்களாகிய கர்மேந்திரியங்கள், ஸ்தூலமானாலும், சூட்சுமமானாலும் இருக்கிறார்களோ அனைத்தும் உங்களுடைய கட்டளைக்குள் இருக்கின்றனவா? யாருக்கு எந்த நேரம் என்ன கட்டளை இடுகிறீர்களோ அதே நேரம் அதே விதியோடு உங்களுடைய உதவியாளர் ஆகிறார்களா? தினந்தோறும் உங்களுடைய இராஜ்ய தர்பாரைக் கூட்டுகிறீர்களா? இராஜ்ய நடவடிக்கைகள் அனைத்தும் 100-சதவிகிதம் கட்டளைப்படி நடப்பதாகவும், நம்பிக்கைக்குரியதாகவும் எப்பொழுதும் தயாராகவும் இருக்கிறதா? என்ன நிலவரம்? நன்றாக இருக்கிறதா? மிக நன்றாக இருக்கிறதா? மிக மிக நன்றாக இருக்கிறதா? இராஜ்ய தர்பார் நல்லபடியாக எப்பொழுதும் வெற்றிகரமாக நடைபெறுகிறதா? அல்லது எப்பொழுதாவது உதவியாளர்கள் வேலைக்காரர்கள் குழப்பம் செய்வதில்லையே? இந்தப் பழைய உலக இராஜ்ய சபாவின் நிலைமையையோ நன்றாகத் தெரிந்திருக்கிறீர்கள். சட்டமும் இல்லை, ஒழுங்கும் இல்லை ஆனால் உங்களுடைய இராஜ்ய

தர்பார் சட்டத்திற்குட்பட்டதாகவும் இருக்கிறது. மேலும் எப்பொழுதும் சரி ஐயா! வந்தேன் ஐயா! என்ற ஒழுக்கத்தோடு நடந்து கொண்டிருக்கிறது. எவ்வளவிற்கு எவ்வளவு இராஜ்ய அதிகாரி சக்திசாலியாக இருக்கிறாரோ அவ்வளவு இராஜ்யத்தில் உதவி செய்யும் சேவகர்களும் தானாகவே விருப்பம் அறிந்து நடந்து கொள்கிறார்கள். இதைக் கேட்கக் கூடாது மற்றும் இதைச் செய்யக்கூடாது. இதைச் சொல்லக் கூடாது என்று இராஜ்ய அதிகாரி கட்டளை இட்டார் என்றால் ஒரு நொடியில் அதற்கேற்றபடி காரியம் செய்யட்டும். பார்க்காதே என்று நீங்கள் கட்டளையிடுகிறீர்கள் ஆனால் அவர் பார்த்து விட்டு என்னுடைய தவறு நடந்து விட்டது என்று மன்னிப்பு கேட்கிறார், இந்த மாதிரி இருக்கக்கூடாது. செய்த பின்பு யோசித்தால் அவரை புத்திசாலி உதவியாளர் என்று கூற முடியுமா? மனதிற்கு வீணானதை நினைக்காதே என்று கட்டளையிடுகிறீர்கள். ஒரு நொடியில் முற்றுப்புள்ளி, இரண்டு நொடிகள் கூட ஆகக்கூடாது. இதைத்தான் சரியான முறையில் நடக்கும் இராஜ்ய தர்பார் என்று கூறுவது. அந்த மாதிரி இராஜ்ய அதிகாரி ஆகி விட்டீர்களா? தினந்தோறும் இராஜ்ய தர்பாரைக் கூட்டுகிறீர்களா? அல்லது எப்பொழுது நினைவு வருகிறதோ அப்பொழுது ஆணை கொடுக்கிறீர்களா? தினந்தோறும் நாள் முடிவில் உதவியாளர்கள் சேவகர்களை சோதனை செய்யுங்கள். ஒருவேளை ஏதாவது கர்ம இந்திரியங்கள் மூலமாக அல்லது சேவகர்கள் மூலமாக தவறான காரியங்கள் நடந்து கொண்டிருக்கிறது என்றால் தவறான காரியம் செய்து செய்து சம்ஸ்காரம் உறுதியாகி விடுகிறது. பின்பு மாற்றுவதற்கு நேரமும் எடுக்கிறது மற்றும் கடின உழைப்பும் தேவையாக இருக்கிறது. அந்த நேரமே சோதனை செய்து மற்றும் மாற்றுவதற்கு சக்தி கொடுத்தீர்கள் என்றால் நிரந்தரமாகச் சரியாகி விடும். அடிக்கடி சோதனை மட்டும் செய்கிறீர்கள் இது சரி, இது தவறு என்று ஆனால் அதை மாற்றுவதற்கான வழி மற்றும் ஞானத்தின் சக்தி கொடுக்கவில்லை என்றால் அடிக்கடி சோதனை செய்வதால் மட்டும் மாற்றம் ஏற்படாது. எனவே முதலில் எப்பொழுதும் கர்மேந்திரியங்களை ஞானத்தின் சக்தியால் மாற்றுங்கள். இது தவறு என்று நினைக்கட்டும் செய்யாதீர்கள் ஆனால் எது சரி மற்றும் சரியானபடி நடந்து கொள்வதற்கான விதியும் தெளிவாக இருக்கட்டும். ஒருவேளை யாருக்காவது சொல்லிக் கொண்டேயிருந்தீர்கள் என்றால் சொல்வதனால் மாற்றம் ஏற்படுவதில்லை ஆனால் சொல்வதின்

கூடவே விதியையும் தெளிவுபடுத்தினீர்கள் என்றால் ஸித்தியாகும். எந்த ஆத்மா சுயராஜ்யத்தை நடத்துவதில் வெற்றியடைகிறது என்றால், வெற்றியடையும் இராஜ்ய அதிகாரியின் அடையாளம் அவர் எப்பொழுதும் தன்னுடைய முயற்சியில் திருப்தியாய் இருப்பர். மேலும் கூடவே நெருக்கத்தில் வரும் எந்த ஒரு ஆத்மாவும் அந்த வெற்றி ஆத்மாவால் திருப்தியாக இருப்பார், கூடவே எப்பொழுதும் மனதிலிருந்து அந்த ஆத்மாவிற்காக நன்றிகள் வெளி வந்து கொண்டேயிருக்கும். அனைவரின் மனதிலிருந்து, எப்பொழுதும் மனதின் இசை மூலமாக ஆஹா! ஆஹா! என்ற பாடல் ஒலித்துக் கொண்டேயிருக்கும், அவருடைய காதுகளில் அனைவர் மூலமாக இந்த ஆஹா! ஆஹா! என்ற நன்றிப் பாடல் கேட்டுக் கொண்டேயிருக்கும். இந்தப் பாடல் தானாகவே ஒலித்துக் கொண்டேயிருக்கும். எனவே டேப்ரிக்கார்டரை ஒலிக்க வேண்டியதில்லை. இதற்காக எந்த சாதனத்திற்கும் அவசியம் இல்லை. இது முடிவல்லாத பாடல். அப்படி வெற்றி இராஜ்ய அதிகாரியாக ஆகியிருக்கிறீர்களா? ஏனென்றால் இப்பொழுதைய வெற்றி இராஜ்ய அதிகாரி எதிர்காலத்தில் வெற்றியின் பலனாக உலக இராஜ்யத்தை அடைவார். ஒருவேளை முழு வெற்றியில்லை சில நேரம் அப்படி, சில நேரம் இப்படி என்றால், சில நேரம் 100-சதவிகிதம் வெற்றி, சில நேரம் வெற்றி மட்டும். 100-சதவிகிதம் வெற்றியில்லை என்றால் அந்த மாதிரி இராஜ்ய அதிகாரி ஆத்மாவிற்கு உலகின், இராஜ்ய சிம்மாசனம், கிரீடம் கிடைப்பது இல்லை, ஆனால் இராஜ குடும்பத்தில் வந்து விடுவார். ஒன்று சிம்மாசனதாரி, இன்னொன்று சிம்மாசனதாரி இராஜ குடும்பம். சிம்மாசனதாரி என்றால் இந்த நேரம் எந்த நேரமும் இரட்டை சிம்மாசனதாரியாக இருக்கட்டும். இரட்டை சிம்மாசனம் எது? ஒன்று அழியாத ஆசனம் இன்னொன்று தந்தையின் இதய சிம்மாசனம். அப்படி யார் யார் இப்பொழுது நிரந்தரமான இரட்டை சிம்மாசனதாரிகளோ, எப்போதாவது அல்ல, அந்த மாதிரி எப்பொழுதும் இதய சிம்மாசனதாரி உலகத்திலும் சிம்மாசனதாரியாக இருப்பார். அப்படி முழு நாளும் இரட்டை சிம்மாசனதாரியாக இருந்தோமா? என்று சோதனை செய்யுங்கள். ஒருவேளை சிம்மாசனத்தில் அமரவில்லை என்றால் உதவியாளர் சேவகர்களான கர்ம இந்திரியங்கள் கூட உங்களுடைய ஆணைப்படி நடக்க முடியாது. இராஜாவின் கட்டளைகள் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. இராஜ்யத்தில் (ஆசனத்தில்) இல்லை ஆனால் அவர்

கட்டளையிட்டால் அது ஏற்றுக் கொள்ளப்படுவதுயில்லை. இன்றைய காலத்தில் ஆசனத்திற்குப் பதிலாக நாற்காலிகள் ஆகி விட்டன. ஆசனங்கள் இல்லாமல் ஆகி விட்டன. தகுதியில்லாததினால் ஆசனங்கள் மறைந்து விட்டன. நாற்காலியில் இருக்கிறார் என்றால் அப்பொழுது ஏற்றுக் கொள்வார்கள். ஒருவேளை நாற்காலியில் கூட அமரவில்லை என்றால் அனைவரும் ஏற்று நடக்க மாட்டார்கள் ஆனால் நீங்கள் நாற்காலிகளை விரும்பும் தலைவர்கள் இல்லை. சுயராஜ்ய அதிகாரி இராஜா ஆவீர்கள். அனைவரும் இராஜாக்களா? இல்லை யாராவது பிரஜையும் இருக்கிறீர்களா? இராஜயோகி என்றால் இராஜா. பாருங்கள் எவ்வளவு பல, பல, பல மடங்கு பாக்கியவான் .கள் நீங்கள். உலகம் அதிலும் விசேஷமாக வெளிநாடுகள் குழப்பத்தில் இருக்கின்றன. அவர்கள் வார் (சண்டை) மற்றும் ஹார் (தோல்வி) என்ற இரண்டு வழிகளில் இருக்கிறார்கள். சிலர் தோல்வியடைந்து கொண்டிருக்கிறார்கள், சிலர் போரிட்டுக் கொண்டிருக்கிறார்கள் மேலும் சிலர் நிலவரத்தைக் கேள்விப்பட்டு அதே குழப்பத்தில் இருக்கிறார்கள். அப்படி அவர்கள் போர் மற்றும் தோல்வியின் குழப்பத்தில் இருக்கிறார்கள் மற்றும் நீங்கள் பாப்தாதாவின் அன்பில் இருக்கிறீர்கள். பரமாத்மா அன்பு தொலை தூரத்திலிருந்து இழுத்து வந்திருக்கிறது. எப்படிப்பட்ட சூழ்நிலைகளாக இருந்தாலும் ஆனால் பரமாத்மாவின் அன்பின் எதிரே சூழ்நிலைகள் நிறுத்த முடியாது. பரமாத்மா அன்பு புத்திவானுக்கெல்லாம் புத்தியாகி சூழ்நிலைகளை உயர்ந்த நிலையில் மாற்றி விடுகிறது. வெளி நாட்டவர்களிலும் பாருங்கள் முதலில் போலந்துக்காரர்கள் எவ்வளவு முயன்றார்கள், அசம்பவமாகப்பட்டது மேலும் இப்பொழுது எப்படியிருக்கிறது? இரஷ்யாவைச் சேர்ந்தவர்களும் முடியாது என்று நினைத்தார்கள். 24-மணி நேரம் வரிசையில் நிற்க வேண்டியிருந்தாலும், வந்து சேர்ந்து விட்டீர்கள் இல்லையா? கடினமானது எளிதாகி விட்டது. அப்படியானால் நன்றி கூறுவீர்கள் இல்லையா? அதே மாதிரி எப்பொழுதும் நடந்து கொண்டேயிருக்கும். சிலர் கடைசி நேரத்தில் விமானம் இருக்காது, பின்பு நாங்கள் எப்படி வருவோம் என்று நினைக்கிறார்கள். பரமாத்மா அன்பில் அந்த மாதிரி சக்தி இருக்கிறது அது யாருடைய கண்களிலும் அந்த மாதிரி மந்திரம் செய்து விடும் அவர்கள் உங்களை அனுப்புவதற்கு முழுமையாக ஈடுபட்டு விடுவார்கள் ஆனால் அதற்கு அன்பு

செய்பவர்களாக மட்டுமல்லாமல், அன்பின் பிரதிபலன் கொடுப்பவர்களாகவும் இருக்க வேண்டும்.

அன்பின் பிரதிபலன் கொடுப்பவர்களுக்கு கடைசி வரை ஒவ்வொரு பிரச்சனையையும் தாண்டுவதற்கு அன்பின் உதவியைச் செய்து கொண்டே இருப்பார் என்று தந்தையின் உறுதிமொழியும் இருக்கிறது. எப்போதாவது அன்பு செய்பவர்களாக ஆகாதீர்கள். எப்பொழுதும் அன்பை எடுப்பவர்களாகவும் பிரதிபலன் கொடுப்பவர்காளாகவும் இருங்கள். அநேகருக்கு அன்பு செய்யத் தெரியும், ஆனால் அன்பின் பிரதிபலன் கொடுப்பதற்கு வெகு சிலருக்குத் தான் தெரியும், எனவே தான் நீங்கள் சிலரிலும் சிலர் ஆவீர்கள்.

பாப்தாதா வெளி நாட்டுக் குழந்தைகளைப் பார்த்து குஷியடைகிறார். தைரியத்துடன் தந்தையின் உதவிக்கு உரியவர்களாகி அனேக விதமான மாயாவின் கட்டுப்பாடுகள் மற்றும் அனேக விதமான பழக்க வழக்கங்கள் என்ற எல்லைகளைத் தாண்டி வந்து சேர்ந்து விட்டார்கள். இந்த தைரியம் கூட சாதாரணமானது இல்லை. அனைவரும் நல்ல தைரியம் வைத்திருந்தீர்கள். புதியவர்களும், பழையவர்களும், இருவரும் அமர்ந்திருக்கிறீர்கள். மிகவும் பழையதிலும் பழையவர்களும் இருக்கிறார்கள், மேலும் இந்தக் கல்பத்தின் புதியவர்களும் இருக்கிறார்கள். இருவரும் நல்ல தைரியம் வைத்திருக்கிறார்கள். இந்த தைரியத்தில் அனைவரும் நம்பர் ஒன் ஆகி விட்டீர்கள், பின்பு வரிசையில் எந்த விஷயத்தில் இருக்கிறீர்கள்? வெளி நாட்டவர்கள் 108-மணி மாலையில் அவசியம் வருவோம் என்று விசேஷ முயற்சியும் செய்கிறார்கள் மேலும் ஆன்மீக உரையாடலிலும் கூறுகிறார்கள். வர முடியுமா என்று யாரவாது கேள்வி எழுப்புகிறார்களா? அவசியம் வருவார்கள். வெளிநாட்டவர்களுக்கும் மாலையில் இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது ஆனால் யார் மற்றும் எவ்வளவு என்பதைப் பின்பு வரும் நாட்களில் கூறுவோம். சரி வரிசையில் வருகிறார்கள்? என்னுடைய பாபா என்று அனைவரும் அதிகாரத்தோடு கூறுகிறீர்கள் அப்படி அதிகாரமும் முழுமையாக இருக்கிறது பின்பும் வரிசை எண் ஏன்? யார் நம்பர் ஒன்றாக இருப்பார்களோ மற்றும் யார் நம்பர் எட்டாக இருப்பார்களோ இருவரிலும் வித்தியாசம் இருக்கும் இல்லையா? இவ்வளவு

# 1991 அவ்யக்த முரளி

இத்தியாசம் ஏன் ஏற்படுகிறது? 160000த்தின் விஷயத்தை விடுங்கள், 108-ல் கூடப் பாருங்கள் ஒன்று எங்கே? 108-எங்கே? அப்படியானால் என்ன வித்தியாசம் ஏற்பட்டது? தைரியத்தில் அனைவரும் தேர்ச்சி பெற்று விட்டீர்கள் ஆனால் தைரியத்தின் பலனாகத் தந்தையிடமிருந்தும் பிராமணக் குடும்பம் மூலமாக என்ன உதவி கிடைக்கிறதோ அந்த உதவியைப் பெற்று காரியத்தில் ஈடுபடுத்துவது, மேலும் தேவையான நேரத்தில் உதவியை உபயோகிப்பது, எந்த நேரம் எந்த உதவி அதாவது சக்தி வேண்டுமோ அதே சக்தி மூலமாகத் தேவையான நேரத்தில் காரியம் செய்வது, இந்த நிர்ணய சக்தி மற்றும் காரியத்தில் ஈடுபடுத்துவதற்கான காரிய சக்தி இதில் தான் வித்தியாசம் ஏற்பட்டு விடுகிறது. சர்வ சக்திவான் தந்தை மூலமாக சர்வ சக்திகளின் ஆஸ்தி அனைவருக்கும் கிடைக்கிறது. சிலருக்கு 8-சக்தி, இவருக்கு 6-சக்தி என்று கிடைப்பதில்லை. அனைத்து சக்திகளும் கிடைக்கிறது. விதி மூலமாக ஸித்தி கிடைக்கிறது என்று முன்பும் கூறியிருந்தோம். காரிய சக்தியின் விதி என்னவென்றால் -ஒன்று தந்தையினுடையவராக ஆவதின் விதி, இரண்டாவது தந்தையிடமிருந்து ஆஸ்தியை அடைவதற்கான விதி மற்றும் மூன்றாவது கிடைக்கப் பெற்ற ஆஸ்தியைக் காரியத்தில் ஈடுபடுத்துவதற்கான விதி அப்படி காரியத்தில் ஈடுபடுத்துவதின் விதியில் வித்தியாசம் ஏற்பட்டு விடுகிறது. கருத்துக்கள் (ஞானம்) அனைவரிடமும் இருக்கின்றன. ஒரு தலைப்பில் கருத்தரங்கம் வைத்தீர்கள் என்றால் எவ்வளவு கருத்துக்கள் வந்து விடுகின்றன. எனவே ஒன்று கருத்துக்களைப் புத்தியில் வைக்க வேண்டும். இது ஒரு விதி. மற்றும் இன்னொன்று புள்ளியாகி ஞானத்தை காரியத்தில் ஈடுபடுத்த வேண்டும். பாயிண்ட் ரூபமும் இருக்கட்டும். பாயின்ட்களும் இருக்கட்டும். இரண்டிற்கும் சமநிலை இருக்கட்டும், இது தான் நம்பர் ஒன் விதி மூலம் நம்பர் ஒன் ஸித்தியைப் பிராப்தி செய்வதாகும். சில சமயம் ஞானத்தின் விஸ்தாரத்தில் சென்று விடுகிறீர்கள், சில சமயம் ஆத்ம ரூபத்தில் நிலைத்து விடுகிறீர்கள். பாயின்ட் ரூபம் மற்றும் பாயின்ட் சேர்ந்தே தேவையாக இருக்கிறது. எனவே காரிய சக்தியை அதிகரியுங்கள். புரிந்ததா? நம்பர் ஒன் வர வேண்டும் என்றால் இதைச் செய்ய வேண்டியதிருக்கும்.

இன்றைய நாட்களில் அறிவியில் சக்தி, அறிவியல் சாதனங்ககள் மூலமாக காரிய சக்தியை எவ்வளவு துரிதப்படுத்திக்

கொண்டிருக்கிறார்கள். எவ்வளவு மனிதர்கள் காரியம் செய்ய முடியுமோ, எவ்வளவு நேரத்தில் மேலும் எவ்வளவு சரியாக சைதன்ய மனிதர்கள் செய்ய முடியுமோ அதை விட அறிவியலின் சாதனம் கம்ப்யூட்டர் எவ்வளவு விரைவாகக் காரியம் செய்கிறது. மனிதர்களையும் செய்த காரியத்தில் திருத்துகிறது. அப்படி எப்பொழுது அறிவியலின் சாதனம் காரிய சக்தியைத் துரிதப்படுத்த முடியுமோ, அந்த மாதிரி அனேகக் கண்டுபிடிப்புகள் வந்திருக்கின்றன மேலும் வந்து கொண்டும் இருக்கின்றன, அப்படியானல் பிராமண ஆத்மாக்களின் அமைதி சக்தி எவ்வளவு துரிதமாக சரியாகக் காரியத்தை செய்து முடிக்க முடியும்? நொடியில் நிர்ணயம் இருக்கட்டும், நொடியில் நடைமுறையில் காரியத்தை வெற்றிகரமாக முடியுங்கள். நினைப்பது மற்றும் செய்வது இதற்கும் சமநிலை தேவை. நிறைய பிராமண ஆத்மாக்கள் அதிகமாக நினைக்கிறார்கள், ஆனால் செய்யும் பொழுது எவ்வளவு நினைத்தார்களோ அவ்வளவு செய்வது இல்லை. மேலும் சிலர் செய்ய ஆரம்பித்து விடுகிறார்கள், பின்பு சரியாகச் செய்தோமோ இல்லையா? என்று பின்னால் யோசிக்கிறார்கள். இப்பொழுது என்ன செய்ய வேண்டும்? எனவே நினைப்பது செய்வது இரண்டும் ஒன்றாகவே இருக்கட்டும். இல்லையென்றால் என்னவாகிறது? இதைச் செய்ய வேண்டும் என்று நினைக்கிறார்கள். ஆனால் யோசித்து செய்வோம் ஆனால் யோசித்து யோசித்து காரியத்தில் நேரம் மற்றும் சூழ்நிலையே மாறி விடுகிறது. செய்திருந்திருக்க வேண்டும், நினைத்திருந்தேன் என்று பின்பு கூறுகிறார்கள். எப்பொழுது அறிவியலின் சாதனம் துரித வேகமுடையதாக ஆகிக் கொண்டிருக்கிது, ஒரு நொடியில் என்ன செய்ய முடியாது? வினாசத்தின் சாதனம் அதி வேகமுடையதாக ஆகிக் கொண்டிருக்கிறது என்றால் ஸ்தாபனையின் சக்திசாலி சாதனம் என்ன செய்ய முடியாது? இப்பொழுதோ இயற்கை எஜமானர்களாகிய உங்களை அழைத்துக் கொண்டிருக்கிறது. நீங்கள் அவைகளுக்கு கட்டளையிடுவது இல்லையென்பதால் இயற்கையும் எவ்வளவு அரைகுறை காரியங்கள் செய்து கொண்டிருக்கிறது. எஜமானன் தயார் ஆகி விட்டீர்கள் என்றால் இயற்கை உங்களை வரவேற்கும். அந்த மாதிரி தயாராகியிருக்கிறீர்களா? அல்லது இப்பொழுது தயார் செய்து கொண்டிருக்கிறீர்களா? சம்பூரணம் தயாராவதின் மகிமையை உங்களுடைய பக்தர்கள் இதுவரை பாடிக் கொண்டிருக்கிறார்கள். உங்களுடைய மகிமையைத் தெரிந்திருக்கிறீர்களா? இவை

அனைத்திலும் சர்வகுண சம்பன்னமாகவும், சம்பூரண நிர்விகாரியாகவும், சம்பூரண அகிம்சாவாதியாகவும், மரியாதை புருஷோத்தமனாகவும், 16-கலைகள் நிறைந்தவர்களாகவும் ஆகி விட்டீர்களா? என்று சோதனை செய்யுங்கள். அனைத்து விஷயங்களிலும் முழுமையாக இருந்தால் எஜமானன் தயார் என்று புரிந்து கொள்ளுங்கள். இதில் இன்னும் சதவிகிதத்தில் இருக்கின்றீர்கள் என்றால் எஜமானன் தயாராகவில்லை. குழந்தையாக இருக்கின்றீர்கள், ஆனால் இன்னும் எஜமானன் தயாராகவில்லை. ஆக இயற்கை உங்களை வரவேற்குமா, தந்தையின் குழந்தை அது சரிதான். இதில் வெற்றி அடைந்து விட்டீர்கள் ஆனால் இந்த ஐந்து விஷயங்களிலும் முழுமையாவது என்றால் எஜமானன் ஆவது. இயற்கைக்கு இந்த தபஸ்யா வருடம் கடைசி வாய்ப்பா அல்லது இன்னும் கொஞ்சம் வாய்ப்புக் கொடுங்கள் என்ற பின்பு கூறுவீர்களா? பின்பு கூற மாட்டீர்கள் இல்லையா? நல்லது.

நாலாபுறமுமுள்ள அனைத்து இராஜ்ய அதிகாரி ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் இரட்டை சிம்மாசனதாரியான விசேஷ ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் நினைப்பது மற்றும் இரண்டு சக்திகளையும் சமமாக்கக்கூடிய வரதானி செய்வது ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் பரமாத்மா அன்பிற்கு பிரதிபலன் கொடுக்கக் கூடிய உண்மையான மனமுடைய குழந்தைகளுக்கு திலாராம் பாப்தாதாவின் அன்பு நினைவுகளும் நமஸ்காரமும்.

வரதானம்: அனைத்துப் பொக்கிஷங்களையும் காரியத்தில் ஈடுபடுத்தி அதிகரிக்கக் கூடிய யோகியிலிருந்து பிரயோகம் செய்யும் ஆத்மா ஆகுக!

பாப்தாதா அனைத்துக் குழந்தைகளுக்கும் அனைத்துப் பொக்கிஷங்களையும் பிரயோகம் செய்வதற்காகக் கொடுத்திருக்கிறார். யார் எவ்வளவு பிரயோகம் செய்பவர்களாக ஆவார்களோ பிரயோகத்தின் அடையாளம் முன்னேற்றம். ஒருவேளை முன்னேற்றம் இல்லையென்றால் பிரயோகம் இல்லை என்பதாகும். யோகத்தின் அர்த்தமே பிரயோகத்தில் கொண்டு வருவது. எனவே உடல், மனம், செல்வம் மற்றும் பொருட்கள் என்னென்ன தந்தை மூலமாகக்

கிடைத்துள்ள சொத்துக்கள், அவற்றை அலட்சியத்தின் காரணமாக வீணாக இழந்து விடக்கூடாது. அதைக் காரியத்தில் ஈடுபடுத்தி ஒன்றிலிருந்து பத்து மடங்கு அதிகரிக்க வேண்டும். குறைந்த செலவில் அதிக நன்மை அடைபவராக வேண்டும். இது தான் யோகியாக இருந்து பிரயோகத்தில் கொண்டு வரும் ஆத்மாவின் அடையாளமாகும்.

சுலோகன்: விகர்மங்கள் (பாவங்கள்) மற்றும் விகாரங்களைத் தியாகம் செய்வது தான் உண்மையான தியாகமாகும்!

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## 17.03.1991 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

## பிராமண வாழ்க்கையின் உயர்ந்த மேலாண் தோற்றப்பொலிவு (Personality) -திருப்தி!

இன்று பாப்தாதா தன்னுடைய நாலா புறமுமுள்ள திருப்தியின் மணிகளைப் பார்த்துக் கொண்டு இருக்கின்றார். சங்கமயுகமே திருப்தியாக இருந்து மேலும் திருப்தி படுத்தக்கூடிய யுகமாகும். பிராமண வாழ்க்கையின் விசேஷ தன்மை திருப்தியாக வாழ்வேதாகும். திருப்தி தான் பெரியதிலும் பெரிய பொக்கிஷமாகும் திருப்தி தான் பிராமண வாழ்க்கையினுடைய தூய்மையின் அகத்தோற்றப் பொலிவாகும். இந்த தனித்தன்மை மூலம் சகஜமாகவே விசேஷ ஆத்மாவாக ஆகி விடுகின்றீர்கள். திருப்தியின் அகத்தோற்றப் பொலிவு இல்லை எனில் விசேஷ ஆத்மா என்று கூற முடியாது. இன்றைய நாட்களில் இரண்டு விதமான அகத்தோற்ற பொலிவுகள் மகிமை செய்யப்படுகின்றன -ஒன்று உடல் ரீதியான அகத்தோற்றப் பொலிவு, இன்னொன்று பதவியினுடைய தோற்றப்பொலிவு. பிராமண வாழ்க்கையில் எந்த பிராமண ஆத்மாவில் திருப்தியின் மகான் தன்மை இருக்கின்றதோ அவர்களுடைய உருவத்தில், அவர்களுடைய முகத்தில் திருப்தியின் பெர்ஸனாலிட்டி தென்படும். மேலும் சிரேஷ்ட ஸ்திதியினுடைய (மனோநிலை) பதவியின் பெர்ஸனாலிட்டி தென்படும். திருப்தியின் ஆதாரம் தந்தை மூலமாகக் கிடைத்துள்ள அனைத்துப் பிராப்திகளிலும் நிரம்பி இருப்பது அதாவது திருப்தியாக

இருப்பது. அதிருப்திக்கான காரணம் பிராப்தியின்மை ஆகும். திருப்திக்கான காரணம் சர்வ பிராப்திகள். எனவே பாப்தாதா பிராமண குழந்தையாகிய தங்கள் அனைவருக்கும் பிராமண ஜென்மம் ஏற்பட்ட உடனேயே முழு ஆஸ்தியையும் கொடுத்து விட்டார் இல்லையா? அல்லது சிலருக்கு குறைவாகவும், சிலருக்கு அதிகமாகவும் கொடுத்திருக்கின்றாரா? பாப்தாதா எப்போதும் அனைத்து குழந்தைகளுக்கும் இதைக் கூறுகின்றார். அதாவது தந்தை மற்றும் ஆஸ்தியினை நினைவு செய்யுங்கள்.

அனைத்து பிராப்திகள் தான் ஆஸ்தி. இதில் சர்வ சக்திகளும் வந்து விடுகின்றது. குணங்களும் வந்து விடுகின்றன, ஞானமும் வந்து விடுகின்றது. சர்வ சக்திகள் சர்வ குணங்கள் மேலும் சம்பூரண ஞானம். ஞானம் மட்டுமல்ல சம்பூரண ஞானம். சக்திகள் மேலும் குணங்கள் என்பது மட்டுமல்ல ஆனால் சர்வ குணங்கள் மேலும் சர்வ சக்திகள். அப்படியெனில் சர்வ ஆஸ்தி என்பதன் அர்த்தம் நிரம்பிய தன்மையாகும். எந்தக் குறையும் இல்லை. ஒவ்வொரு பிராமண குழந்தைக்கும் முழுமையான ஆஸ்தி கிடைக்கின்றது. அரைகுறையாக அல்ல. சர்வ குணங்களில் இரண்டு குணங்கள் உங்களுக்கு, இரண்டு குணங்கள் இவருக்கு என்று பகிர்ந்து கொடுக்கவில்லை. முழு ஆஸ்தி எனில் அர்த்தம் சம்பன்ன தன்மை (நிரம்பிய தன்மை), சம்பூரண தன்மை (முழுமை தன்மை) ஆகும். எப்போது ஒவ்வொருவருக்கும் முழு ஆஸ்தி கிடைக்கின்றதோ அப்போது, சர்வ பிராப்தி -திருப்தி ஏற்படும். பாப்தாதா அனைத்து பிராமணர்களிடமும் திருப்தியின் தனித்தன்மை எந்த அளவிற்கு வந்திருக்கின்றது என்பதைப் பார்த்துக் கொண்டு இருந்தார். பிராமண வாழ்க்கையில் அதிருப்தியின் பெயர் அடையாளமே கிடையாது. பிராமண வாழ்க்கையில் மகிழ்ச்சி இருக்கின்றது எனில் அது இங்கு இருக்கின்றது. இது மகிழ்ச்சிக்கான வாழ்க்கை. அனுபவிப்பதற்கான வாழ்க்கை ஆகும்.

தபஸ்யாவின் அர்த்தமே திருப்தியின் பெர்ஸனாலிட்டி -கண்களில், முகத்தில், நடத்தையில் தென்படுவதாகும். அப்படிப்பட்ட திருப்தி மணிகளின் மாலையை உருவாக்கிக் கொண்டு இருந்தார். எத்தனை மாலை செய்யப்பட்டிருக்கும்? திருப்தி மணியின் அர்த்தம் கறையில்லாத மணி ஆகும். திருப்தியின் அடையாளம் -திருப்தியான

# 1991 அவ்யக்த முரளி

ஆத்மா சதா தன்னை மகிழ்ச்சி நிறைந்தவராக அனுபவம் செய்வார்கள். மேலும் மற்றவர்களும் கூட மகிழ்ச்சி அடைவார்கள். மகிழ்ச்சி நிறைந்த ஸ்திதியில் (பிரசன்னசித்) கேள்வி எழும் நிலை (பிரஷ்னசித்) இருப்பது இல்லை. ஒன்று பிரசன்னசித் மகிழ்ச்சி நிறைந்து இருப்பது, மற்றொன்று பிரஷ்னசித் கேள்விகள் நிறைந்து இருப்பது. பிரஷ்ன எனில் கேள்வி. பிரசன்னசித் ஆத்மாக்கள் டிராமாவின் ஞானம் நிறைந்தவர்களாக இருக்கும் காரணத்தினால் மகிழ்ச்சியாக இருப்பார்கள், கேள்விகள் கேட்பதில்லை. எந்த ஒரு கேள்வி தன்னைப் பற்றியோ அல்லது யாரைப் பற்றியேனும் கூட எழுகிறது எனில் அதற்கான பதில் முதலில் தனக்கு வருகின்றது. முதலிலேயே சொல்லப்பட்டு இருக்கின்றது -என்ன? (what) மேலும் ஏன்? (why) என்பது இல்லை, ஆனால் புள்ளியாகும் (Dot). என்ன ஏன் என்பதில்லை முற்றுப்புள்ளி ஒரு நொடியில் விஸ்தாரத்தில் போவது, ஒரு நொடியில் சாரத்தில் வருவது. அப்படி மகிழ்ச்சி நிறைந்தவர்களாக (பிரசன்னசித்) இருப்பவர்கள் சதா கவலையற்று நிஸ்சிந்த் ஆக இருப்பார்கள். எனவே சோதனை செய்யுங்கள் -அப்படிப்பட்ட அடையாளங்கள் திருப்தி மணியான என்னிடம் இருக்கின்றதா? பாப்தாதா அனைவருக்கும் திருப்திமணி என்ற பட்டம் (Title) கொடுத்திருக்கின்றார். எனவே பாப்தாதா கேட்டுக் கொண்டு இருக்கின்றார் ஹே திருப்தி மணிகளே, சதா திருப்தியாக இருக்கின்றீர்களா?

பின்பு என்ன கேள்வி என்றால் -தன் மீது, அதாவது தன்னுடைய முயற்சியின் மீது, தன்னுடைய சன்ஸ்காரத்தை மாற்றக்கூடிய முயற்சியின் மீது, தன்னுடைய முயற்சியின் சதவிகிதத்தின் மீது தன்னுடைய நிலையின் மீது சதா திருப்தியாக இருக்கின்றீர்களா? நல்லது. இரண்டாவது கேள்வி- தன்னுடைய மனம் சொல் செயலில் அதாவது சம்பந்தம்-தொடர்பின் மூலம் செய்யும் சேவையில் சதா திருப்தியாக இருக்கின்றீர்களா? ஒரு சேவை மட்டுமல்ல மூன்று விதமான சேவை -எண்ணம் சொல் செயல் -மூன்று சேவையிலும் சதா திருப்தியாக இருக்கின்றீர்களா? யோசித்துக் கொண்டு இருக்கிறீர்கள். தன்னைப் பார்த்துக் கொண்டு இருக்கின்றீர்கள் அதாவது எந்த அளவிற்கு திருப்தியாக இருக்கின்றேன்? நல்லது முன்றாவது கேள்வி -அனைத்து ஆத்மாக்களுடைய சம்பந்தம்-தொடர்பில் தன் மூலமாக மேலும் அனைவர் மூலமாக சதா திருப்தியாக இருக்கின்றீர்களா? ஏனெனில்

தபஸ்யா வருடத்தில் தபஸ்யாவின் பலனாக வெற்றியின் பலனாக இதை (திருப்தியினை) பிராப்தம் செய்ய வேண்டும். தன்னிடத்தில் சேவையில் மேலும் அனைவரிடத்திலும் திருப்தி. நான்கு மணி நேரம் யோகா செய்தேன் -மிகவும் நல்லது. மேலும் நான்கிலிருந்து எட்டு மணி வரை கூட சென்றடைவீர்கள் இதுவும் கூட மிகவும் நல்லது. யோகத்தின் வெற்றி சொரூபமாகுங்கள். யோகா என்பது விதி ஆனால் இந்த விதியின் மூலம் வெற்றி (ஸித்தி) என்ன கிடைத்தது? யோகத்தில் ஈடுபடுவது என்பது விதி, யோகத்தினுடைய பிராட்தி (பலன்) என்பது வெற்றி. எனவே எப்படி 8-மணி நேரத்திற்கான லட்சியம் வைத்தீர்களோ அப்படி குறைந்ததிலும் குறைந்த இந்த மூன்று விதமான திருப்தியினுடைய வெற்றிக்கான தெளிவான சிரேஷ்ட லட்சியத்தை வையுங்கள். அனேகக் குழந்தைகள் தன்னை எல்லாம் தெரிந்தவராக நினைத்துக் கொண்டு திருப்தியாக இருப்பதாகப் புரிந்து கொள்கின்றார்கள். அப்படிப்பட்ட திருப்தியாளராக ஆகாதீர்கள். ஒன்று உள்ளம் ஏற்றுக் கொள்வது, மற்றொன்று புத்தி ஏற்றுக் கொள்வது. புத்தி மூலமாக நான் திருப்தியாகத்தானே இருக்கின்றேன். என்ன கவலை. நாமோ கவலையற்றவர்கள் எனவே புத்தியினால் தன்னை திருப்தியாளர் எனப் புரிந்து கொள்வது -அப்படிப்பட்ட திருப்தி கூடாது. யதார்த்தமாகப் புரிந்து கொள்ள வேண்டும். திருப்தியின் அடையாளங்கள் தன்னிடம் அனுபவ ரீதியாக இருக்க வேண்டும். உணர்வுகள் சதா மகிழ்ச்சி நிறைந்ததாக இருக்கட்டும் அகத்தோற்ற பொலிவுடன் இருக்கட்டும். தன்னை அகத்தோற்ற பொலிவு உடையவராகப் புரிந்து கொள்கின்றீர்கள் ஆனால் மற்றவர்கள் புரிந்து கொள்ளவில்லை எனில் -இதைத் தான் எல்லாம் தெரிந்தவராக தன்னை நினைப்பது என்று சொல்லப்படுகின்றது. அப்படிப்பட்ட திருப்தி கூடாது ஆனால் யதார்த்தமான அனுவத்தில் மூலமாக திருப்தியான ஆத்மாவாக ஆகுங்கள். திருப்தி என்றால் உள்ளம் மேலும் புத்தி சதா ஓய்வில் இருப்பது. சுகம், மகிழ்ச்சியினுடைய மனோநிலையில் இருப்பது. மகிழ்ச்சியற்ற நிலை என்பது ஏற்படாது. சுகம், மகிழ்ச்சி இருக்கும். அப்படிப்பட்ட திருப்தி மணிகள் சதா தந்தையின் நெற்றியில் நெற்றி மணிகளுக்குச் சமமாக மின்னுகின்றார்கள். எனவே தன்னை சோதனை செய்யுங்கள். திருப்தி என்பது தந்தை மேலும் அனைவரின் ஆசிர்வாதங்களைப் பெற்றுத் தரக் கூடியது. திருப்தியான ஆத்மா ஒவ்வொரு சமயத்திலும் தன்னை தந்தை மேலும் அனைவரின்

ஆசீர்வாதங்கள் என்ற விமானத்தில் பறப்பவறாக அனுபவம் செய்வார். இந்த ஆசிர்வாதங்கள் அவருடைய விமானம் ஆகும். சதா தன்னை விமானத்தில் பறப்பதாக அனுபவம் செய்வார்கள், ஆசிர்வாதங்களைக் கேட்க மாட்டார்கள் ஆனால் ஆசீர்வாதங்கள் அவர் முன்பு தானாகவே வரும். அப்படிப்பட்ட திருப்தி மணி எனில் அர்த்தம் வெற்றி சொரூப தபஸ்வி ஆகும் அல்ப கால வெற்றிகள் அல்ல. இது அழியாத ஆன்மீக வெற்றிகளாகும். அப்படிப்பட்ட, திருப்தி மணிகளை பார்த்துக் கொண்டு இருந்தார். ஒவ்வொருவரும் தன்னைத் தாளே கேளுங்கள் -நான் யார்?

தபஸ்யா வருடத்தினுடைய ஊககம்-உற்சாகம் நன்றாக இருக்கின்றது. ஒவ்வொருவரும் தன்னுடைய சக்திக்கு ஏற்றபடி செய்து கொண்டு இருக்கிறார்கள் மேலும் வரும் நாட்களுக்கும் உற்சாகம் இருக்கின்றது. இந்த உற்சாகம் மிகவும் நன்றாக இருக்கின்றது. இப்போது தபஸ்யா மூலம் அடைந்த பிராப்திகளை தன்னுடைய வாழ்க்கையில் மேலும் அனைவருடைய சம்பந்தம் தொடர்பில் வெளிப்படுத்துங்கள். தனக்குத்தானே அனுபவம் செய்கின்றீர்கள் ஆனால் மனம் புத்தியால் மட்டும் அனுபவம் செய்தீர்கள், இந்த அளவிற்கு செய்யவில்லை. அனுபவத்தை முகம் மேலும் நடத்தை வரை கொண்டு வாருங்கள், சம்பந்தம் தொடர்பு வரை கொண்டு வாருங்கள். எப்போது முதலில் தன்னிடத்தில் பிரத்தியட்சம் ஏற்படுகின்றதோ பிறகு சம்பந்தத்தில் பிரத்தியட்சம் ஏற்படும், பிறகு உலகத்தின் மேடையில் பிரத்தியட்சம் ஏற்படும். அப்போது பிரத்யட்சத்தின் முரசு கொட்டப்படும். எப்படி தங்களுடைய நினைவுச்சின்னமாக சாஸ்திரங்களில் சங்கரின் மூன்றாவது கண் திறந்தவுடன் விநாசம் ஆகியது என்று கூறுகின்றார்கள். எனவே சங்கர் எனில் அர்த்தம் அசரீரி தபஸ்வி ரூபமாகும். விகாரங்கள் என்ற பாம்பை கழுத்தின் மாலையாக ஆக்கி விட்டார். சதா உயர்ந்த மனோநிலை மேலும் உயர்ந்த ஆசனதாரி. இந்த மூன்றாவது கண் என்பது சம்பூர்ண தன்மையின் கண், சம்பன்ன தன்மையின் கண். எப்போது நீங்கள் சம்பன்ன, சம்பூரண ஸ்திதியின் மூலம் உலக மாற்றத்திற்கான சங்கல்பம் செய்கின்றீர்களோ, அப்போது இந்த இயற்கையும் கூட சம்பூர்ண சீற்றத்தினுடைய நடனமாடும். உபத்திரவங்களுடைய நடனமாடும். நீங்கள் உறுதியாக இருப்பீர்கள். அது குழப்பத்தில் இருக்கும். ஏனெனில் இத்தனை முழு உலகத்தினை யார் சுத்தம் செய்வார்கள்? மனித ஆத்மாக்கள் செய்ய முடியுமா? இந்த

காற்று பூமி கடல், நீர் -இவற்றின் சீற்றங்கள் தான் சுத்தம் செய்யும். எனவே அப்படிப்பட்ட சம்பூர்ண தன்மையின் ஸ்திதியை இந்த தபஸ்யா மூலம் உருவாக்குங்கள். எப்போது முதலில் தன்னுடைய சதா சகயோகிகளாக (உதவியாளர்களாக) இருக்கும் கர்மேந்திரியங்கள், மனம் புத்தி-சம்ஸ்காரம் கட்டளையை ஏற்று நடக்கின்றதோ அப்போதே இயற்கையும் கூட தங்களுடைய சங்கல்பத்தின் கட்டளையை ஏற்கும். ஒருவேளை சதா தன்னுடைய சகயோகியாக இருப்பவைகள் கர்மேந்திரியங்கள் மேலும் ஞானேந்திரியங்கள் கட்டளையை ஏற்கவில்லை எனில் இயற்கை எப்படி கட்டளையை ஏற்கும்? எல்லோருக்கும் ஒரே நேரத்தில் ஒரே எண்ணம் உற்பத்தியாகும் அளவிற்கு சக்திசாலி தபஸ்யாவின் உயர்ந்த ஸ்திதி இருக்கட்டும். ஒரு நொடியில் மாற்றம் என்ற எண்ணம் வரட்டும். மேலும் இயற்கை ஆஜர் ஆகி விடும். எப்படி பிராமண ஆத்மாக்கள் நீங்கள் உலகின் அனைத்து ஆத்மாக்களுக்காக ஒரே நேரத்தில் உலக அமைதிக்கான யோகா செய்கின்றீர்கள் இல்லையா? அப்படி அனைவரின் ஒரே சமயத்தின் ஒரே எண்ணம் நினைவுச்சின்னமாக இருக்கின்றது. அப்படி அனைவரின் ஒரே சங்கல்பத்தின் மூலமாக இயற்கை, சீற்றத்தினுடைய நடனத்தை ஆரம்பித்து விடும். எனவே தான் சொல்லப்படுகின்றது –சுய மாற்றத்தின் மூலம் விஷ்வ மாற்றம்! எனவே இந்த பழைய உலகம், புதிய உலகமாக எப்படி மாற்றமடையும்? தாங்கள் அனைவருடைய சக்திசாலியான சங்கல்பத்தின் மூலம், குழுவின் மூலம், கூட்டாக ஒற்றுமையின் மூலம் எப்போது ஒரே சங்கல்பம் உற்பத்தி ஆகுமோ அப்போது மாற்றம் ஏற்படும். எனவே என்ன செய்ய வேண்டும் என்று புரிந்ததா? இதைத் தான் தபஸ்யா என்று சொல்லப்படுகின்றது. நல்லது.

பாப்தாதா வெளிநாட்டுக் குழந்தைகளைப் பார்த்து எப்போதும் மகிழ்ச்சியாக இருக்கின்றார். அதற்காக பாரதவாசிக் குழந்தைகளைப் பார்த்து மகிழ்ச்சியாக இல்லை என்பதல்ல. இப்போது வெளிநாட்டினர் சந்திப்பதற்கான வாய்ப்பு அதனால் கூறுகின்றோம். பாரதத்தின் மேல் தந்தை எப்போதும் மகிழ்ச்சியாக இருக்கின்றார். அதனால் தான் பாரதத்தில் வந்திருக்கின்றார். மேலும் உங்கள் அனைவரையும் பாரதவாசிகளாக ஆக்கி விட்டார். இந்த நேரம் நீங்கள் அனைவரும் வெளிநாட்டினரா அல்லது பாரதவாசிகளா? பாரதவாசியிலும் மதுபன்வாசிகள். மதுபன்வாசி ஆகுவது பிடித்திருக்கின்றதா? இப்போது

விரைவாக சேவையை முடித்து விட்டீர்கள் என்றால் மதுபன்வாசியாக ஆகியே விடுவீர்கள். அனைத்து வெளி நாடுகளிலும் விரைவில் செய்தியைக் கொடுத்து முடித்து விடுங்கள். பின்பு இங்கு வந்தால் மீண்டும் அனுப்ப மாட்டோம். அதற்குள் இடமும் தயாராகி விடும். பாருங்கள் இந்த மைதானம் கூட (அமைதிப் பூங்கா) மிகவும் பெரியது. அங்கு முன்கூட்டியே ஏற்பாடு செய்து விடுவோம். உங்களுக்கு சிரமம் இருக்காது, ஆனால் எப்போது அந்த மாதிரியான நேரம் வருமோ அந்த நேரம் உங்களுடைய பெட்டியை தலைக்கு வைத்துக் கூட தூங்கி விடுவீர்கள். கட்டில் வேண்டும் என்று கேட்க மாட்டீர்கள். அந்த நேரமே வேறாக இருக்கும் இது வேறு மாதிரியான நேரம், இப்போது சேவைக்கு ஒரே நேரத்தில், எண்ணம், சொல், செயல் மூலம் இணைந்து சேவை செய்யும் எண்ணம் வையுங்கள். அப்போதே சேவைக்கான தீவிர வேகம் ஏற்படும். மனதில் சக்தி நிறைந்த நிலை, சொல்லில் ஞானம் நிறைந்த நிலை மேலும் செயலில் அன்பு நிறைந்த நிலை, இந்த மூன்று அனுபவங்களும் ஒரே சமயத்தில் இணைந்து இருக்கட்டும். இதைத் தான் அதிவேகமான சேவை என்று சொல்லப்படுகின்றது.

நல்லது. உடலால் நன்றாக இருக்கின்றீர்கள். மனதால் நன்றாக இருக்கின்றீர்களா? இருந்தாலும் வெகு தொலைவிலிருந்து வந்திருக்கின்றீர்கள் என்றால் பாப்தாதாவும் தொலைவிலிருந்து வந்திருக்கும் குழந்தைகளின் குஷியைப் பார்த்து குஷி அடைகின்றார். இருந்தாலும் தொலைவிலிருந்து வந்திருப்பவர்கள் நன்றாகத்தான் இருக்கின்றீர்கள். ஏனென்றால் விமானத்தில் வருகின்றீர்கள். யார் இந்தக் கல்பத்தில் முதல் தடவையாக வந்திருக்கின்றீர்களோ அவர்களுக்கு பாப்தாதா விசேஷமாக அன்பு நினைவுகள் கொடுக்கின்றார். இருந்தாலும் தைரியம் உடையவர்களாக இருப்பது நல்லது. இங்கிருந்து சென்றவுடனேயே டிக்கட்டிற்கான பணத்தை சேர்த்து வைக்கின்றார்கள். மீண்டும் வந்து விடுகின்றார்கள் போக வேண்டும். போக வேண்டும்... இது கூட நினைவு செய்வதற்கான ஒரு விதியாகும். இங்கு வந்து விட்டீர்கள் என்றால் வெளிநாடு போக வேண்டும் என்று நினைக்கின்றீர்கள். பின்பு செல்வதன் கூடவே வருவதைப் பற்றியும் யோசிக்கின்றீர்கள், இந்த அபுவிற்கு அழகு சேர்ப்பதே இந்த பிராமணர்கள் தான் என்று அரசாங்கமே நினைக்கும் மாதிரியான நேரமும் வரும். நல்லது.

நாலா புறமுமுள்ள அனைத்து மகான் திருப்தியான ஆத்மாக்களுக்கு, எப்போதும் மகிழ்ச்சி நிறைந்து கவலையற்று இருக்கும் உயர்ந்த ஆதிமாக்களுக்கு, எப்போதும் ஒரே நேரத்தில் மூன்று சேவைகளும் செய்யக் கூடிய அதி வேகமாகச் செய்யும் சேவாதாரி ஆத்மாக்களுக்கு, எப்போதும் உயர்ந்த நிலை என்ற ஆசனத்தில் அமர்ந்திருக்கும் தபஸ்வி ஆத்மாக்களுக்கு, பாப்தாதாவின் அன்பு நினைவுகளும் நமஸ்காரமும்.

**பார்டிகளுடன் அவ்யக்த பாப்தாதாவின் சந்திப்பு: குரூப்-1: அனைவரும் தங்களை புனித அன்னப்பறவை என்று நினைக்கின்றீர்களா?** புனித அன்னப்பறவையின் முக்கியமான காரியம் என்ன? ஒவ்வொருவரும் கூறினார்கள் என்னென்ன சிறப்புகள் கூறினீர்களோ அவை நடைமுறை செயலில் வருகின்றனவா? ஏனென்றால் பிராமணர்கள் உங்களைத் தவிர வேறு யார் புனித அன்னப்பறவையாக இருக்க முடியும்? எனவே யோசிக்காமல் உடனே கூறுங்கள். எப்படி தந்தை எப்போதும் தூய்மையாக இருக்கின்றாரோ, எப்போதும் அனைத்து சக்திகளையும் காரியங்களில் கொண்டு வருகின்றாரோ அதே போல் நீங்கள் புனித அன்னப்பறவைகள் கூட அனைத்து சக்திகளையும் நடைமுறையில் கொண்டு வரும் தூய்மையானவர்களாக இருந்தீர்கள் மேலும் இருப்பீர்கள். மூன்று காலமும் நினைவு இருக்கின்றது அல்லவா? பாப்தாதா குழந்தைகள் அனேக தடவை நடித்த நடிப்பைப் பார்த்து மகிழ்ச்சி அடைகின்றார். எனவே சுடினமானதாகத் தோன்றவில்லை இல்லையா? மாஸ்டர் சர்வ சக்திவானின் எதிரில் ஒருபோதும் கடினம் என்ற வார்த்தை கைவில் கூட வர முடியாது. பிராமணர்களின் அகராதியில் கடினம் என்ற வார்த்தை இருக்கின்றதா? ஆங்காங்கே சிறிய எழுத்துக்களில் இல்லை தானே? மாயாவைப் பற்றியும் முழுமையாகத் தெரிந்தவர்கள் ஆகி விட்டீர்கள் இல்லையா? எங்கே ஞானம் நிறைந்து இருக்கின்றதோ அங்கே தோல்வி ஏற்பட முடியாது. தோல்வி அடைவதற்கான காரணம் என்ன? ஒருவேளை யாரேனும் தெரிந்தும் கூட தோல்வி அடைகின்றார்கள் எனில் அவர்களை என்னவென்று சொல்வது? எந்த ஒரு விஷயம் நடந்தாலும் தோல்வி அடைவதற்கான காரணம் என்னவென்றால் ஏதேனும் விஷயத்தின் மனப்பாதிப்பின் உணர்வில் வந்து விடுகின்றீர்கள். பீலிங்'ன் ப்ளு (feeling flu) காய்ச்சல் ஏற்பட்டு

விடுகின்றது. ப்ளூ காய்ச்சல் என்ன செய்யும் என்று தெரியும் இல்லையா? பலஹீனமாக ஆக்கி விடும். அதன் காரணமாக விஷயம் சிறியதாக இருந்தாலும் பெரியதாக ஆகி விடுகின்றது. எனவே இப்போது நிரம்பியவராக (full) ஆகுங்கள். தோல்வி (fail) அடையக் கூடாது. தேர்ச்சி பெற வேண்டும். எந்த விஷயம் நடந்தாலும் அதைக் கடந்து (பாஸ் செல்லுங்கள். அப்போது பாஸ் வித் ஹானர் மரியாதையுடன் தேர்ச்சி ஆகி விடுவீர்கள். எனவே 'பாஸ்' செய்ய வேண்டும் (கடந்து செல்ல வேண்டும்), 'பாஸ்' ஆக வேண்டும் (தேர்ச்சி), 'பாஸ்' (அருகாமையில்) இருக்க வேண்டும். பாப்தாதா மேல் எனக்கு இருக்கும் அன்பு போல் வேறு யாருக்கும் கிடையாது என்று மிகவும் ஆணித்தரமாகக் கூறுகின்றீர்கள். அப்படியானால எப்போது அன்பு இருக்கின்றதோ அப்போது உடன் அருகில் இருக்க வேண்டுமா அல்லது தூரமாக இருக்க வேண்டுமா? எனவே உடன் அருகில் இருக்க வேண்டும் மற்றும் தேர்ச்சி பெற வேண்டும். இங்கிலாந்தைச் சேர்ந்தவர்கள் பாப்தாதாவின் ஆசைகளை நிறைவேற்றுபவர்கள் தானே. அனைத்தையும் விட பாபாவின் நம்பர் ஒன் நல்ல ஆசை எது? இங்கிலாந்தைச் சேர்ந்தவர்களிடம் முக்கியமாகக் கேட்கின்றோம். மிகப் பெரிய மைக் கொண்டு வர வேண்டும். அவர் தந்தையைப் பிரத்யட்சம் செய்வதற்கு பொறுப்பானவராக ஆக வேண்டும். மேலும் தந்தையின் அருகில் வர வேண்டும். இப்போது இங்கிலாந்தில் மற்றும் அமெரிக்காவில் மேலும் மற்ற வெளிநாட்டு தேசங்களில் அவசியம் மைக் உருவாகுவார்கள், ஆனால் ஒன்று சகயோகி, மற்றொன்று சமீபத்தில் இருக்கக்கூடிய சகயோகி. எனவே அப்படிப்பட்ட மைக் தயார் செய்யுங்கள். மற்றபடி சேவையில் நன்றாக வளர்ச்சி ஏற்பட்டுக் கொண்டு இருக்கின்றது. ஏற்பட்டுக் கொண்டே இருக்கும். நல்லது. ரஷ்யாவைச் சேர்ந்தவர்கள் சின்னக் குழந்தைகள் ஆனால் அதிர்ஷ்டசாலிகள். உங்களுக்குத் தந்தை மேல் எவ்வளவு அன்பு இருக்கின்றது. நல்லது பாப்தாதாவும் குழந்தைகளின் தைரியத்தைப் பார்த்து குஷியடைகின்றார். இப்போது கஷ்டப்பட்டு (புருஷார்த்தம்) உழைப்பது மறந்து விட்டது இல்லையா. நல்லது.

**குரூப்-2 (சாரம்): பாப்தாதாவுடைய அருகிலிருக்கும் ஆத்மாக்கள் என அனுபவம் செய்கிறீர்களா?**

அருகிலிருப்பதன் அடையாளம் -சமம்! பிரம்மாபாபாவின் சிரேஷ்ட சங்கல்பம் என்னவாக இருந்தது? தந்தை சொல்வதை செய்வது! உறுதியான எண்ணமே வெற்றிக்கு ஆதாரம். எண்ணம், சொல், செயலில் எந்தளவு அருகில் இருக்கிறேன் என்பதை சோதனை செய்யுங்கள். எவ்வாறு பிரம்மாபாபா நடைமுறையில் செய்து காட்டினார் -ஒரு தந்தையைத் தவிர வேறு யாருமில்லை என்பதை! எனில் பாப்-சமான் ஆகுபவர்கள் இதைப் பின்பற்ற வேண்டும். மாயாஜீத் ஆவதற்கான திட சங்கல்பம் இருந்தது என்றால் மாயாவால் ஒன்றும் செய்ய முடியாது. ஒன்றும் புதிதல்ல, எத்தனை முறை நாம் வெற்றி அடைந்துள்ளோம்.

**குரூப்-3 (சாரம்): இந்த டிராமாவில் சிரேஷ்ட சங்கம யுகத்தின் சிரேஷ்ட ஆத்மாக்கள் என்ற அனுபவம் செய்கிறீர்களா?**

சங்கமயுத்தில்தான் வரதாதா வரதானங்களால் புத்தி ரூப பையை நிரப்புகிறார். வரதானங்களின் பொக்கிஷங்களின் விசேஷமாவது, எந்தளவு நீங்கள் பிறருக்குத் தருகிறீர்களோ, அந்தளவு தானாகவே உங்களுக்குள் நிரம்பிக் கொண்டேயிருக்கும்.

தந்தையைப் போல குழந்தைகளும் இரக்க மனம் உடையவர்கள். ஆதலால் எத்தனை ஆத்மாக்கள் மீது இரக்கம் காட்டினேன் என்பதைச் சோதியுங்கள்.

மாஸ்டர் சர்வ சக்திவான் ஆவதற்கான விதி -போகும்போதும் வரும்போதும் நினைவின் சக்தி மற்றும் சேவையின் சக்தி அளிப்பதில் பிஸி ஆக இருப்பதுதான். பிஸி ஆக இருப்பது என்றாலே மாயாஜீத் ஆக இருப்பது. மனம் பிஸி ஆக இருந்தது என்றால் மனதை வென்றவர் மாயாவை வென்றவராகி விடுவார்.

**குரூப்-4 (சாரம்): எல்லோரும் தன்னை இச்சமயத்தில் சிம்மாசனதாரி ஆத்மா என அனுபவம் செய்கிறீர்களா?**

ஆத்மாவின் அழியாத சிம்மாசனமும் நினைவிலுள்ளது மற்றும் இதய சிம்மாசனமும் நினைவிலுள்ளது. ஒருவேளை அழியாத சிம்மாசனத்தை மறந்தீர்கள் என்றால் தேக உணர்வில் வந்து விடுவீர்கள், பின்பு பர-வசமாகி விடுவீர்கள். சதா இது நினைவிருக்கட்டும் -நான் இப்போது இந்த உடலின் எஜமானன் என்பது. எஜமானன் தனது படைப்பின் வசமாகி விட்டார் எனில் மோகத்தில் மயங்கி விட்டார் என்பதாகும். சுயம் பகவான் உங்களை ஸ்திதியின்

ஆசனத்தில் அமர வைக்கிறார் எனில் அமர வேண்டுமல்லவா! நல்லது. ஓம் சாந்தி.

வரதானம்: சங்கமயுகத்தின் ஒவ்வொரு நேரத்தையும் உற்சவத்தின் வடிவத்தில் கொண்டாடக்கூடிய சதா ஊக்கம் உற்சாகம் நிறைந்தவராக ஆகுக!

எந்த ஒரு உற்சவமும் ஊக்கம் உற்சாகத்திற்காகத் தான் கொண்டாடுகின்றார்கள். பிராமணக் குழந்தைகள் உங்களுடைய வாழ்க்கையே உற்சாகம் நிரம்பிய வாழ்க்கையாகும். எப்படி இந்த உடலில் மூச்சு இருந்தால் வாழ்க்கை இருக்கின்றது. அதே போல் பிராமண வாழ்க்கையின் மூச்சே ஊக்கம், உற்சாகம் தான். எனவே சங்கமயுகத்தின் ஒவ்வொரு நேரமும் உற்சவம் தான் ஆனால் மூச்சின் வேகம் எப்போதும் ஒரே மாதிரியாகவும் (ஏக்ரஸ்), தடையற்றும் இருக்க வேண்டும். ஒருவேளை மூச்சின் வேகம் மிக அதிகமாகவோ அல்லது குறைவாகவோ ஆகி விட்டால் அதை யதார்த்த வாழ்க்கை என்று கூற முடியாது. எனவே பிராமண வாழ்க்கையின் ஊக்கம் உற்சாகத்தின் வேகம் ஒரே மாதிரியாக தங்குதடையின்றி இருக்கின்றதா என்பதை சோதனை செய்யுங்கள்.

சுலோகன்: அனைத்து சக்திகளின் பொக்கிஷங்களினால் நிரம்பியிருப்பதுதான் பிராமண சொரூபத்தின் விசேஷத் தன்மையாகும்!

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 03.04.1991 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# அனைத்து எல்லைக்கு உட்பட்டவைகளிலிருந்து விலகி எல்லைக்கு அப்பாற்பட்ட வைராக்கி ஆகுங்கள்!

இன்று கல்பத்திற்குப் பிறகு மீண்டும் சந்திப்பதற்காக அனைத்துக் குழந்தைகளும் இவ்வுலகில் தன்னுடைய இனிமையான வீடாகிய மதுபன்னில் வந்து சேர்ந்து விட்டீர்கள். இவ்வுலகின் இனிமையான வீடு மதுபன் தான். இங்கு தான் தந்தை மற்றும் குழந்தைகளின் ஆன்மீகச் சந்திப்பு நடக்கிறது. அப்படி அனைத்துக் குழந்தைகளும் சந்திப்பு விழாவில் வந்திருக்கிறீர்கள். இந்த தந்தை மற்றும் குழந்தைகளின் சந்திப்பு சங்கமயுகத்தில் மட்டும் தான் நடக்கிறது. மேலும் மதுபன்னில் மட்டும் தான் நடக்கிறது. எனவே அனைவரும் மதுபன்னிற்கு ஓடி வந்து சேர்ந்து விட்டீர்கள். மதுபன் சாகார ரூபத்திலும் பாப்தாதாவின் சந்திப்பை செய்விக்கிறது. மேலும் கூடவே சுலபமான நினைவு மூலமாக அவ்யக்த சந்திப்பையும் செய்விக்கிறது. ஏனென்றா மதுபன் பூமிக்கு ஆன்மீக சந்திப்பு, சாகார ரூப சந்திப்பின அனுபவம் செய்விப்பதற்கான வரதானம் கிடைத்திருக்கிறது. வரதானி பூமி ஆன காரணத்தினால் சந்திப்பின் அனுபவத்தையும் எளிதாகச் செய்கிறீர்கள். வேறு எந்த இடத்திலும் ஞானக் கடல் மற்றும் ஞான நதிகளின் சந்திப்பு நடப்பதில்லை. கடல் மற்றும் நதிகளின் சந்திப்பிற்கான இடம் இது ஒன்றே ஒன்று தான். அந்த மாதிரி மஹான் பூமியில் வந்திருக்கிறீர்கள். அப்படி நினைக்கிறீர்களா?

தபஸ்யா வருடத்தில் விசேஷமாக இந்தக் கல்பத்தில் முதல் தடவையாக சந்திக்கும் குழந்தைகளுக்கு பொன்னான வாய்ப்பு கிடைத்திருக்கிறது. எவ்வளவு அதிர்ஷ்டசாலிகள் நீங்கள். தபஸ்யா

வின் ஆரம்பத்திலேயே புதுக்க குழந்தைகளுக்கு அதிகப்படியான பலம் கிடைத்திருக்கிறது. அப்படி ஆரம்பத்திலேயே இந்த அதிகப்படியான பலம் வரும் நாட்களில் முன்னேறுவதற்கு உதவியாக இருக்கும். எனவே புதுக் குழந்தைகள் முன்னேறுவதற்கு நாடகமும் உதவி செய்திருக்கிறது. எனவே நாங்கள் பின்னால் வந்திருக்கிறோம் என்ற புகார் கூற முடியாது. இல்லை, தபஸ்யா வருடத்திற்கும் வரதானம் கிடைத்திருக்கிறது. தபஸ்யா வருடத்தில் வரதானி பூமியில் வருவதற்கு அதிகாரம் கிடைத்திருக்கிறது, வாய்ப்புக் கிடைத்திருக்கிறது. இந்த அதிகப்படியான பாக்கியம் குறைந்தது அல்ல. இந்த வருடத்தின், வரதான பூமியின் மற்றும் தன்னுடைய முயற்சி என்ற மூன்று வரதானங்களும் விசேஷமாகப் புதுக் குழந்தைகள் உங்களுக்கு கிடைத்திருக்கிறது. அப்படியானால் நீங்கள் எவ்வளவு அதிர்ஷ்டசாலிகள். இவ்வளவு அழியாத பாக்கியத்தின் போதையை எப்பொழுதும் கூடவே வைத்துக் கொள்ளுங்கள். இங்கே இருக்கும்பொழுது மட்டும் போதை இருக்கிறது என்று அப்படி இருக்க வேண்டாம் ஆனால் அழியாத தந்தை, நீங்கள் உயர்ந்த ஆத்மாக்கள் அழியாதவர்கள், மேலும் பாக்கியமும் அழியாதது. அழியாத பாக்கியத்தை அழியாததாக வைத்துக் கொள்ளுங்கள். இது இயல்பாக கவனம் கொடுப்ப .தற்கான விஷயம் மட்டும் தான். டென்ஷன் நிரம்பிய அட்டென்ஷன் வேண்டாம். சகஜமான அட்டென்ஷன் இருக்கட்டும். மேலும் கடினமானது என்ன தான் இருக்கிறது? என்னுடைய தந்தை யார் என்று தெரிந்து கொண்டீர்கள், ஏற்றுக் கொண்டீர்கள். அப்படி தெரிந்து கொண்டீர்கள், ஏற்றுக் கொண்டீர்கள், அனுபவம் செய்து விட்டீர்கள், அதிகாரம். கிடைத்து விட்டது, பின்பு கடினமானது என்ன இருக்கிறது. எனக்கு இருப்பதே ஒரு தந்தை மட்டும் தான் -இந்த அனுபவம் ஆகிக் கொண்டே இருக்கட்டும். இது தான் முழு ஞானம்.

ஒரு பாபா என்ற வார்த்தையில் முதல், இடை, கடையின் ஞானம் அடங்கியிருக்கிறது. ஏனென்றால் விதை அல்லவா? வார்த்தை, விதையில் முழு மரமும் அடங்கியிருக்கும் இல்லையா. விஸ்தாரம் மறந்து விட முடியும், ஆனால் சாரம் ஆன ஒரு பாபா இதை நினைவு வைத்துக் கொள்வது கடினம் அல்ல. எப்பொழுதும் சுலபம் தானே. எப்போதாவது சுலபம், எப்போதாவது கடினம் அப்படி இல்லையே எப்பொழுதும் பாபா என்னுடையவரா? அல்லது எப்பொழுதாவது

என்னுடையவரா? எப்பொழுது பாபா எப்பொழுதும் என்னுடையவரோ அப்பொழுது நினைவும் எப்பொழுதும் சுலபம் தான். எந்த கடினமான விஷயமும் இல்லை. பகவான் கூறினார். நீங்கள் என்னுடையவர் மேலும் நீங்கள் கூறினீர்கள். நீங்கள் என்னுடையவர் என்று பின்பு என்ன கடினமானது இருக்கிறது? எனவே விசேஷமாகப் புதுக் குழந்தைகள் இன்னும் முன்னேறுங்கள். இப்பொழுது கூட முன்னேறுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. இன்னும் கடைசி முடிவிற்கான விசில் அடிக்கப்படவில்லை. எனவே பறந்து செல்லுங்கள் மற்றவர்களையும் பறக்க வைத்துக் கொண்டே இருங்கள். இதற்கான விதி வீணானதை மிச்சப்படுத்துங்கள். சேமிப்புக் கணக்கை, இருப்புக் கணக்கை அதிகரித்துக் கொண்டே இருங்கள். ஏனென்றால் 63-ஜென்மங்களாக சேமிக்கவே இல்லை ஆனால் இழந்தீர்கள். அனைத்துக் கணக்குகளையும் வீணாக இழந்து இல்லாமல் செய்து விட்டீர்கள். பொக்கிஷத்தையும் இழந்தீர்கள், எண்ணத்தின் பொக்கிஷத்தையும் இழந்தீர்கள், நேரத்தின் பொக்கிஷத்தையும் இழந்தீர்கள் சுவாசத்தின் குணங்களின் பொக்கிஷத்தையும் இழந்தீர்கள், சக்திகளின் பொக்கிஷத்தையும் இழத்தீர்கள், ஞானத்தின் பொக்கிவுத்தையும் இழந்தர்கள். எத்தனை கணக்குகள் காலியாகி விட்டன. இப்பொழுது இந்த அனைத்துக் கணக்குளிலும் சேமிக்க வேண்டும். சேமிக்க வேண்டிய நேரமும் இது தான், மேலும் சேமிப்பதற்கான விதியும் தந்தையிடமிருந்து சுலபமாகக் கிடைத்துக் கொண்டிருக்கிறது. அழியக்கூடிய பொக்கிஷங்கள் அனைத்தும் செலவு செய்வதால் குறையும். ஆனால் இந்த அனைத்துப் பொக்கிஷங்களும் எவ்வளவு தனக்காகவும், மேலும் மற்றவர்களுக்காகவும் நல்ல உள் உணர்வோடு காரியத்தில் ஈடுபடுத்தினால் அந்த அளவு சேர்ந்து கொண்டே இருக்கும், அதிகரித்துக் கொண்டே இருக்கும். இங்கு பொக்கிஷங்களைக் காரியத்தில் ஈடுபடுத்த வேண்டும், இது தான் சேமிப்பதற்கான விதி. அங்கு வெளி உலகில் பாதுகாப்பாக வைத்துக் கொள்வது சேமிப்பதற்கான விதியாகும், இங்கு ஈடுபடுத்துவது சேமிப்பதற்கான விதியாகும். வித்தியாசம் இருக்கிறது. நேரத்தை தனக்காகவும் அல்லது மற்றவர்களுக்காகவும் நல்ல காரியத்தில் ஈடுபடுத்தினீர்கள் என்றால் சேமிப்பாகிக் கொண்டே இருக்கும். ஞானத்தைக் காரியத்தில் ஈடுபடுத்துங்கள். அப்படி குணங்களையும், சக்திகளையும் எவ்வளவு ஈடுபடுத்துவீர்களோ அவ்வளவு அதிகரிக்கும். எப்படி அவர்கள்

பாதுகாப்பு பெட்டகத்தில் (லாக்கரில்) வைத்து விட்டு என்னிடம் நிறைய சேமிப்பு இருக்கிறது என்று நினைக்கிறார்கள். அப்படி நீங்கள் நினைக்காதீர்கள். என்னுடைய புத்தியில் ஞானம் நிறைய இருக்கிறது, குணங்களும் என்னிடம் நிறைய இருக்கிறது. சக்திகளும் நிறைய இருக்கிறது என்று பூட்டி வைக்காதீர்கள், உபயோகப்படுத்துங்கள். புரிந்ததா? சேமிப்பதற்கு சேர்ப்பதற்கான விதி என்ன? காரியத்தில் ஈடுபடுத்துவது. தனக்காகவும் உபயோகியுங்கள். இல்லையென்றால் லூஸ் (வீணாகி) ஆகி விடும். சில குழந்தைகள் அனைத்துப் பொக்கிஷங்களும் தனக்குள் மிக நிரம்பி இருக்கிறது என்று நினைக்கிறார்கள். நிரம்பியிருப்பதற்கான அடையாளம் என்ன? அதனுடைய அடையாளம் தனக்காகவும் மேலும் மற்றவர்களுக்காகவும் தேவையான நேரத்தில் காரியத்தில் கொண்டு வருவது. காரியத்தில் வருவதே இல்லை, இருந்தாலும் மிகவும் சேமிப்பாக இருக்கிறது என்று கூறுகிறார்கள். இதை சேமிப்பதற்கான சரியான விதி என்று கூற முடியாது. எனவே ஒருவேளை சரியான விதி இல்லை என்றால் சமயத்தில் சம்பூர்ணத்தின் ஸித்தி கிடைக்காது ஏமாற்றம் தான் கிடைக்கும். ஸித்தி கிடைக்காது. குணங்களையும், சக்திகளையும் காரியத்தில் ஈடுபடுத்தினீர்கள் என்றால் அதிகரித்துக் கொண்டே இருக்கும். எனவே சேமிப்பதற்கான விதி. அதிகரிப்பதற்கான விதியைக் கடைப்பிடித்துக் கொண்டே இருங்கள். பின்பு வீணான கணக்கு தானாக மாறி பயனுள்ளதாகி விடும். பக்தி மார்க்கத்தில் கூட இந்த நியமம் இருக்கிறது. எவ்வளவு ஸ்தூலமான செல்வம் உங்களிடம் இருக்கிறது அதை தானம் செய்தால் பயனுள்ள காரியங்களில் உபயோகத்தால் அதிகரிக்கும் என்று கூறுகிறார்கள். பக்தியில் பயனுள்ளதாக உபயோகப்படுத்துவதற்கு எவ்வளவு ஊக்கம் உற்சாகத்தை அதிகரிக்கிறார்கள். எனவே நீங்களும் இந்த தபஸ்யா வருடத்தில் எவ்வளவு இழந்தோம் என்று மட்டும் சோதனை செய்யாதீர்கள். வீணாக இழந்தீர்கள் அது வேறு விஷயம், ஆனால் எவ்வளவு பயனுள்ள காரியத்தில் ஈடுபடுத்தினீர்கள்? என்று சோதனை செய்யுங்கள். குணமும் தந்தையால் கொடுக்கப்பட்டது கனவில் கூட என்னுடைய குணம் இது, என்னுடைய சக்தி என்று கூறி தவறு செய்யாதீர்கள். இது தந்தையால் கொடுக்கப்பட்டது எனவே பிரபுவால் கொடுக்கப்பட்டதை பரமாத்மாவால் கொடுக்கப்பட்டதை என்னுடையது என்று நினைப்பது கூட பெரிய பாவம். அனேக தடவைகள் அனேக

குழந்தைகள் என்னுடைய இந்த குணத்தை உபயோகப்படுத்துவதில்லை என்னிடம் இந்த சக்தி இருக்கிறது, எனது புத்தி மிகவும் நல்லது இதை உபயோகிப்பது இல்லை என்று சாதாரண வார்த்தையில் கூறவும் செய்கிறார்கள் நினைக்கவும் செய்கிறார்கள் என்னுடைய துணி எங்கிருந்து வந்தது? என்னுடையது என்றதும் கறை படிந்துவிட்டது. பக்தியில் கூட 63-ஜென்மங்களாக என்னுடையது என்று நினைக்காதே, உன்னுடையது என்று நினை என்று அறிவுரை கூறி வந்திருக்கிறார்கள் ஆனால் அப்படி இருந்தும் ஏற்றுக் கொள்ளவில்லை. எனவே மார்க்கத்திலும் சொல்வது உன்னுடையது ஆனால் உணர்வது என்னுடையது, இந்த ஏமாற்று வேலை இங்கே நடக்காது. எனவே பிரபு பிரசாதத்தை தன்னுடையது என்று நினைப்பது அபிமானத்தில் வருவது மற்றும் அவமானம் செய்வது. 'பாபா' 'பாபா' என்ற வார்த்தையை எங்கேயும் மறக்காதீர்கள். பாபா சக்தி கொடுத்திருக்கிறார், புத்தி கொடுத்திருக்கிறார், பாபாவின் காரியம், பாபாவின் சென்டர், அனைத்தும் பாபாவினுடையது என்றிருக்கட்டும். என்னுடைய சென்டர், நான் கட்டினேன், எனக்கு அதிகாரம் இருக்கிறது என்று அப்படி நினைக்காதீர்கள். 'என்னுடையது' என்ற வார்த்தை எங்கிருந்து வந்தது? உங்களுடையதா என்ன? மூட்டை கட்டி பாதுகாப்பாக வைத்திருக்கிறீர்களா என்ன? சில குழந்தைகள் நான் சென்டருக்காக வீடு கட்டிக் கொடுத்தேன். எனவே எனக்கு அதிகாரம் இருக்கிறது என்று போதையைக் காண்பிக்கிறார்கள் ஆனால் யாருடைய சென்ட்டரைக் கட்டினீர்கள்? பாபாவுடைய சென்டர் தான். அப்படியானால் எப்பொழுது பாபாவிற்கு அர்ப்பணம் செய்து விட்டீர்களோ அப்பொழுது உங்களுடையது என்று எங்கிருந்து வந்தது? என்னுடையது என்று எங்கிருந்து வந்தது? எப்பொழுது புத்தி மாறுகிறதோ அப்பொழுது என்னுடையது என்று கூறுகிறார்கள். என்னுடையது என்னுடையது என்பது தான் அழுக்காக்கியது. மேலும் அழுக்காக வேண்டுமா? எப்பொழுது பிராமணன் ஆனீர்களோ அப்பொழுது தந்தையிடம் கொடுத்த முதல் வாக்குறுதி என்ன? புதியவர்கள் உறுதிமொழி கொடுத்தீர்களா? அல்லது பழையவர்கள் கொடுத்தீர்களா? பழையவர்கள் கூட இப்பொழுது புதியவர்கள் ஆகி வந்திருக்கிறீர்கள் இல்லையா? நிச்சய புத்தியின் படிவத்தை நிரப்பி கையெழுத்திட்டு வந்திருக்கிறீர்கள் இல்லையா? அப்படி அனைவரின் முதல் உறுதிமொழியே உடல், மனம், பொருள் மற்றும் புத்தி அனைத்தும்

உன்னுடையது என்பது தான். இந்த உறுதி மொழியை அனைவரும் கொடுத்தீர்கள் இல்லையா?

இப்பொழுது உறுதிமொழி கொடுப்பவர்கள் என்றால் கையைத் தூக்குங்கள். எதிர்காலத்திற்காக கொஞ்சம் வைத்துக் கொள்ள வேண்டும், அனைத்தையும் எப்படி தந்தையிடம் கொடுப்பது? கொஞ்சம் தனியாக வைக்க வேண்டும். இது தான் புத்திசாலித்தனமான செயல் என்று நினைப்பவர்கள் கையைத் தூக்குங்கள். கொஞ்சம் தனியாக வைத்திருக்கிறீர்களா? கவனம், நம்மை யார் பார்த்தார் என்று பின்பு சொல்லாதீர்கள். இவ்வளவு கூட்டத்தில் யார் பார்க்க முடியும்? ஆனால் தந்தையிடம் தொலைக்காட்சி மிகவும் தெளிவாக இருக்கிறது. அதிலிருந்து மறைக்க முடியாது. எனவே நன்றாக யோசித்து, புரிந்து கொஞ்சம் வைத்துக் கொள்ள வேண்டும் என்றால் வைத்துக் கொள்ளுங்கள். பாண்டவர்கள் என்ன நினைக்கிறீர்கள்? கொஞ்சம் வைத்துக் கொள்ள வேண்டுமா? நன்றாக யோசியுங்கள். யாருக்கு வைத்துக் கொள்ள வேண்டுமோ? இப்பொழுது கை தூக்குங்கள், தப்பித்துக் கொள்வீர்கள். இல்லையென்றால் இந்த நேரம், இந்த சபை, நீங்கள் தலையை அசைத்தது எல்லாமே பின்பு தென்படும். ஒருபோதும் என்னுடையது என்பதை வைக்காதீர்கள். தந்தை என்று கூறினீர்கள் என்றால் பாவம் போய்விட்டது. தந்தை என்று கூறவில்லை என்றால் பாவமாகி விடுகிறது. பாவத்தின் வசம் ஆகி விட்டீர்கள் என்றால் புத்தி வேலை செய்வதில்லை. எவ்வளவு தான் புரிய வைத்தாலும் இது தான் சரி என்று கூற மாட்டார்கள். இது நடக்கத்தான் வேண்டும் இதைச் செய்யத்தான் வேண்டும் என்று நினைக்கிறார்கள். தந்தைக்கும் இரக்கம் ஏற்படுகிறது. ஏனென்றால் அந்த நேரம் பாவ வசமாகி இருக்கிறார்கள். தந்தை மறந்து போனால் பாவம் வந்து விடுகிறது. மேலும் பாவ வசமானதினால் என்ன கூறுகிறார்கள் என்ன செய்கிறார்கள்? அதை அவர்களே நாம் என்ன செய்கிறோம் என்று புரிவது இல்லை. ஏனென்றால் மற்றவைகள் வசமாகி இருக்கிறார்கள். எனவே எப்பொழுதும் ஞானத்தில் தெளிவில் இருங்கள். பாவத்தின் ஆவேசத்தில் வராதீர்கள். இடை இடையே மாயாவின் இந்த அலை வருகிறது. புதியவர்கள் நீங்கள் இந்த விஷயங்களில் பாதுகாப்பாக இருங்கள். என்னுடையது என்னுடையது என்பதில் போகாதீர்கள். கொஞ்சம் பழையவர்கள் ஆகி விட்டால் இந்த என்னடைய, என்னுடைய

என்ற மாயா அதிகமாக வருகிறது. என்னுடைய கருத்து, புத்தியே என்னுடையது இல்லை என்றால் என்னுடைய வந்தது? என்னுடையது. என்னுடையது என்பதில் போகாதீர்கள் கருத்து எங்கிருந்து அப்படி சேமிப்பதற்கான விதி என்ன என்று புரிந்து கொண்டீர்களா? காரியத்தில் ஈடுபடுத்துங்கள் பயனுள்ளதாக்குங்கள். தன்னுடைய ஈஸ்வர்ய சம்ஸ்காரத்தையும் காரியத்தில் ஈடுபடுத்தினீர்கள் என்றால் வீணான சம்ஸ்காரம் தானாகச் சென்று விடும். ஈஸ்வர்ய சம்ஸ்காரத்தைக் காரியத்தில் கொண்டு வரவில்லை என்றால் அவை பாதுகாப்பு பெட்டகத்தில் (லாக்கரில்) இருக்கின்றன. மேலும் பழையவை (சம்ஸ்காரம்) காரியம் செய்து கொண்டே இருக்கின்றன. அனேகருக்கு வங்கியில் அல்லது அலமாரியில் வைக்கும் பழக்கம் இருக்கிறது. மிகவும் நல்ல துணி இருக்கும், பணம் இருக்கும், பொருட்கள் இருக்கும். ஆனாலும் பழையதை உபயோகித்துக் கொண்டிருப்பார்கள். பழைய பொருட்கள் மேல் அவர்களுக்கு அன்பு இருக்கும் மேலும் அலமாரியில் வைத்த பொருட்கள் அலமாரியிலேயே இருந்து விடும் மேலும் பழையவைகளினாலேயே காரியம் நடந்து கொண்டிருக்கும். அப்படி பழைய சம்ஸ்காரத்தை உபயோகப்படுத்திக் கொண்டே ஈஸ்வரிய சம்ஸ்காரத்தை உபயோகப்படுத்திக் கொண்டே ஈஸ்வரிய சம்ஸ்காரத்தை புத்தி என்ற லாக்கரில் வைத்திருக்கிறோம் என்று அந்த மாதிரி இருக்கக் கூடாது. காரியத்தில் ஈடுபடுத்துங்கள் பயனுள்ளதாக்குங்கள். பயனுள்ளதாக எவ்வளவு உபயோகித்தேன் என்ற சார்ட் வையுங்கள். பயனுள்ளதாக உப யோகிப்பது என்றால் சேமிப்பது மற்றும் அதிகரிப்பது. மனம் மூலமாக வார்த்தை மூலமாக, உறவு நெருக்கம் மூலமாக. காரியங்கள் மூலமாக, தன்னுடைய உயர்ந்த சங்கத்தின் மூலமாக மற்றும் தன்னுடைய உயர்ந்த உள் உணர்வு மூலமாக பயனுள்ளதாக ஆக்குங்கள். என்னுடைய உள் உணர்வோ நன்றாகத்தான் இருக்கிறது என்பதல்ல ஆனால் எவ்வளவு பயனுள்ளதாக உபயோகித்தீர்கள்? என்னுடைய சம்ஸ்காரமோ அமைதியாகத் தான் இருக்கிறது, ஆனால் எவ்வளவு பயனுள்ளதாக காரியத்தில் ஈடுபடுத்தினீர்கள்? எனவே இந்த விதியைக் கடைப்பிடிப்பதினால் சம்பூர்ணத்தின் ஸித்தி சுலபமாக அனுபவம் செய்து கொண்டே இருப்பீர்கள் பயனுள்ளதாக ஆக்குவது தான் வெற்றிக்கான சாவியாகும். புரிந்ததா என்ன செய்ய வேண்டும் என்று? நான் நல்ல குணம் நிறைந்தவன், நான் நன்கு சொற்பொழிவாற்ற

முடியும், நான் நல்ல ஞானி, யோகாவும் நன்றாக இருக்கிறது என்று உங்கள் மேலேயே குஷியடைந்து கொண்டு மட்டும் இருக்காதீர்கள். ஆனால் நன்றாக இருக்கிறது என்றால் உபயோகியுங்கள். அதைப் பயனுள்ளதாக்குங்கள். காரியத்தில் ஈடுபடுத்துங்கள் மேலும் அதிகரியுங்கள் இது தான் சுலபமான விதி. கடினமில்லாமல் அதிகரித்துக் கொண்டே இருக்கும். மேலும் 21-ஜென்மங்கள் உட்கார்ந்து சாப்பிடலாம். எங்கும் கடின உழைப்பு தேவையிருக்காது.

பரந்த சபையாக இருக்கிறது (ஓம்சாந்தி பவன் நிரம்பி விட்டது) எனவே அனேகர் கீழே மெடிட்டேஷன் ஹால் மற்றும் சிறிய ஹாலில் அமர வேண்டியதானது. இடம் இல்லாமல் ஆனது) சாஸ்திரத்தில் இருக்கும் உங்களுடைய நினைவுச்சின்னம், அதிலேயும் இப்படி வர்ணித்திருக்கிறார்கள் -முதலில் டம்ளரில் தண்ணீர் விட்டார்கள், பின்பு அதிலிருந்து பானையில் விட்டார்கள், பின்பு பானையிலிருந்து குளத்தில் விட்டார்கள், குளத்திலிருந்து நதியில் விட்டார்கள் பின்பு கடைசியில் எங்கே சென்றது? கடலில். இந்த விசாலமான சபையும் முதலில் ஹிஸ்டரி ஹாலில் இருந்தது. பின்பு மெடிட்டேஷன் ஹாலில் இருந்தது. இப்பொழுது ஓம் சாந்தி பவனில் கூடியிருக்கிறது. இதன் பின்பு எங்கு நடக்கும்? அதற்காக நேரில் சந்திக்காமல் அவ்யக்த சந்திப்பு செய்ய முடியாது என்பதல்ல. காலத்திற்கேற்றபடி அவ்யக்த சந்திப்பின் பயிற்சியை அதிகரிக்க வேண்டும். மேலும் அதிகரிக்கும் தாதிகள் இரக்க மனமுடையவர்களாகி உங்கள் அனைவர் மேலும் இரக்கம் காட்டியிருக்கிறார்கள், முக்கியமாகப் புதியவர்கள் மேல் ஆனால் அவ்யக்த அனுபவத்தை அதிகரிக்க வேண்டும், அந்த நேரமும் செயல் முறையில் வரும். பாருங்கள் புதுப்புதுக் குழந்தைகளுக்காக பாப்தாதா விசேஷமாக இந்த சாகார சந்திப்பின் பங்கை இது வரை செய்து கொண்டிருக்கிறார் ஆனால் இதுவும் எதுவரை? அனைவரும் குஷியாகவும், திருப்தியாகவும் இருக்கிறீர்களா? வெளியில் இருப்பதிலும் திருப்தியாக இருக்கிறீர்களா? இதுவும் டிராமாவில் அடங்கியிருக்கிறது முழு அபுவும் எங்களுடையதாகும் என்று கூறுகிறீர்கள், அது எப்படி ஆகும்? முதலில் நீங்கள் காலடி வையுங்களேன். பின்பு இப்பொழுது தர்மசாலா என்றிருப்பவை உங்களுடையது ஆகி விடும். பாருங்கள் வெளி நாட்டில் இப்பொழுது அப்படி ஆக ஆரம்பமாகி விட்டது. சர்ச் என்றாக நடக்கவில்லை

என்றால் பி.கே.களிடம் கொடுத்து விட்டார்கள். அப்படி பெரிய பெரிய இடங்கள் சரியாக நடக்க இல்லை என்றால் கொடுத்து விடுகிறார்கள் இல்லையா. அப்படி பிராமணர்களின் பாதங்கள் அங்கங்கு விழுகின்றன இதிலும் இரகசியம் இருக்கிறது. பிராமணர்கள் இருப்பதற்கான பங்கு டிராமாவில் அடங்கியிருக்கிறது. அப்படி முழுவதும் நம்முடையது ஆகி விட்டால் பின்பு என்ன செய்வீர்கள்? நீங்களே கவனியுங்கள் என்று நீங்கள் வாய்ப்பளிப்பீர்கள். எங்களையும் கவனியுங்கள், ஆசிரமத்தையும் கவனியுங்கள். எந்த நேரம் எந்த பங்கு கிடைத்திருக்கிறதோ அதில் திருப்தியாகி பங்கை ஏற்று செய்யுங்கள். நல்லது.

மதுபன்வாசிகள் மற்றும் டீச்சர்கள் அனைவரும் கீழே இருந்து கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். டீச்சர்கள் மற்றும் இதுபன் வாசிகளின் சேவையின் உடனடிப் பலன் அனைவரின் திருப்தியின் ஆசீர்வாதம் கிடைக்கிறது. இந்த பிராமண ஆத்மாக் களின் மற்றும் தந்தையின் ஆசீர்வாதங்கள் அதிகப்படியாக லி பட்டின் வேலை செய்கிறது. இந்த பிராமண ஆத்மாக்களின் மனம் நிறைந்த ஆசீர்வாதங்கள் ஒன்றும் குறைந்தது அல்ல. நல்லது.

நாலாபுறமுமுள்ள அனைத்து சந்திப்பதற்கான, ஞான இரத்தினங்களை தாரணை செய்வதற்காக சாதகப் பறவைகள் போன்ற ஆத்மாக்களுக்கு, ஆகார ரூபத்திலும் சாகார ரூபத்திலும் ஈந்திப்பை செய்யக்கூடிய உயர்ந்த ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் அனைத்துப் பொக்கிஷங்களையும் வெற்றிகரமாகப் பயன்படுத்தி வெற்றி சொரூபம் ஆகக் கூடிய ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் என்னுடைய பாபா மேலும் வேறு எந்த எல்லைக்குட்பட்ட என்னுடையது என்பதை அம்ச மாத்திரம் கூட வைக்காத எல்லைக்கப்பாற்பட்ட வைராக்கிய ஆத்மாக்களுக்கு எப்பொழுதும் ஒவ்வொரு நேரமும் விதி மூலமாச் சம்பூரணத்தின் ஸித்தியை அடையக்கூடிய குழந்தைகளுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகளும் நமஸ்காரமும்.

**வரதானம்: எனது எனது என்பதை உனதில் மாற்றி உயர்ந்த இலக்கை அடையக்கூடிய மோஹத்தை வென்றவர்கள் ஆகுக!**

எங்கு எனது என்பது இருக்குமோ அங்கு குழப்பம் இருக்கும். என்னுடைய படைப்பு, என்னுடைய கடை, என்னுடைய பணம், என்னுடைய வீடு. இந்த எனது என்பதை ஓரமாகக் கொஞ்சம் வைத்திருந்தாலும் இலக்கின் கறையை அடைய முடியாது. உயர்ந்த இலக்கை அடைவதற்கு எனத உனதாக மாற்றுங்கள். எல்லைக்குட்பட்ட எனது அல்ல, எல்லைக்கப்பாற்பட்ட எனது அது தான் எனது பாபா. பாபாவின் நினைவு மற்றும் டிராமாவின் ஞானத்தினால் எதுவும் புதிதல்ல என்ற ஆடாத அசையாத நிலை இருக்கும் மேலும் பற்றுதலை வென்றவர்கள் ஆகி விடுவீர்கள்.

சுலோகன்: உண்மையான சேவாதாரியாகி சுயநலமற்ற சேவை செய்து கொண்டே இருந்தீர்கள் என்றால் சேவையின் பலன் தானாகக் கிடைக்கும்!

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

## 10.04.1991 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# இதய சிம்மாசனம் மற்றும் உலக சிம்மாசானத்திற்குரியவராக ஆவதற்கு சுகம் கொடுங்கள் மற்றும் சுகம் எடுங்கள்!

இன்று உலகின் எஜமானன், தன்னுடைய குழந்தையிலிருந்து எஜமானன் ஆகும் குழந்தைகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். அனைத்துக் குழந்தைகளும் இந்த நேரம் கூட தனக்கே எஜமானனாக இருக்கிறார்கள் மற்றும் அனேக பிறவிகள் கூட உலகிற்கே எஜமானனாக இருக்கிறார்கள். பரமாத்மக் குழந்தைகள் எஜமானனாகி விடுகிறார்கள். பிராமண ஆத்மாக்கள் என்றால் எஜமான ஆத்மாக்கள். இந்த நேரம் அனைத்துக் கர்ம இந்திரியங்களுக்கும் அடிமையாக இல்லாமல் எஜமானனாக இருக்கிறீர்கள். அதிகாரி என்றால் எஜமானன். கர்ம இந்திரியங்களுக்கு அடிமையாக இல்லை, எனவே குழந்தையிலிருந்து எஜமானன் ஆகுபவர்கள் நீங்கள். குழந்தைத் தன்மையின் ஈஸ்வரிய போதையையும் அனுபவம் செய்கிறீர்கள். மேலும் சுயராஜ்யத்தின் எஜமானத் தன்மையின் போதையும் அனுபவம் செய்கிறீர்கள். இரட்டைப் போதை இருக்கிறது. போதையின் அடையாளம் அழியாத ஆன்மீகக் குஷியாகும்.

எப்பொழுதும் தன்னை உலகிலேயே அதிர்ஷ்டசாலியான ஆத்மா என்று நினைக்கிறீர்களா? ஆஹா! என்னுடைய உயர்ந்த பாக்கியம் அதாவது உயர்ந்த அதிர்ஷ்டம் என்று நினைக்கிறீர்கள் தானே? அதிர்ஷ்டம் நிறைந்தவர்களாகவும் இருக்கிறீர்கள். மேலும் எப்பொழுதும் குஷி என்ற சத்துணவை அருந்தவும் செய்கிறீர்கள். மேலும் மற்றவர்களையும் அருந்தச் செய்கிறீர்கள். கூடவே எப்பொழுதும் குஷி என்ற ஊஞ்சலில் ஆடிக் கொண்டிருக்கிறீர்கள். மற்றவர்களுக்கும் குஷியை மகாதானமாகக் கொடுத்து அதிர்ஷ்டசாலிகளாக ஆக்குகிறீர்கள். அந்த மாதிரி விலை மதிக்க முடியாத வைரத்திற்குச் சமமாக வாழ்க்கையை

உருவாக்குபவர்கள் நீங்கள். அந்த மாதிரி ஆகி விட்டீர்களா? அல்லது இப்பொழுது ஆக வேண்டுமா? பிராமண வாழ்க்கையின் அர்த்தமே குஷியில் இருப்பது, குஷி என்ற சத்துணவை அருந்துவது மற்றும் குஷி என்ற ஊஞ்சலில் ஆடுவது. அந்த மாதிரியான பிராமணன் தானே நீங்கள்? குஷியில்லாத வாழ்க்கை என்ன வாழ்க்கை. வாழ்க்கையே குஷி தான். குஷியில்லை என்றால் பிராமண வாழ்க்கை இல்லை. குஷியாக இருப்பது தான் வாழ்வது.

இன்று பாப்தாதா அனைத்துக் குழந்தைகளின் புண்ணியத்தின் கணக்கைப் பார்த்துக் கொண்டிருந்தார். ஏனென்றால் நீங்கள் அனை வரும் புண்ணிய ஆத்மாக்கள் அல்லவா அனேக ஜென்மங்களுக்காகப் புண்ணிய கணக்கை சேமித்துக் கொண்டிருக்கிறீர்கள். முழு நாளிலும் எவ்வளவு புண்ணியம் சேமித்திருக்கிறீர்கள்? இதை நீங்களே சோதனை செய்ய முடியும் அல்லவா? ஒன்று தானம் செய்வது, இன்னொன்று புண்ணியம் செய்வது. தானத்தை விட புண்ணியத்திற்கு அதிக மகத்துவம் இருக்கிறது. புண்ணியக் காரியம் சுயநலமற்று சேவை மனப்பான்மையுடன் செய்யக் கூடிய காரியமாகும். புண்ணியக் காரியம் வெளிப்பகட்டுக்காகச் செய்யப்படுவதில்லை ஆனால் மனமுவந்து செய்யப்படுவதாகும். தானம் வெளிப்பகட்டுக்காகவும் இருக்கும் மனமுவந்து செய்யப்படுவதாகவும் இருக்கும். தேவையான நேரத்தில் எந்த ஒரு ஆத்மாவிற்கும் உதவுபவராக ஆவது தான் புண்ணியக் காரியமாகும். அதாவது ஏதாவது ஒரு காரியத்தில் உதவுபவராக இருப்பது. புண்ணியக்காரியம் செய்யும் ஆத்மாவிற்கு அனேக ஆத்மாக்களின் மனம் நிறைந்த ஆசீர்வாதம் கிடைக்கிறது. வாய் மூலமாக நன்றி மட்டும் கூறுவதில்லை ஆனால் மனம் நிறைந்த வாழ்த்துகள் வெளியில் தெரியாத பிராப்திகள் சேமிப்பாகிக் கொண்டே இருக்கின்றன. புண்ணிய ஆத்மா பரமாத்ம ஆசீர்வாதங்கள் மற்றும் மற்ற ஆத்மாக்களின் ஆசீர்வாதங்களின் பிரத்யட்ச பலன்களினால் நிரம்பியிருக்கிறார்கள். புண்ணிய ஆத்மாவின் உள்ளுணர்வு, பார்வை மற்றவர்களுக்கும் ஆசீர்வாதங்களை அனுபவம் செய்விக்கிறது. புண்ணிய ஆத்மாவின் முகத்தில் எப்பொழுதும் மகிழ்ச்சி, திருப்தியின் ஜொலிப்பு தென்படுகிறது. புண்ணிய ஆத்மா எப்பொழுதும் பிராப்தியாகியுள்ள பலன்களின் காரணமாக, அபிமானம் மற்றும் அவமானத்திலிருந்து விலகியிருக்கிறார். ஏனென்றால் அவர் நிரம்பிய

மகாராஜா ஆவார். அபிமானம் மற்றும் அவமானத்திலிருந்து விலகிய கவலையற்ற மகாராஜா ஆவார். புண்ணிய ஆத்மா புண்ணியத்தின் சக்தி மூலமாக தன்னுடைய ஒவ்வொரு எண்ணம், ஒவ்வொரு நேரத்தின் குழட்டம் மற்றும் ஒவ்வொரு காரியத்தையும் வெற்றியடையச் செய்பவர். புண்ணியத்தின் கணக்கு சேர்ந்து கொண்டே இருக்கிறது. சேருவதின் அடையாளம் வீணானவை முடிவடைவது. அந்த மாதிரியான புண்ணிய ஆத்மா உலக இராஜ்ய சிம்மாசனத்தில் அமருபவர்களாக ஆகிறார்கள். எனவே அந்த மாதிரி புண்ணிய ஆத்மாவாக நான் எவ்வளவு ஆகியிருக்கிறேன்? என்று தன்னுடைய கணக்கை சோதனை செய்யுங்கள். ஒரு வேளை நீங்கள் அனைவரும் புண்ணிய ஆத்மாவா? என்று கேட்டால் ஆம் என்று அனைவரும் கூறுவீர்கள் இல்லையா? நீங்கள் புண்ணிய ஆத்மாக்கள் தான், ஆனால் வரிசைக்கிரமமாக இருக்கிறீர்கள். சத்யயுகம் மற்றும் திரேதாயுகத்தின் உலக இராஜ்ய சிம்மாசனத்தில் எத்தனை பேர் அமருவீர்கள்? அனைவரும் ஒன்றாக அமருவீர்களா? அப்படியானால் வரிசைக்கிரமமாகத் தானே இருக்கிறீர்கள். வரிசை ஏன் ஏற்படுகிறது? என்ன காரணம்? முக்கியமாக ஒரு விஷயத்தை பாப்தாதா சோதித்தார், அது தான் நம்பர் ஒன் ஆவதில் தடை ஏற்படுத்துகிறது.

இப்பொழுது தபஸ்யா வருடத்தில் அனைவரின் இலட்சியமும் சம்பூர்ணம் ஆக வேண்டும் என்றா? அல்லது வரிசைக்கிரமமாக ஆக வேண்டும் என்றா? சம்பூர்ணம் ஆக வேண்டும் அல்லவா. நீங்கள் அனைவரும் ஒரு சுலோகன் கூறவும் செய்கிறீர்கள், எழுதி மாட்டவும் செய்கிறீர்கள். சுகம் கொடுங்கள் மற்றும் சுகத்தை எடுங்கள் என்பது தான் அது. துக்கம் கொடுக்காதீர்கள் மற்றும் துக்கத்தை எடுக்காதீர்கள். இந்த சுலோகன் உறுதியாக இருக்கிறது இல்லையா. ரிஸல்ட்டில் (முடிவு) என்ன பார்த்தோம்? துக்கம் கொடுக்காதீர்கள் இதில் அதிகமானவர்களின் கவனம் இருக்கிறது ஆனால் பாதி சுலோகன் மேல் கவனம் சரியாக இருக்கிறது. துக்கம் கொடுப்பதைப் பற்றி கொடுக்கக் கூடாது என்று நினைக்கிறார்கள் ஆனால் எடுப்பதற்காக அவர் கொடுத்தார் அதனால் இப்படி ஆனது என்று கூறுகிறார்கள். இவர் இதைக் கூறினார், எனவே இப்படி ஆனது என்று தீர்ப்புக் கூறுகிறீர்கள் இல்லையா? தன்னுடைய வழக்கறிஞர் ஆகி வழக்கில் இதைத்தான் கூறுகிறீர்கள் இல்லையா? அப்படி பாதி சுலோகன் மேல் கவனம்

சரியாக வைத்திருக்கிறீர்கள், அதில் இன்னும் அதிக கவனம் வேண்டும். இருந்தாலும் பாதி சுலோகன் மேல் கவனம் இருக்கிறது ஆனால் மீதமுள்ள பாதி சுலோகன் மேல் பெயரளவில் கவனம் இருக்கிறது. அவர் கொடுத்தார் என்றால் நீங்கள் ஏன் வாங்கினீர்கள்? நீங்கள் வாங்குங்கள் என்று யார் கூறியது? துக்கத்தை வாங்குங்கள் என்பது தந்தையின் ஸ்ரீமத்தா என்ன? பையை துக்கத்தால் நிரப்புங்கள் என்று தந்தை கூறினாரா? எனவே துக்கம் கொடுக்கவும் செய்யாதீர்கள் எடுக்கவும் செய்யாதீர்கள். அப்பொழுது தான் புண்ணிய ஆத்மா ஆவீர்கள், தபஸ்வி ஆவீர்கள். தபஸ்வி என்றால் மாற்றுவது அதாவது அவர்களுடைய துக்கத்தையும் நீங்கள் சுக ரூபத்தில் சுவீகாரம் செய்யுங்கள். மாற்றுங்கள் அப்பொழுது தான் தபஸ்வி என்று கூற முடியும். நிந்தனையை பெருமைப்படுத்துகிறார் என்று புரிந்து. கொள்ளுங்கள். அப்பொழுது தான் புண்ணிய ஆத்மா என்று கூற முடியும். நிந்தனை செய்பவர்களையும் அல்லது துக்கம் கொடுக்கும் ஆத்மாக்களையும் தன்னுடைய இரக்கமனமுடைய சொரூபத்தில் இரக்கப்பார்வையோடு பாருங்கள். நிந்தனைப் பார்வையுடன் பார்க்காதீர்கள். அவர்கள் தீய வார்த்தைகள் கூறுகிறார்கள் ஆனால் நீங்கள் மலர் தூவுங்கள். அப்பொழுது தான் புண்ணிய ஆத்மா என்று கூற முடியும். உங்களை அவதூறு செய்பவர்களையும் கட்டி அனைத்துக் கொள்ளுங்கள். மேலோட்டமாக அல்ல, மனமுவந்து. அப்படி புண்ணியக் கணக்கு சேமிப்பாவதில் இது தான் தடை ரூபமாக ஆகிறது. யாருக்கும் கொடுக்கவோ கூடவே கூடாது, ஆனால் எடுக்கவும் கூடாது. எப்பொழுது நல்ல பொருள் இல்லையோ பின்பு குப்பையை வாங்கி ஏன் சேமிக்கிறீர்கள்? எங்கு துக்கத்தை எடுக்கிறீர்களோ அங்கு குப்பை சேருகிறது, பின்பு குப்பையிலிருந்து என்ன உருவாகும்? பாவத்தின் அம்சம் என்ற கிருமிகள். இப்பொழுது பெரிய பாவங்களெல்லாம் செய்வதில்லை தானே. இப்பொழுது பாவத்தின் அம்சம் தங்கி விட்டது ஆனால் அம்சம் கூட இருக்க வேண்டாம். சில குழந்தைகள் மிகவும் இனிமையான விஷயங்கள் கூறுகிறார்கள். ஆன்மீக உரையாடல் அனைவரும் தான் செய்கிறார்கள் இல்லையா! ஒரு சுலோகன் அனைவரிடமும் உறுதியாகி விட்டது விரும்புவதோ இல்லை ஆனால் நடந்து விட்டது . நீங்கள் விரும்பவில்லை என்றால் பின்பு யார் விரும்புகிறார்கள்? நடந்துவிட்டது என்று கூறுகிறீர்கள் வேறு ஏதாவது ஆத்மா இருக்கிறதா என்ன? நடந்திருக்கக் கூடாது ஆனால் நடந்து

விட்டது இதை யார் கூறுவது வேறு எந்த ஆத்மாவும் கூறுகிறதா? நீங்கள் கூறுகிறீர்களா? எனவே இந்த விஷயங்களின் காரணத்தினால் தபஸ்யா நிரூபணம் ஆவதில்லை. எது நடக்கக் கூடாதோ, எதைச் செய்ய விரும்பவில்லையோ அது நடக்கவே கூடாது செய்யாமல் இருப்பது தான் புண்ணிய ஆத்மாவின் அடையாளமாகும். பாப்தாதாவிடம் தினந்தோறும் குழந்தைகளின் இந்த மாதிரிக் கதைகள் வருகின்றன. சொல்வதில் அவ்வளவு ஆர்வத்தை உருவாக்கும் கதைகளாக கேட்டுக் கொண்டே இருக்கும் அளவிற்குக் கூறுகிறார்கள். எடுக்கவும் செய்யாதீர்கள். அப்பொழுது தான் புண்ணிய ஆத்மா ஆவீர்கள், தபஸ்வி ஆவீர்கள். தபஸ்வி என்றால் மாற்றுவது அதாவது அவர்களுடைய துக்கத்தையும் நீங்கள் சுக ரூபத்தில் சுவீகாரம் செய்யுங்கள். மாற்றுங்கள் அப்பொழுது தான் தபஸ்வி என்று கூற முடியும். நிந்தனையை பெருமைப்படுத்துகிறார் என்று புரிந்து. கொள்ளுங்கள். அப்பொழுது தான் புண்ணிய ஆத்மா என்று கூற முடியும். நிந்தனை செய்பவர்களையும் அல்லது துக்கம் கொடுக்கும் ஆத்மாக்களையும் தன்னுடைய இரக்கமனமுடைய சொரூபத்தில் இரக்கப்பார்வையோடு பாருங்கள். நிந்தனைப் பார்வையுடன் பார்க்கா. தீர்கள். அவர்கள் தீய வார்த்தைகள் கூறுகிறார்கள். ஆனால் நீங்கள் மலர் தூவுங்கள். அப்பொழுது தான் புண்ணிய ஆத்மா என்று கூற முடியும். உங்களை அவதூறு செய்பவர்களையும் கட்டி அனைத்துக் கொள்ளுங்கள். மேலோட்டமாக அல்ல, மனமுவந்து. அப்படி புண்ணியக் கணக்கு சேமிப்பாவதில் இது தான் தடை ரூபமாக ஆகிறது. யாருக்கும் கொடுக்கவோ கூடவே கூடாது, ஆனால் எடுக்கவும் கூடாது. எப்பொழுது நல்ல பொருள் இல்லையோ பின்பு குப்பையை வாங்கி ஏன் சேமிக்கிறீர்கள்? எங்கு துக்கத்தை எடுக்கிறீர் களோ அங்கு குப்பை சேருகிறது, பின்பு குப்பையிலிருந்து என்ன உருவாகும்? பாவத்தின் அம்சம் என்ற கிருமிகள். இப்பொழுது பெரிய பாவங்களெல்லாம் செய்வதில்லை தானே. இப்பொழுது பாவத்தின் அம்சம் தங்கி விட்டது. ஆனால் அம்சம் கூட இருக்க வேண்டாம். சில குழந்தைகள் மிகவும் இனிமையான விஷயங்கள் கூறுகிறார்கள். ஆன்மீக உரையாடல் அனைவரும் தான் செய்கிறார்கள் இல்லையா ஒரு சுலோகன் அனைவரிடமும் உறுதியாகி விட்டது விரும்புவதோ இல்லை ஆனால் நடந்து விட்டது நீங்கள் விரும்பவில்லை என்றால் பின்பு யார் விரும்புகிறார்கள்? நடந்துவிட்டது என்று கூறுகிறீர்கள் வேறு ஏதாவது

ஆத்மா இருக்கிறதா என்ன? நடந்திருக்கக் கூடாது ஆனால் நடந்து விட்டது இதை யார் கூறுவது வேறு எந்த ஆத்மாவும் கூறுகிறதா? நீங்கள் கூறுகிறீர்களா? எனவே இந்த விஷயங்களின் காரணத்தினால் தபஸ்யா நிரூபணம் ஆவதில்லை. எது நடக்கக் கூடாதோ, எதைச் செய்ய விரும்பவில்லையோ அது நடக்கவே கூடாது செய்யாமல் இருப்பது தான் புண்ணிய ஆத்மாவின் அடையாளமாகும். பப்தாதாவிடம் தினந்தோறும் குழந்தைகளின் இந்த மாதிரிக் கதைகள் வருகின்றன. சொல்வதில் அவ்வளவு ஆர்வத்தை உருவாக்கும் கதை களாக கேட்டுக் கொண்டே இருக்கும் அளவிற்குக் கூறுகிறார்கள். சிலர் நீளமான கதை சொல்லும் பழக்கம் உடையவர்கள், சிலர் சின்னதாகக் கூறுகிறார்கள் ஆனால் கதைகள் நிறையச் சொல்லுகிறார்கள். இன்று இந்த வருடச் சந்திப்பின் கடைசி மூழ்குதல் இல்லையா? அனைவரும் மூழ்குவதற்குத் தான் வந்திருக்கிறீர்கள் இல்லையா? பக்தி மார்க்கத்தில் கூட மூழ்கி எழும்பொழுது அவசியம் ஏதாவது ஒரு எண்ணம் வைக்கிறார்கள். ஏதாவது சுவாஹா (அர்ப்பணம்) செய்கிறார்கள் அல்லது சுயநலமாக (சுவார்த்) ஏதாவது செய்கிறார்கள். இரண்டின் எண்ணமும் செய்கிறார்கள். எனவே தபஸ்யா வருடத்தில் முழு நாளும் எண்ணம் மூலமாக, சொல் மூலமாக, காரியம் மூலமாக புண்ணிய ஆத்மாவாகி புண்ணிய ஆத்மா ஆவேன் என்ற எண்ணம் உருவாக்குங்கள். புண்ணியத்தின் அடையாளம் என்னவென்றால் புண்ணியத்தின் பிரத்யட்ச பலன் ஒவ்வொரு எண்ணத்திலும் புண்ணியம் சேமிப்பாகட்டும், சொல்லில் ஆசீர்வாதம் சேமிப்பாகட்டும். உறவில் நெருக்கத்தில் இதயத்திலிருந்து உதவியின் நன்றி வெளிப்படட்டும், இதைத் தான் தபஸ்யா என்று கூறுவது. அந்த மாதிரியான தபஸ்யா உலக மாற்றத்திற்கு ஆதாரமாகும். அந்த மாதிரி ரிஸல்ட்டிற்குப் பரிசு கிடைக்கும். பின்பு இந்த மாதிரி ஆகி விட்டது என்று கதை சொல்லாதீர்கள். பார்க்கப் போனால் முதல் பரிசை அனைத்து டீச்சர்களும் வாங்க வேண்டும், மேலும் கூடவே மதுபன் நிவாசிகளும் வாங்க வேண்டும். ஏனென்றால் மதுபன்னின் அலை, பொறுப்பு டீச்சர்களின் அலை குடும்பத்தில் இருப்பவர்கள் வரை, இறை மாணவர்கள் வரை சென்றடைகிறது. அப்படி நீங்கள் அனைவரும் வரிசையில் முன்னுக்கு வந்தே விடுவீர்கள். இப்பொழுது யார் யாருடைய பெயர் பரிசு வாங்குபவர்களில் வருகிறது என்று பார்க்கலாம்? டீச்சர்களின் பெயர் வருகிறதா? மதுபன்னில்

இருப்பவர்களின் பெயர் வருகிறதா? அல்லது இறை மாணவர்களின் பெயர் வருகிறதா? என்று பார்க்கலாம். வெளி நாட்டவர்கள் கூடத் தீவிர முயற்சி செய்கிறார்கள். பாப்தாதாவிடம் பரிசுகள் அதிகமாக இருக்கின்றன, எவ்வளவு வேண்டுமோ வாங்கிக் கொள்ளலாம். பரிசுக்குக் குறைவே இல்லை, பொக்கிஷம் நிரம்பியிருக்கிறது. நல்லது.

அனைவரும் மேளாவில் வந்து சேர்ந்து விட்டீர்கள். மேளா நன்றாக இருக்கிறதா? அல்லது ஏதாவது கஷ்டம் ஏற்பட்டதா? மழையும் உங்களை வரவேற்றது, இயற்கைக்கும் உங்கள் மேல் அன்பு இருக்கிறது. பயப்படவில்லையே. பிரம்மா போஜனம் நன்றாகக் கிடைத்தது அல்லவா. 63-ஜென்மங்கள் எங்கு சென்றாலும் ஏமாற்றம்தான் கிடைத்தது. இப்பொழுது ஒரு இடம் என்று கிடைத்து விட்டது இல்லையா? மூன்றடி நிலமாவது கிடைத்தது இல்லையா! இவ்வளவு பெரிய ஹால் கட்டியிருக்கிறீர்கள், ஹாலின் அழகும் கூடியது இல்லையா? ஹாலை பயனுள்ளதாக உபயோகித்தீர்கள் அல்லவா . யாருக்கும் எந்தக் கஷ்டமும் ஏற்படவில்லையே ஆனால் இப்படி மேளா மட்டும் செய்து கொண்டே இருக்காதீர்கள். படைப்பின் கூடவே சாதனங்களும் கூடவே வருகின்றன. நல்லது

அனைத்து குழந்தையிலிருந்து எஜமானனாகும் உயர்ந்த ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் ஒவ்வொரு அடியிலும் புண்ணியக் கணக்கை சேமிக்கக் கூடிய புண்ணிய ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் இதய சிம்மாசனத்தில் அமர்ந்து உலக சிம்மாசனத்தின் அதிகாரியாகும் விசேஷ ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் சுகம் கொடுக்கும் மற்றும் சுகம் எடுக்கும் மாஸ்டர் சுகக் கடல் ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் குஷியில் இருக்கக்கூடிய மற்றும் குஷி கொடுக்கக் கூடிய மாஸ்டர் வள்ளல் குழந்தைகளுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகளும் நமஸ்காரமும்.

தாதிகளுடன்: அனைத்து மஹாரதிகளும் அனைவரையும் சக்திசாலி ஆக்கும் சேவையை மனமுவந்து மிகவும் நன்றாகச் செய்தார்கள் என்று பாப்தாதா பார்த்தார். இதற்காக நன்றி என்ன கூறுவது? ஆனால் கணக்கில் மிகவும் சேமிப்பாகி இருக்கிறது. மிகப் பெரிய கணக்கு சேமிப்பாகி இருக்கிறது. மஹாவீரக் குழந்தைகளின் தைரியம் மற்றும் ஊக்கம் உற்சாகத்தைப் பார்த்து பாப்தாதா பலமடங்கு மகிழ்ச்சி

அடைகிறார். தைரியம் வைத்தார்கள் மேலும் குழு அன்பு என்ற கயிறால் கட்டப்பட்டிருந்தது. எனவே இதன் வெற்றி கிடைத்தது. குழு உறுதியானது இல்லையா. சின்ன மாலை உறுதியானது. கங்கன் (வளையல்) உருவாகியிருக்கிறது. மாலை உருவாகவில்லை. எனவே சின்ன மாலையும் பூஜிக்கப்படுகிறது. பெரியதும் நன்றாக உருவாகிக் கொண்டிருக்கிறது. அதுவும் ஆகி விடும், உருவாகவே வேண்டும். பெரிய மாலை மணிகள் தயாராகி விட்டன ஆனால் மணியோடு மணி சேருவதில் கொஞ்சம் இடைவெளி இருக்கிறது ஆனால் சின்ன மாலை நன்றாகத் தயாராகி விட்டது. இந்த மாலையின் காரணமாகத் தான் வெற்றி சுலபமாக இருந்தது மேலும் வெற்றி எப்பொழுதும் மாலையின் மணிகளாகக் கழுத்தில் உருளுகின்றன. வெற்றித் திலகம் இடப்பட்டிருக்கிறது. பாப்தாதா குஷியடைகிறார். பல மடங்கு வாழ்த்துக்கள். பொறுப்பில் இருப்பவர்கள் நீங்கள் தானே. பாபாவோ செய்விப்பவர். செய்பவர் யார்? செய்வதற்காகப் பொறுப்பில் இருப்பவர்கள் நீங்கள். நீங்கள் தந்தைக்கு முதுகெலும்பு மாதிரி இருக்கிறீர்கள். எனவே நன்றாக அன்பும் காட்டினீர்கள், நன்றாகப் பாலனையும் செய்தீர்கள். நல்லது.

வரதானம்: ஒரு பாஸ் வார்த்தையின் நினைவு மூலமாக எந்த ஒரு பரீட்சையிலும் முழுமையாக பாஸாகக் கூடிய பாஸ் வித் ஹானர் ஆகுங்கள்!

எந்த ஒரு பரீட்சையிலும் முழுமையாக பாஸாவதற்கு அந்தப் பரீட்சையின் கேள்வியின் விஸ்தாரத்தில் செல்லாதீர்கள். இது ஏன் வந்தது? எப்படி வந்தது? யார் செய்தது? என்று நினைக்காதீர்கள். இதற்குப் பதிலாக பாஸாக வேண்டும் என்று நினைத்து பரீட்சையை, பரீட்சை என்று நினைத்து பாஸ் பண்ணுங்கள். ஒரே ஒரு பாஸ் வார்த்தையை மட்டும் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். நான் பாஸாக (தேர்ச்சி) வேண்டும், பாஸ் செய்ய வேண்டும் (கடந்து செல்ல வேண்டும்) மேலும் தந்தையின் அருகில் (பாஸ்) இருக்க வேண்டும் என்றால் பாஸ் வித் ஹானர் ஆகி விடுவீர்கள்.

சுலோகன்: தன்னை பரமாத்மா அன்பிற்காக அர்ப்பணிப்பவர்களே வெற்றி மூர்த்தி ஆகிறார்கள்!

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺
✺✺✺✺✺✺✺

# 26.10.1991 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# தபஸ்யாவின் பிரத்யக்ஷபலன் -குஷி!

இன்று பாப்தாதா தன்னுடைய அனைத்து தபஸ்வி, ராஜ குழந்தைகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். தபஸ்வியாகவும் இருக்கிறீர்கள். மேலும் இராஜ அதிகாரிகளாகவும் இருக்கிறீர்கள். எனவே தபஸ்வி ராஜாவாக இருக்கிறீர்கள். தபஸ்யா என்றால் இராஜ்ய அதிகாரி ஆவது. தபஸ்யா இராஜாவாக ஆக்குகிறது. என்ன அனைவரும் இராஜா ஆகியிருக்கிறீர்கள் இல்லையா? தபஸ்யாவின் பலம் என்ன கொடுக்கிறது? அடிமையிலிருந்து அதிகாரியாக அதாவது இராஜா ஆக்கி விடுகிறது. எனவே தபஸ்யா மூலம் இராஜ்ய பாக்கியம் கிடைக்கிறது என்று மகிமை செய்திருக்கிறார்கள். அப்படி பாக்கியம் எவ்வளவு உயர்ந்ததாக இருக்கிறது. அந்த மாதிரியான பாக்கியம் முழு கல்பத்திலும் யாருக்கும் கிடைக்க முடியாது. பாக்கியத்தை உருவாக்குபவரையே தன்னுடையவராக்கி விட்டீர்கள், அந்த அளவிற்கு எவ்வளவு உயர்ந்த பாக்கியம். ஒவ்வொரு பாக்கியத்தையும் தனியாகக் கேட்பதற்கு அவசியம் இல்லை, பாக்கியத்தை உருவாக்குபவரிடமிருந்து அனைத்து பாக்கியத்தையும் ஆஸ்தியில் எடுத்து விட்டீர்கள். ஆஸ்தி ஒருபோதும் கேட்கப்படுவதில்லை. அனைத்து பாக்கியத்தையும் பாக்கியத்தை உருவாக்குபவர் அவரே கொடுத்து விட்டார். தபஸ்யா என்றால் நான் உன்னுடையவன் நீங்கள் என்னுடையவர். இதைத்தான் தபஸ்யா என்று கூறுவது. இந்த தபஸ்யாவின் பலத்தினால் பாக்கியத்தை உருவாக்குபவரை தன்னுடையவராக்கி விட்டீர்கள், பாக்கியத்தை அளிக்கும் தந்தையும் நான் உன்னுடையவன் என்று கூறுகிறார். அப்படி எவ்வளவு உயர்ந்த பாக்கியமாகி விட்டது. பாக்கியத்தின் கூடவே சுயராஜ்யம் இப்பொழுது கிடைத்திருக்கிறது. எதிர்காலத்தில் உலக இராஜ்யம் கிடைப்பது சுயராஜ்யத்தின் ஆதாரத்தில் தான். எனவே தபஸ்வி ராஜா நீங்கள். பாப்தாதாவிற்கும் தன்னுடைய ஒவ்வொரு இராஜ்ய அதிகாரி குழந்தைகளையும் பார்த்து மகிழ்ச்சி ஏற்படுகிறது. பக்தியில் அனேக

## 1991 அவ்யக்த முரளி

பிறவிகளில் பாப்தாதாவின் எதிரில் என்ன கூறினீர்கள்? நினைவிருக்கிறதா? அல்லது மறந்து விட்டீர்களா? அடிக்கடி தன்னை அடிமை அடிமை என்று கூறினீர்கள். நான் உன்னுடைய அடிமை என்று கூறினீர்கள். தந்தை கூறுகிறார். என்னுடைய குழந்தைகள் மேலும் அடிமையா? சர்வ சக்திவானின் குழந்தைகள் மேலும் அடிமைகள் கேட்பதற்கே அழகாக இல்லை. எனவே தந்தை நான் உன்னுடைய அடிமை என்பதற்குப் பதிலாக என்ன அனுபவம் செய்வித்தார்? நான் உன்னுடையவன். எனவே அடிமையிலிருந்து இராஜாவாகி விட்டீர்கள். இப்பொழுது கூட எப்பொழுதாவது அடிமை ஆகவில்லையே? அடிமைத்தனத்தின் பழைய சம்ஸ்காரம் எப்போதாவது வெளிப்படவில்லையே? மாயாவின் அடிமை ஆகிறீர்களா? இராஜா ஒருபோதும் அடிமை ஆகி முடியாது. அடிமைத்தனம் விலகி விட்டதா? அல்லது எப்போதாவது அது பிடித்திருக்கிறதா? எனவே தபஸ்யாவின் பலம் மிகவும் உயர்ந்தது. மேலும் தபஸ்யா என்றால் என்ன செய்கிறீர்கள்? தபஸ்யாவில் கடுமையாக ஏதாவது செய்கிறீர்களா? தபஸ்யா என்றால் என்னவென்று பாப்தாதா ஏற்கனவே கூறியிருக்கிறார். மகிழ்ச்சியாக இருப்பது தபஸ்யா என்றால் மிகவும் எளிதாக ஆடுவது மற்றும் பாடுவது அவ்வளவு தான். ஆடுவது பாடுவது சுலபமானதா? இல்லை கடினமானதா? பொழுதுபோக்காக இருக்கிறதா? இல்லை கடினமாக இருக்கிறதா? அப்படி தபஸ்யாவில் என்ன செய்கிறீர்கள்? தபஸ்யாவின் பிரத்ய பலன் குஷி, அப்படி குஷியாக இருக்கும் பொழுது என்ன நடக்கிறது? ஆடுவது. தபஸ்யா என்றால் குஷியில் ஆடுவது மற்றும் தந்தையின் மற்றும் தன்னுடைய ஆதி, அனாதி சொரூபத்தின் குணத்தைப் பாடுவது. அப்படியானல் இந்தப்பாடல் எவ்வளவு உயர்ந்தது மற்றும் எவ்வளவு சுலபமானது. இதில் தொண்டை சரியாக இருக்கிறதா? இல்லையா? என்பது கூட தேவையில்லை. நிரந்தரமாக இந்தப்பாடலைப் பாடமுடியும், நிரந்தரமாகக் குஷியில் ஆடிக் கொண்டே இருங்கள். அப்படியானால் தபஸ்யாவின் அர்த்தம் என்னவாக ஆனது? ஆடுவது மற்றும் பாடுவது எவ்வளவு சலடமானது. யார் சிறிய தவறு செய்கிறார்களோ அவர்களுக்குத்தான் தலை பாரமாகி விடுகிறது. பிராமண வாழ்க்கையில் ஒருபோதும் யாருடைய தலையும் பாரமாக முடியாது. ஹாஸ்பிடல் கட்டியவர்களின் தலை பாரமானதா? டிரஸ்டி (மருத்துவமனை) எதிரில் பகொள்கிறீர்கள் என்றால் தலை பாரமாகி

விடுகிறது. எனவே பிராமண வாழ்க்கை இருப்பதே ஆடுவதற்கும், பாடுவதற்கும் மகிழ்ச்சியாக இருப்பதற்கும் தான் சேவையும் வாய்மொழியாக இருந்தாலும் அல்லது காரியங்கள் மூலமாக இருந்தாலும், இந்த சேவையும் ஒரு விளையாட்டுத்தான். சேவை வேறு எந்த ஒன்றும் இல்லை. சில புத்திக்கான விளையாட்டு இருக்கிறது. சில லேசான விளையாட்டு இருக்கிறது ஆனால் விளையாட்டு தான் இல்லையா? புத்திக்கான விளையாட்டில் புத்தி பாரமாகிறதா என்ன? அப்படி இவை அனைத்தும் விளையாட்டு, விளையாடி கொண்டிருக்கிறீர்கள். எனவே எவ்வளவு தான் மிக அதிகமாக யோசிப்பதற்கான வேலையாக இருந்தாலும், கவனம் கொடுப்பதற்கான வேலையாக இருந்தாலும் மாஸ்டர் சர்வ சக்திவன் ஆத்மாவிற்கு இவை அனைத்தும் விளையாட்டு அப்படி இருக்கிறதா? அல்லது கொஞ்சம் கொஞ்சம் செய்து களைப்படைந்து விடுகிறீர்களா? அதிகமாகக் களைப்பற்றவராகிறர்கள் ஆனால் எப்போதாவது கொஞ்சம் களைப்படைந்து விடுகிறாகள். இது தான் யோகாவை பிரயோகம் (உபயோகத்தில்) செய்வது. அனைத்து பொக்கிஷங்களையும் அது நேரமானாலும், எண்ணமானாலும் ஞானப் பொக்கிஷமானாலும் அல்லது ஸ்தூல செல்வமானாலும் ஒருவேளை யோகாவின் பிரயோகத்தின் முறைப்படி பிரயோகம் செய்தீர்கள் என்றால் ஒவ்வொரு பொக்கிஷமும் அதிகரித்துக் கொண்டேயிருக்கும். இந்த தபஸ்யா வருடத்தில் யோகாவைப் பிரயோகம் செய்தீர்கள் இல்லையா? என்ன பிரயோகம் செய்தீர்கள்? இந்த ஒவ்வொரு பொக்கிஷத்தையும் பிரயோகம் செய்யுங்கள். எப்படி பிரயோகம் செய்ய வேண்டும்? எந்தப் பொக்கிஷமும் குறைந்த செலவில் பிராப்தி அதிகமாக இருக்கட்டும். உழைப்பு குறைவு வெற்றி அதிகம் இந்த விதியில் பிரயோகம் செய்யுங்கள். உதாரணத்திற்கு இந்த நேரத்தின் அல்லது எண்ணத்தின் பொக்கிஷத்தை எடுத்துக் கொள்ளுங்கள். இது உயர்ந்த பொக்கிஷமாகும் எனவே எண்ணத்தின் செலவு குறைவாக ஆகட்டும் ஆனால் பிராப்தி அதிகமாக இருக்கட்டும். ஒரு சாதாரண மனிதன் இரண்டு அல்லது நான்கு நிமிடங்கள் சிந்தித்த பிறகு வெற்றி அல்லது பிராப்தி அடைகிறார் என்றால் அதை நீங்கள் ஓரிரு வினாடியில் செய்ய முடியும். இதைத்தான் சாகாரத்தில் இருக்கும்பொழுது கூட பிரம்மாபாபா குறைந்த செலவில் நிறைந்த பிராப்தி என்று கூறினார். செலவு குறைவாகச் செய்யுங்கள் ஆனால் பிராப்தி 100-மடங்காக இருக்கட்டும்.

இதனால் என்னவாகும்? எது சேமிப்பாகிறதோ அது நேரமானாலும். எண்ணமானாலும் சேமிப்பை மற்றவர்களின் சேவையில் ஈடுபடுத்தலாம். தானம் புண்ணியம் யாரால் செய்ய முடியும்? யாரிடம் செல்வத்தின் சேமிப்பு இருக்கிறதோ அவரால் செய்ய முடியும். ஒருவேளை தனக்காகவே செலவு செய்து விட்டு எவ்வளவு சம்பாதித்தாரோ அதை சாப்பிட்டு விட்டார் என்றால் தானம், புண்ணியம் செய்ய முடியாது யோகத்தின் பிரயோகம் இது தான். குறைந்த நேரத்தில் ரிஸல்ட் (வெற்றிச் அதிகம், குறைந்த எண்ணத்தினால் அனுபவம் அதிகமாக இருக்கட்டும், அப்பொழுது தான் ஒவ்வொரு பொக்கிஷத்தையும் மற்றவர்களுக்காக உபயோகிக்க முடியும். அதேபோல் தான் வாய்மொழி மற்றும் செயல் அதிலும் குறைந்த செலவில் வெற்றி அதிகம். அப்பொழுது தான் அதிசயப்படும்படி செய்தார் என்று மகிமை செய்யப்படுகிறது. பாப்தாதா என்ன அதிசயம் செய்தார்? எவ்வளவு குறைந்த சமயத்தில் என்னவாக இருந்தவரை என்னவாக ஆக்கி விட்டார்? எனவே தான் அதிசயம் செய்தீர்கள் என்று கூறுகிறீர்கள், ஒன்றிற்குப் பல மடங்கு பிராப்தியை அனுபவம் செய்கிறீர்கள். எனவே தான் அதிசயம் செய்தீர்கள் என்று கூறுகிறீர்கள், எப்படி பாப்தாதாவின் பொக்கிஷம் பிராப்தி மற்றும் அனுபவத்தை அதிகம் செய்விக்கிறது. அதேபோல் நீங்கள் அனைவரும் கூட யோகாவின் பிரயோகம் செய்யுங்கள். பாபா நீங்கள் அதிசயம் செய்தீர்கள் என்ற பாடல் மட்டும் பாடுவது அல்ல. நீங்களும் தான் அதிசயம் செய்பவர்கள். செய்யவும் செய்கிறீர்கள் ஆனால் தபஸ்யா நடந்து கொண்டிருக்கும் நேரத்தில். பெரும்பான்மையோரின் ரிஸல்ட்டாக என்ன பார்த்தோம்?

தபஸ்யாவின் ஊக்கம்-உற்சாகம் நன்றாக இருக்கிறது. கவனமும் இருக்கிறது. மெற்றியும் இருக்கிறது ஆனால் தனக்காக அனைத்துப் பொக்கிஷங்களையும் அதிகமாக உபயோகிக்கிறீர்கள். தனக்காக அனுபவங்கள் செய்வது பிராப்தி அடைவது இதுவும் நல்ல விஷயம் தான் ஆனால் தபஸ்யா வருடம் தனக்காகவும், மற்றும் உலக சேவைக்காகவும் கொடுக்கப்பட்டிருக்கிறது அதிர்வலைகளை உலகில் இன்னும் வேகமாகப் பரப்புங்கள். யோகாவின் பிரயோகத்தை மேலும் அனுபவத்தின் சோதனைக் கூடத்தில் பிரயோகத்தின் வேகத்தை அதிகரியுங்கள். இந்த நேரம் அனைத்து ஆதமாக்களுக்கும்

# 1991 அவ்யக்த முரளி

உங்களுடைய சக்திசாலியான அதிர்வலைகள் மூலமாக வாயுமண்டலம் மாற வேண்டுவதின் அவசியம் இருக்கிறது. எனவே பிரயோகத்தை இன்னும் அதிகரியுங்கள். சகயோகி குழந்தைகளும் நிறைய இருக்கிறார்கள். இந்த சகயோகம் தான் யோகாவில் மாறி விடுகிறது ஒன்று அன்பு வைத்திருக்கும் சகயோகி, இரண்டாவது சகயோகி யோகி. மூன்றாவது நிரந்தர யோகி பிரயோகி. இப்பொழுது நான் யார் என்று உங்களிடமே கேளுங்கள் ஆனால் பாப்தாதாவிற்கு மூன்று விதமான குழந்தைகளும் பிரியமானவர்கள் தான் அனேக குழந்தைகளின் எண்ண அதிர்வுகள் பாப்தாதாவிடம் வந்து சேருகிறது. விதவிதமான அதிர்வலைகள். எந்த வியைம் தந்தையிடம் வந்து சேர்ந்திருக்கிறது என்று தெரியுமா? சைகைகள் மூலம் புரிந்து கொள்பவர்கள் தானே? இந்த தபஸ்யா வருடத்தில் என்னென்ன நடந்து கொண்டிருக்கிறதோ அதற்குக் காரணம் என்ன? பெரிய பெரிய திட்டம் செய்கிறீர்கள், இதற்கு காரணம் என்ன? இது தான் தபஸ்யாவின் பலன் என்று சிலர் நினைக்கிறார்கள். தபஸ்யா வருடத்தில் இது ஏன் என்றும் சிலர் நினைக்கிறார்கள். இரண்டு அதிர்வலைகள் வருகின்றன ஆனால் இந்த நேரத்தின் அதிவேகம் மேலும் தஸ்யாவின் வைப்ரேஷன் மூலமாக அவசியமானது நிறைவேறுவது. இது தபஸ்யா சக்தியின் பலன். பழம் சாப்பிட வேண்டும் இல்லையா? தபஸ்யா அனைத்து தேவைகளையும் தேவையான நேரத்தில் சுலபமாக நிறைவேற்ற முடியும் என்று நாடகத்தில் காண்பிக்கிறார்கள், புரிந்ததா. இது ஏன் நடக்கிறது என்ற கேள்வியே எழ முடியாது. தபஸ்யா என்றால் வெற்றி சுலபமாக அனுபவம் ஆகட்டும். வரும் நாட்களில் அசம்பவமானது எப்படி சம்பவமானது, இந்த அனுபவத்தை அதிகத்திலும் அதிகமாகச் செய்து கொண்டே இருப்பீர்கள். தடைகள் வருவது டிராமாவில் ஆரம்பத்திலிருந்து கடைசி வரை அடங்கியிருக்கிறது. இந்தத் தடைகள் கூட அசம்பவத்திலிருந்து சம்பவத்தை அனுபவம் செய்விக்கிறது. மேலும் நீங்கள் அனைவரும் அனுபவிகளாக ஆகியே விட்டீர்கள். எனவே தடைகள் விளையாட்டாகத் தென்படுகிறது. எப்படி கால்பந்து விளையாடுகிறீர்கள். அதில் என்ன செய்கிறீர்கள்? பந்து வருகிறது என்றால் தான் உதைக்கிறீர்கள் இல்லையா? ஒருவேளை பந்தே வரவில்லை என்றால் எப்படி உதைப்பீர்கள்? விளையாட்டு எப்படி நடக்கும்? இதுவும் கால்பந்து விளையாட்டு தான். விளையாட்டு விளையாடுவதில் மகிழ்ச்சி வருகிறதா? இல்லை.

குழப்பமடைகிறீர்களா? முயற்சி செய்கிறீர்கள் இல்லையா? பந்து என் கால்களில் வரட்டும் நான் அடிக்க வேண்டும் என்று இந்த விளையாட்டு நடந்து கொண்டு தான் இருக்கும். ஒன்றும் புதிதல்ல. காட்சிகளையும் காண்பிக்கிறது மற்றும் முழுமையான வெற்றியையும் காண்பிக்கிறது. இதுதான் பிராமண குலத்தின் நடைமுறை பழக்க வழக்கம் நல்லது.

இந்த குரூப்பிற்கு அதிக வாய்ப்பு கிடைத்திருக்கிறது. எந்த ஒரு காரியத்திற்கும் நிமித்தம் (பொறுப்பாக) ஆவது. எந்த விதமான விதி மூலமாக நிமித்தம் ஆவது என்றால் சான்ஸை (வாய்ப்பை) எடுக்கக் கூடியபைர் சான்ஸலர் ஆவது. இன்றைய உலகில் செல்வந்தர்கள் அதிகமாக இருக்கிறார்கள் ஆனால் உங்களிடம் உலகத்தில் இருப்பவர்களிடம் இல்லாத மிகப் பெரிய செல்வம் எது? மேலும் அதன் அவசியம் செல்வந்தர்களுக்கும் தேவையாக இருக்கிறது. ஏழைகளுக்கும் தேவையாக இருக்கிறது? அது எந்த செல்வம்? மிகப் பெரிய அவசியமான செல்வம் Sympathy (அனுதாபம்). ஏழையாக இருந்தாலும் பணக்காரர்களாக இருந்தாலும் இன்று Sympathy இல்லை. Sympathy என்ற செல்வம் தான் மிக உயர்ந்தது. வேறு எதுவும் இல்லை என்றாலும் சிம்பத்தி மூலமாக அனைவரையும் திருப்திப் படுத்த முடியும். மேலும் உங்களுடைய Sympathy ஈஸ்வரிய குடும்பம் என்ற முறையின் காரணத்தினால் Sympathy. அற்ப காலத்திற்கான Sympathy இல்லை. குடும்பத்தினரின் Sympathy மிகப் பெரிய Sympathy மேலும் இது அனைவருக்கும் அவசியமாக இருக்கிறது. மேலும் நீங்கள் அனைவருக்கும் கொடுக்கலாம். ஆன்மீக Sympathy உடல், மனம், பொருளின் தேவைகளையும் பூர்த்தி செய்ய முடியும். நல்லது. இதைப் பற்றி பின்பு கூறுகிறோம்.

நாலா புறமுமுள்ள தபஸ்வி ராஜ் உயர்ந்த ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் யோகத்தின் பிரயோகம் மூலமாக குறைந்த செலவில் வெற்றியின் உயர்ந்த அனுபவம் செய்யக் கூடிய, எப்பொழுதும் நான் உன்னுடையவன் நீ என்னுடையவன் என்ற இந்த தபஸ்யாவில் மூழ்கியிருக்கக் கூடிய, எப்பொழுதும் ஒவ்வொரு நேரமும் தபஸ்யா மூலமாக குஷியில் ஆடும் மற்றும் தந்தை மேலும் தன்னுடைய குணத்தைப் பாடும் அந்த மாதிரி பாரதம் மற்றும் வெளிநாட்டின்

அனைத்து நினைவு சொரூபக் குழந்தைகளுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகளும் நமஸ்காரமும்.

வரதானம்: சாதாரண காரியம் செய்தாலும் உயர்ந்த நினைவு மற்றும் நிலையின் ஜொலிப்பைக் காண்பிக்கக் கூடிய புருஷோத்தம சேவாதாரி ஆகுங்கள்!

எப்படி உண்மையான வைரம் எவ்வளவு தான் தூசியில் மறைந்திருந்தாலும் தன்னுடைய பிரகாஷத்தை அவசியம் காண்பிக்கும். அதேபோல் உங்களுடைய வாழ்க்கையும் வைரத்திற்குச் சமமானது. எனவே எப்படிப்பட்ட சூழ்நிலையிலும் எப்படிப்பட்ட குழுவிலும் உங்களுடைய பிரகாசம் அதாவது ஜொலிப்பும் பொலிவும் அனைவருக்கும் தென்படட்டும். செய்யும் சேவை சாதாரணமாக. இருந்தால் கூட பார்ப்பவர்கள் இவர் சாதாரண நபர் இல்லை என்று உணரும்படி உங்களுடைய நினைவு மற்றும் நிலை உயர்ந்ததாக இருக்கட்டும். இவர் சேவாதாரியாக இருந்தாலும் புருஷோத்தமன் என்று உணரட்டும்.

சுலோகன்: யாருக்கு எண்ண அளவில் கூட எங்கேயும் பற்றுதல் இல்லையோ அவர் தான் உண்மையான இராஜரிஷி!

✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳

## 04.12.1991 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# வெற்றிகரமான தபஸ்வி என்றாலே தூய்மையெனும் பர்சனாலிட்டி (தோற்றம்) மற்றும் ராயல்டி (உயர்வு) உடையவராவார்!

இன்று நாலாபுறமும் உள்ள தபஸ்வி குழந்தைகளின் நினைவு பாப்தாதாவிடம் வந்தடைந்து கொண்டேயிருந்தது. சிலர் சாகரத்தில் நினைவின் பிரதிபலனை கொண்டாடிக் கொண்டிருக்கின்றனர். சில குழந்தைகள் ஆகாரி (சூட்சும) ரூபத்தில் நினைவு மற்றும் சந்திப்பை அனுபவம் செய்து கொண்டிருக்கின்றனர். பாப்தாதா இருவிதமான குழந்தைகளையும் பார்த்துக் கொண்டிருக்கின்றார். இன்று அமிர்த வேளையில் பாப்தாதா குழந்தைகளின் தபஸ்யாவின் பிரத்யட்ச சொரூபத்தை பார்த்துக் கொண்டிருந்தார் ஒவ்வொரு குழந்தையும் தனது முயற்சிக்கேற்ப தபஸ்யா செய்து கொண்டிருக்கின்றனர். இலட்சியமும் உள்ளது, உற்சாகமும் உள்ளது. அனைவருமே தபஸ்வி தான் ஏனெனில் பிராமண வாழ்வின் சிறப்பே தபஸ்யா தான். தபஸ்யா என்றாலே ஒருவரின் ஈர்ப்பிலேயே ஈர்க்கப்பட்டிருப்பது. வெற்றிகர மான தபஸ்வி வெகு சிலரே உள்ளனர். முயற்சி செய்யும் தபஸ்வி அனேகர் உள்ளனர். வெற்றிகரமான தபஸ்வியின் அடையாளம் அவரது முகம் மற்றும் செயலில் தூய்மையின் தோற்றப் பொலிவும் தூய்மையெனும் உயர்ந்த தன்மையும் சதா தெளிவாக அனுபவம் ஆகும். தபஸ்யா என்றாலே மனம்-சொல்-செயலில் மற்றும் சம்பந்தம் தொடர்பில் தூய்மையின்மையின் அம்சத்தையும் வினாசம் செய்வதாகும். பெயர் அடையாளத்தையும் அழிப்பதாகும். எப்பொழுது தூய்மையின்மை முழுமையாக அழிந்து போகிறதோ இந்த முடிவைத் தான் சம்பன்ன (முழுமை) ஸ்திதி என்று சொல்லப்படும். வெற்றிகர மான தபஸ்வி என்றாலே சதா இயல்பாகவே தூய்மையின் தோற்றம்

மற்றும் உயர்வு ஒவ்வொரு சொல், செயல், பார்வை, உள் உணர்வுகள் மூலமாக அனுபவம் ஆகும். தூய்மையென்பது பிரம்மச்சரியம் கடைபிடிப்பது மட்டும் அல்ல, சம்பூரண தூயமை என்றாலே சங்கல்பத்தாலும் எந்த ஒரு விகாரத்தையும் தொடாமல் இருப்பதாகும். எப்படி இந்த பிராமண வாழ்வில் தேகக் கவர்ச்சியும், தேகத்தை தொடுவதும் தூய்மையின்மை என நினைக்கின்றீர்களோ, அது போலவே மனம், புத்தியில் எந்த விகாரமும் எண்ணத்தாலும் கவர்ந்திழுப்பதோ, தொடுவதோ இதுவும் தூய்மையின்மை என்றே சொல்லப்படும். தூய்மையெனும் தோற்றம் உடையவர், உயர்வு தன்மையில் இருப்பவர் மனம்-புத்தியால் கூட இந்த தீயவற்றை தொட மாட்டார்கள். ஏனெனில் வெற்றிகரமான தபஸ்வி என்றாலே சம்பூரண வைஷ்ண வராவார்கள் வைஷ்ணவர்கள் ஒருபோதும் தீய பொருளை தொட்டுக் கூட பார்க்க மாட்டார்கள். அவர்கள் ஸ்தூலமான வைஷ்ணவர்கள். நீங்களோ சூட்சுமமான பிராமண வைஷ்ணவ ஆத்மாக்கள். தீயவற்றை தொடாத நிலையே தபஸ்யா. தபஸ்யா என்றாலே தாரணை செய்வது. தாரணை என்றாலே கிரகிப்பது -இது மேலோட்டமான விஷயம் ஆகும் ஆனால் எண்ணத்தாலும் தொடாமல் இருப்பது இதையே உண்மையான வைஷ்ணவம் என்று சொல்லப்படும். நினைவிற்கான நேரத்தில் மட்டும் நினைவு செய்வது இதை தபஸ்யா என்று சொல்லப்படுவதில்லை. தபஸ்யா என்றால் தூய்மையெனும் பர்சனாலிட்டி மற்றும் ராயல்டியை தானும் அனுபவம் செய்வது பிறரையும் அனுபவம் செய்ய வைப்பது. வெற்றிகரமான தபஸ்வி என்றாலே விசேஷமான மகான் ஆத்மா ஆவதாகும். விசேஷ ஆத்மாக்கள் மற்றும் மகான் ஆத்மாக்களை தேசத்தின் மற்றும் உலகின் பர்சனாலிட்டிஸ் என்று சொல்லப்படுகின்றது. தூய்மையின் பர்சனாலிட்டி என்றாலே ஒவ் வொரு செயலிலும் மகான் தன்மை, விசேஷ தன்மை இருப்பதாகும். பர்சனாலிட்டி என்றால் சதா தனக்காகவும், பிறருக்காகவும் சேவையில் பிஸியாக (சுறுசுறுப்பாக) இருத்தல் அதாவது தனது சக்தி-சமயம் சங்கல்பம் இவற்றை வீண் செய்யாமல் இலாபகரமாக பயன்படுத்துவதாகும். இப்படிப்பட்டவரையே பர்சனாலிட்டியுடையவர் என்று சொல்லப்படும் பர்சனாலிட்டி உடையவர் ஒருபோதும் சிறிய சிறிய விஷயங்களில் தனது மனம்-புத்தியை சுறுசுறுப்பாக வைக்கமாட்டார்கள் எப்படியென்றால் தூய்மையில்லாத விஷயங்கள், சிரேஷ்ட ஆத்மாக்களாகிய உங்கள்

முன்பு சிறியதா, பெரியதா? எனவே தபஸ்வி ஒருவர் இப்படிப்பட்ட விஷயங்களை கேட்டும் கேளாதிருப்பார். பார்த்தும் பாராதிருப்பார். இப்படிப்பட்ட பயிற்சி செய்கின்றீர்களா? இப்படி தபஸ்யா செய்கின்றீர்களா? அல்லது இப்படி நினைக்கின்றீர்களா, நான் விரும்பவில்லை ஆனால் கண்ணில் படுகிறது, காதில் விழுகிறது, காதில் விழுகிறதா? உங்களுக்கு சம்பந்தம் இல்லாத பொருளை பார்த்தாலும் பார்க்காதிருக்கின்றீர்கள் அல்லவா? நீங்கள் சென்று கொண்டிருக்கும்பொழுது வழியில் ஏதோ ஒன்று கண்ணில் படுகின்றது ஆனால் உங்களுக்கு அவசியம் இல்லையெனும் பொழுது பார்த்தாலும் பாராதிருப்பீர்கள் தானே? சாலையோரக் காட்சியென புரிந்து கடந்து செல்வீர்கள் தானே? அது போலவே உங்களுக்கு வேலைக்குதவாத விஷயங்களை கேட்டும் கேளாதிருங்கள், பார்த்தும் பாராதிருங்கள். மாறாக மனம்-புத்தியில் அது இப்படி, இது எப்படி என்று தாரணை செய்து விட்டால் தீயவற்றை தொட்டு விட்டதாகும். அதாவது உண்மையான வைஷ்ணவ நிலை சம்பூரண ரூபத்தில் கிடையாது. பியூரிட்டியின் பர்சனாட்டியில் சதவீதம் குறைவு அதாவது தபஸ்யாவின் சதவீதம் குறைவு தபஸ்யா என்றால் என்ன என்பதை புரிந்து கொண்டீர்களா?

இந்த விதிப்படி தன்னைத்தானே சோதனை செய்யுங்கள். தபஸ்யா ஆண்டில் தபஸ்யாவின் பிரத்யட்ச சொரூபமான பியூரிட்டியின் பர்சனாலிட்டியை அனுபவம் செய்கின்றீர்களா? பர்சனாலிட்டி ஒருபோதும் மறைந்திருக்க முடியாது. அது அவசியம் பிரத்யட்சமாக வெளியில் தென்படும். சாகார பிரம்மாபாபாவை பார்க்கும் பொழுது தூய்மையின் பர்சனாலிட்டி எவ்வளவு தெளிவாக அனுபவம் செய்தீர்கள். இது தபஸ்யாவின் அனுபவத்தின் அடையாளம் இப்பொழுது உங்கள் மூலமாக பிறருக்கு அனுபவம் ஆக வேண்டும். முகம் மற்றும் நடத்தை இரண்டின் மூலமாகவும் அனுபவம் செய்ய முடியும். இப்பொழுது கூட சிலர் அனுபவம் செய்கின்றனர், ஆனால் இந்த அனுபவத்தை தன் மூலமாக பிறருக்கும் பரப்புங்கள். இன்று பர்சனாலிட்டியைப் பற்றி கேட்டீர்கள், பிறகு ராயல்ட்டி பற்ற சொல்கிறோம். அனைவரும் சந்திப்பை கொண்டாட வந்துள்ளீர்கள். எனவே பாப்தாதாவும் சந்திப்பை கொண்டாடுவதற்காக உங்களைப் போலவே வியக்த சரீரத்தில் (சாகாரத்தில்) வந்துள்ளார். சமநிலை ஆக வேண்டியுள்ளது. நீங்கள் சாகாரத்தில் உள்ளீர்கள் எனவே பாபாவும்

சாகார உடலை ஆதாரமாக எடுக்க வேண்டியுள்ளது. அதுபோலவே நீங்களும் வியக்கத்திலிருந்து அவ்யக்தம் ஆக வேண்டுமா அல்லது அவ்யக்தமானவரை வியக்தமாக்க வேண்டுமா? சட்டம் என்ன சொல்கிறது? அவ்யக்தம் ஆகவேண்டும் அல்லவா? அப்படியென்றால் பிறகு அவ்யக்தமான பாபாவை வியக்தத்தில் ஏன் அழைக்கின்றீர்கள்? நீங்களும் அவ்யக்தம் ஆக வேண்டும் எனும்பொழுது அவ்யக்தமான வரை அவ்யக்தத்திலேயே இருக்க விடலாமல்லவா? அவ்யக்த சந்திப்பின் அனுபவத்தை அதிகரித்துச் செல்லுங்கள் அவ்யக்தமான பாபாவும் நாடாகப்படி வியக்தத்தில் வருவதற்காக கட்டுப்பட்டுள்ளார் ஆனால் சமயத்திற்கேற்ப, சூழ்நிலைக்கேற்ப அவ்யக்த சந்திப்பின் அனுபவம் தக்க சமயத்தில் வேலைக்குதவும். எனவே இந்த அனுபவத்தை அந்தளவிற்கு தெளிவாகவும், சுலபமாகவும் செய்து கொண்டே செல்லுங்கள். அது தான் சமயத்தில் அவ்யக்த சந்திப்பை சாகார் சந்திப்பை போன்று அனுபவம் ஆகும். புரிந்ததா? அந்த சமயத்தில் இப்படி சொல்லாதீர்கள்? எங்களுக்கு அவ்யக்தமான பாபாவை வியக்தமான ரூபத்தில் சந்திக்கும் பழக்கம் தான் உள்ளது? எப்படி சமயமோ அப்படி சந்திக்க வேண்டும். புரிந்ததா?

யாரரெல்லாம் எங்கிருந்து வந்திருந்தாலும் இந்த சமயத்தில் அனைவருமே மதுபன் வாசிகளே! அல்லது தன்னை மகாராஷ்டிரா வைச் சார்ந்தவன், ஒரிஸாவை சார்ந்தவன் என நினைக்கின்றீர்களா? உண்மையில் அனைவரும் மதுபன் வாசிகள் தான். சேவைக்காக வெவ்வேறு இடங்களுக்கு சென்றுள்ளீர்கள். பிராமணர் என்றாலே மதுபன்வாசி தான். சேவை செய்ய சென்றுள்ளீர்கள். எனவே சேவை செய்யும் இடத்தை இது தான் எனது இடம் என்று ஒருபோதும் நினைக்காதீர்கள். சில குழந்தைகள் இப்படி சொல்கிறார்கள், இவரை மாற்றுங்கள், இல்லை என்றால் எங்களை பஞ்சாப்பிற்கே, ஒரிசாவிற்கே அனுப்புங்கள். உண்மையில் நீங்கள் பஞ்சாப், ஒரிசாவைச் சார்ந்தவரா? அல்லது மதுபனைச் சார்ந்தவரா? பிறகு ஏன் சொல்கிறீர்கள். நாங்கள் பஞ்சாப்பை சார்ந்தவர், பஞ்சாப்பிற்கே அனுப்புங்கள், நாங்கள் குஜராத்தைச் சார்ந்தவர்கள் குஜராத்திற்கே அனுப்புங்கள்? இடம் மாற தயாராக உள்ளீர்களா? ஆசிரியர் அனைவரும் தயாராக உள்ளீர்களா? யாரை எங்கு வேண்டுமானாலும் மாற்றலாமா? தயாரா? பாருங்கள் தாதி அனைவருக்கும் இல்லை என்ற சர்டிபிகேட் தருகிறார்கள். நல்லது

இதையும் ஏப்ரலில் செய்வோம் யார் மாறுவதற்கு தயாரோ அவர்கள் மட்டுமே சந்திக்க வரவும். சென்டருக்கு சென்று யோசிப் பீர்களா? இருக்க மாட்டோம் என்றால் இவருக்கு என்னவாகும்? எனக்கு என்னவாகும்? வெகு சிலர் ஒதுங்கவும் செய்வர். பாப்தாதாவிடமிருந்து தபஸ்யாவிற்காக பரிசு பெற விரும்புகின்றீர்களா? பாப்தாதாவிற்கும் தபஸ்யாவிற்காக பரிசு தர விரும்புகின்றீர்களா? அல்லது பெற மட்டும் விரும்புகின்றீர்களா? அனைத்து சென்டரிலிருந்தும் சரண்டர் ஆகி வரவும் புதிய வீட்டில் ஆசை உள்ளதா? கஷ்டப்பட்டு வீடு கட்டியிருப்பீர்கள் அல்லவா? எங்கு எனது இருக்குமோ அங்கு தபஸ்யா என்று எப்படி சொல்வது? தபஸ்யா என்றாலே உனது, தபஸ்யா கலங்கமடைவது என்றால் எனது. புரிந்ததா? இவர்கள் எல்லாம் சிறிய சிறிய ஆசிரியர்கள், சொல்வார்கள் கவலையில்லை இங்கிருந்து எங்கு வேண்டுமாயினும் செல்வோம், பெரியவர்களுக்கு சிறிது யோசிக்க வேண்டியுள்ளது. நல்லது. சென்டருக்கு வருபவர்கள் நினைக்கின்றீர்களா? உங்கள் ஆசிரியர் சென்று விட்டால் நீங்களும் எவரெடியா? யார் வேண்டுமாயினும் எங்கு வேண்டுமாயினும் செல்லாம். அல்லது இப்படி சொல்வீர்களா? எங்களுக்கு இந்த ஆசிரியர் (டீச்சர்) தான் வேண்டும்? எந்த ஆசிரியர் கிடைத்தாலும் நாங்கள் சம்மதம் என்பவர்கள் கை உயர்த்துங்கள். ஆசிரியர் யார் கிடைத்தாலும் பாப்தாதா பொறுப்பாளி, தாதி, தீதி பொறுப்பாளர்கள் இப்படி உள்ளவர்கள் கை உயர்த்துங்கள். இப்பொழுது டி.வி.யில் படம் பிடித்தாயிற்று அனைவர் படத்தையும் டி.வியில் எடுங்கள், பிறகு பார்க்கலாம். இறுதி நேர சோதனையிலும் இதுவே கேள்வியாக வரும்! நஷ்டமோகா ஸ்மிருதி சொரூபம். எனவே இறுதித் தேர்விற்காக அனைவரும் தயாராகியே தீர வேண்டும். ஒத்திகை செய்வோம் அல்லவா? மண்டலத்தின் தலைவிகளையும் மாற்றுவோம். சகோதரர்களையும் மாற்றுவோம். உங்களுடையது என்று என்ன உள்ளது? பாப்தாதா கொடுத்தார், பாப்தாதாவே எடுத்துக் கொள்கின்றார். நல்லது அனைவரும் எவரெடி தான். எனவே இப்பொழுது கை உயர்த்தியதற்காக மட்டும் வாழ்த்துக்கள். நல்லது.

நாலாபுறமும் உள்ள வெற்றி தபஸ்வி ஆத்மாக்களுக்கு சதா பியூரிடியின் பர்சனாலிட்டியில் இருப்பவர்கள், சதா பியூரிட்டியின் ராயல்ட்டியில் இருப்பவர்கள், சதா உண்மையான சம்பூரண வைஷ்ணவ

ஆத்மாக்கள், சதா சமயத்திற்கேற்ப தன்னை மாற்றிக் கொள்ளும் உலகை மாற்றியமைக்கும், அப்படிப்பட்ட சதாயோகி, சகஜயோகி மகான் ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்தே.

**குழுவினருடன் சந்திப்பு: அனைவரும் தபஸ்வி ஆத்மாக்கள் இப்படி அனுபவம் செய்கிறீர்களா?**

தபஸ்யா என்றாலே ஒரு பாபா தவிர வேறு யாரு மில்லை. அப்படியோ அல்லது இப்பொழுதும் வேறொருவர் உள்ளனரா? ஏதேனும் மனிதர் அல்லது ஏதேனும் வைபவம்? ஒருவரைத் தவிர வேறுயாருமில்லையா? அல்லது சிறிது சிறிது ஈர்ப்பு உள்ளதா? நிமித்தமாக இருந்து சேவை செய்வது அது வேறு விஷயம் ஆனால் எங்கெல்லாம் ஈர்ப்பு இருக்குமோ, மனிதரிடமோ, வைபவத்திடமோ ஈர்ப்பு இருப்பதன் அடையாளம் புத்தி கண்டிப்பாக அங்கு செல்லும் மனமும் அவசியம் அங்கே ஓடும். எனவே சோதனை செய்யுங்கள். மனம், புத்தி எங்கெல்லாம் ஓடுகிறது! பாபா மற்றும் சேவை தவிர வேறு எங்காவது மனம், புத்தி செல்கிறதா? அப்படி செல்கிறது என்றால் ஈர்ப்பு உள்ளது. விவகாரத்தில் ஈடுபட்டாலும், என்ன செய்தாலும் டிரஸ்டியாக இருந்து செயல்படுங்கள். எனது அல்ல, உனது. எனது வேலை, நான் தான் செய்ய வேண்டும், இப்படி எப்பொழுதாவது சொல்கிறீர்களா? அல்லது உனது உனக்கே அர்ப்பணம், எனது எங்கிருந்து வந்தது? எனது இந்த சொல்லும் சொல்ல முடியாதா? நானே பார்க்க வேண்டியுள்ளது, நானே செய்ய வேண்டும். எனது தான், காப்பாற்றத்தான் வேண்டும்.. எனது என்றாலே பாரம் சுமப்பதாகும். பாபாவுடையது பாபா செய்வர், நான் நிமித்தமானவன் என்றால் லேசாக இருப்பீர்கள். சுமை தூக்கும் பழக்கம் இல்லை தானே? 63-பிறவிகளாக சுமை தூக்கினீர்கள் அல்லவா? அனேகருக்கு சுமை தூக்கும் பழக்கம் உள்ளது. சுமை தூக்காமல் இருக்க முடியாது பழக்கத்தால் உறுதியாகி விட்டது. எனது என்று ஏற்றுக் கொள்வது சுமை தூக்குவதாகும். புரிந்ததா? சிறிதளவு ஒதுக்கி வைத்து, சமயம் வரும் பொழுது பயன்படுத்தலாமா? பாண்டவர்கள் சிறிதளவு வங்கி இருப்பு பாக்கெட் பணம் வைத்துள்ளீர்களா? சிறிதளவு கூட எனது என்பதே இல்லையே எனது என்றாலே அழுக்கு எங்கு எனது என்ற எண்ணம் இருக்குமோ அங்கு விகாரங்களின் அழுக்கு கண்டிப்பாக இருக்கும். உனது என்று இருந்தால்

என்ன இருக்கும்? நீந்திக் கொண்டேயிருப்பீர்கள், மூழ்கி விட மாட்டீர்கள். நீந்துவதில் ஆனந்தம் வரும் அல்லவா? எனவே தபஸ்யா என்றாலே உனது, எனது அல்ல. நல்லது.

இது ஈஸ்டர்ன் ஜோன். சூரியன் உதயம் ஆகும் இடம் அல்லவா? எனவே ஈஸ்டர்ன் ஜோனிடம் பாபாவின் நினைவார்த்தமான சூரியன் சதா பிரகாசித்துக் கொண்டிருக்கின்றது. அனைவரும் தபஸ்யாவில் வெற்றியை பிராப்தமாக அடைந்து கொண்டிருக்கின்றீர்கள் அல்லவா? தபஸ்யாவில் திருப்தியாக உள்ளீர்களா? தனது தினசரி சார்ட் மீது திருப்தி உள்ளதா? அல்லது இப்போது ஆக வேண்டுமா? இது கூட ஒரு லிப்ட்'ன் கிப்ட் யார் எவ்வளவு வேண்டுமோ அவ்வளவு செய்ய முடியும். முயற்சி குறைவு நிமித்தம் என்ற பெயரில் மற்றும் பிராப்தி அதிகம் செய்ய முடியும். இப்பொழுது கூட சமயம் உள்ளது. ஆண்டு முழுமை பெறவில்லை. இப்பொழுது கூட யார் எவ்வளவு பெற வேண்டுமோ அவ்வளவு பெற முடியும். எனவே வெற்றி எனும் சூரியனை கிழக்கில் எழுப்புங்கள் சதா அனைவரும் குஷியாக இருக் கின்றீர்களா? அல்லது அவ்வப்பொழுது ஏதேனும் விஷயம் வரும் பொழுது குஷியிழந்து போகிறதா? குஷி அதிகரித்துக் கொண்டே செல்கிறதா? குறைவதில்லையே? மாயாவை வென்றவர்களா? அல்லது மாயை வர்ணங்களை காண்பிக்கின்றதா? அது எவ்வளவு தான் வர்ணம் காண்பித்தாலும் நான் மாயாபதி (மாயை வென்றவன்) மாயை எனது படைப்பு நான் மாஸ்டர் படைப்பாளன். எனவே விளையாட்டைப் பாருங்கள் ஆனால் விளையாட்டில் தோல்வி அடையாதீர்கள். மாயை எவ்வளவு தான் விதவிதமான விளையாட்டு காண்பித்தாலும், அதை பார்க்கும் நீங்கள் மனோரம்மியமான காட்சியென (மனதை மகிழ்விக்கும்) புரிந்து பாருங்கள். பார்த்து பார்த்து தோல்வியடைய வேண்டாம். சாட்சியாளர் ஆகி, விலகியிருந்து பாத்துக் கொண்டே செல்க. அனைவரும் தபஸ்யாவில் முன்னேறுபவர்கள், பரிசு பெறுபவர் தானே? சேவை நன்கு நடைபெறுகின்றது. சுய முயற்சியில் பறந்து கொண்டிருக்கின்றீர்கள், சேவையிலும் பறந்து கொண்டிருக்கின்றீர்கள். அனைவருமே முதல் எண் தான். எப்போதும் முதலில் இருங்கள், இரண்டாம் இடத்திற்கு செல்ல வேண்டாம். முதலில் இருந்தால் சூரிய வம்சத்தினர் ஆவீர்கள் இரண்டாவது என்றால் சந்திரவம்சி முதல் நம்பர் மாயாஜீத் ஆவீர்கள். இன்னல் எதுவும் இல்லை. பிரச்சனை எதுவும்

இல்லை. கேள்வி எதுவும் இல்லை, பலவீனம் எதுவும் இல்லை. முதல் நம்பர் என்றாலே வேகமான முயற்சி. வேகமான முயற்சி செய்பவர் பின்னால் இருக்க முடியாது சதா சாட்சி மற்றும் பாபாவின் துணை இதையே நினைவில் வைக்கவும்.

வரதானம்: ஞானத்தின் இரகசியங்களை புரிந்து சதா உறுதியாக இருக்கும் நிச்சய புத்தி, விக்ன வினாசக் ஆகுக!

விக்ன வினாசக் நிலையில் நிலைத்திருப்பதால் எவ்வளவு பெரிய தடையும் விளையாட்டு என்று அனுபவம் ஆகும். விளையாட்டு என புரிந்து கொண்ட காரணத்தால் தடைகளைக் கண்டு பயப்பட மாட்டீர்கள் ஆனால் குஷி-குஷியாக வெற்றி அடைவீர்கள். மேலும் டபுள் லைட் ஆக இருப்பீர்கள். டிராமா எனும் ஞானத்தின் நினைவால் ஒவ்வொரு தடையும் புதியதல்ல என்று தோன்றும். புதிய விஷயமல்ல, மிகப் பழைய விஷயம் என்று உணர முடியும். அனேக முறை வெற்றியடைந்தேன். இப்படி நிச்சய புத்தி, ஞானத்தின் ரகசியத்தை புரிந்து கொண்ட குழந்தையின் நினைவார்த்தமே அச்சல்கர் என்று உள்ளது.

சுலோகன்: திடத்தன்மை (உறுதி) என்ற சக்தி உடனிருந்தால் வெற்றி கழுத்தின் மாலை ஆகி விடும்!

✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳
✳✳✳✳✳✳✳✳

.

# 11.12.1991 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# சத்தியம் என்ற பண்பு தான் உண்மையான உயர்தன்மை (ராயல்டி)!

இன்று பாப்தாதா தனது சிரேஷ்ட பரிவாரம் அதாவது தனது ராயல் குடும்பத்தைப் பார்த்துக் கொண்டிருக்கின்றார். முழு கல்பத்திலேயே அனைவரையும்விட ராயல் தன்மையுடைய வர்கள் சிரேஷ்ட ஆத்மாக்களாகிய நீங்கள் மட்டும் தான். அனாதி ஆத்மீக சொரூபத்திலும் எல்லோரையும் விட மிக சிரேஷ்ட ராயல் ஆத்மாக்கள் நீங்கள் மற்றும் ஆதி சொரூப தேவ ஆத்மாக்களின் ரூபத்திலும் கூட ராயல் ராஜ்ய அதிகாரி ராயல் குடும்பத்தினர். பூஜைக்குரிய ரூபத்திலும் கூட தேவ ஆத்மாக் களுக்கு எவ்வளவு ராயலாக பூஜை நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. வேறு எந்த பிற தர்ம ஆத்மாக்களுக்கும் அரசாட்சி செய்யும் ஆத்மாக்களுக்கும் கூட இவ்வளவு ராயலாக பூஜை நடைபெறுவதில்லை. எனவே மூன்று ரூபத்திலும் அனாதி, ஆதி, பூஜைக்குரிய நிலை இம் மூன்று சொருபத்திலும் இப்படி ராயல் வேறு எவருமில்லை. ஏனென்றால், ஆத்மாக்களாகிய உங்களது தூய்மையே ராயலாகும். இப்படிப்பட்ட சம்பூர்ண பவித்திரம் முழு கல்பத்திலேயே வேறு யாரும் ஆகவில்லை. ஆகவும் முடியாது. இந்த தூய்மை தான் விசேஷமானது. எனவே தேவ ஆத்மாக்களுக்கு முன்பு மட்டுமே தான் நீங்கள் சம்பூர்ண நிர்விகாரிகள் என்று மகிமை பாடுகிறார்கள். வேறு எந்த தர்மாத்மாக்களின் மகிமையிலும் இப்படி மகிமை பாடுவதில்லை. தேவ ஆத்மாக்களின் சிரேஷ்ட கீர்த்தி அதாவது சிரேஷ்ட பவித்திரம் தான். கீர்த்தனை செய்யப்படுகின்றது. வேறு எந்த தர்மத்திலும் கீர்த்தனை செய்யப்படுவதில்லை. இன்னிசை வாத்தியங்கள் மூலமாக கீர்த்தனைகள் செய்யும் பழக்கமும் தேவ ஆத்மாக்களுக்கு மட்டுமே உள்ளது. சங்கமயுகத்தின் சக்தி சொரூபத்தில் உள்ளது. இது சம்பூர்ண தூய்மையின் விதி ஸித்தியாகும். எனவே உங்களைப் போன்று ஆன்மீக ராயல்டி வேறு எந்த ஆத்மாக்களிடமும் கிடையாது. எனவே சோதனை செய்யுங்கள் இப்படிப்பட்ட தூய்மையின் ராயல் எவ்வளவு தூரம்

வந்துள்ளது? ஆன்மீக ராயல்டியின் மிக உயர்ந்த அடையாளம் -ராயல்டி என்றாலே ரியலிட்டி அதாவது சத்தியம் ஆத்மாவின் அனாதி சொரூபம், சத்தியம் அது போன்றது. சத் அதாவது அழியாதது மற்றும் சத்தியமானது. பாபாவின் மகிமை எப்படி சத்யம், சிவம், சுந்தரம் என பாடப்படுகின்றதோ அப்படியே சத்தியமே சிவம், உண்மையே கடவுள் என்று சொல்லப்படுகின்றது. எனவே பாபாவின் மகிமை சத்யம் அதாவது சத்தியமானது, அது போலவே ராயல்டி அதாவது ரியலி ட்டி, சத்தியத்தில் சிறிதளவும் கலப்படம் இல்லை. சொல்லிலோ, செயலிலோ, தொடர்பிலோ, உறவிலோ கலப்பிடமின்மை, அதையே பாப்தாதா சாதாரண பாஷையில் சொல்கிறார் உண்மை. ராயல் ஆத்மாக்களின் உள்ளுணர்வு, பார்வை, சொல், செயல் அனைத்திலும் உண்மை ஒன்று தான் இருக்கும். மாறாக உள்ளுணர்வில் ஒரு விஷயமும் சொல்லில் வேறு வடிவமைக்கப்பட்ட பாவனையும் இருக்காது இதனை ராயல்டி மற்றும் ரியலிட்டி என்று சொல்லப்படுவதில்லை,

நிகழ்காலத்தில் பாப்தாதா குழந்தைகளின் லீலைகளை பார்த்துக் கொண்டும், கேட்டுக் கொண்டும் இருக்கின்றார். சில குழந்தைகள் விஷயங்களை கலப்படம் செய்வதிலும், வடிவமைப்பதிலும் மிகவும் புத்திசாலிகளாக இருக்கின்றனர். ஏனெனில் துவாபர யுகத்திலிருந்து கலப்படம் செய்யபட்ட வடிவமைக்கப்பட்ட கதைகள் அதிகம் கேட்டிருக்கின்றனர். எனவே இந்த பிராமண வாழ்விலும் அந்த சம்ஸ்காரம் வெளிப்படுத்தி விடுகின்றனர். பொய்யை முற்றிலுமே சம்பூர்ண சத்யம் என்று சொல்லும் அளவிற்கு நல்ல ரூபத்தில் வடிவமைக்கின்றனர். மேலும் பொய்யை உண்மையென நிரூபித்து விடுகின்றனர். இதைத் தான் உள்ளொன்று, புறமொன்று என்று சொல்லப்படுகின்றது. இது என்ன ரியலிட்டியா? ராயல்டியா? இல்லையல்லவா. எனவே அப்படிப்பட்ட பவித்திரத்தாவின் ராயல்டி அதாவது ரியலிட்டி இது ராயல்ட்டியின் அடையாளம், மாறாக இந்த அடையாளம் இல்லை என்றால் புரிந்து கொள்ளுங்கள். தூய்மையின் ராயல் தன்மை வரவில்லை அல்லது தூய்மை சதவீதத்தில் வந்துள்ளது, சம்பூர்ணம் இல்லை.

ரியலிட்டியின் அடையாளம் பாப்தாதா சதா சொல்லிக் கொண்டே இருக்கின்றார். உண்மை ஒருபோதும் பொய்க்காது. உண்மையான ஆத்மாக்கள் சதா குஷியில் நடனம் ஆடிக் கொண்டே இருப்பார்கள். சிலசமயம் குஷி குறைவு, சில சமயம் குஷி அதிகம் இப்படி இருக்க மாட்டார்கள். நாளுக்கு நாள் ஒவ்வொரு நேரமும் குஷி அதிகரித்துக் கொண்டேயிருக்கும். ரியலிட் யின் அடையாளம். சதா குஷியில் நடனமாடுவது. அகமும், முகமும் என்று சொல்வது போன்று ராயல்ட்டியின் அர்த்தமும் இது தான் அகமும், முகமும் சதா மலர்ந்திருக்கும். வெளியில் மட்டும் மலர்ந்த முகமல்ல உள்ளமும் மலர்ந்திருக்கும். மலர்ந்த உள்ளம், மலர்ந்த முகம் இரண்டும் மலர்ந்திருக்கும். சில சமயம் இப்படியும் இருக்கிறது, உள்ளத்தில் குஷியில்லை ஆனால் வெளிமுகத்தில் மட்டும் சமயத்திற்கேற்ப மகிழ்ந்து காண்பிக்கின்றனர். இதனை அற்ப கால முகமலர்ச்சி என்றே சொல்லப்படும் ஆனால் அகமும், முகமும் மலர்ந்திருப்பது (அவிநாசி) அழியாதது. எனவே பவித்திரத்தின் ரியலிட்டி ராயல்டி என்பது அவினாசி அகம் மற்றும் முக மலர்ச்சியாகும். சோதனை செய்யுங்கள், பிறரை சோதனை செய்வதில் இறங்கி விட வேண்டாம், தன்னை சோதனை செய்யுங்கள். இப்படிப்பட்ட ராயல் ஆத்மா பாப்தாதாவிற்கும் மற்றும் அனைத்து பிராமண பரிவாரத்திற்கும் மிகப்பிரியமானவர் ஆகின்றார். உண்மை அன்புடைய ஆத்மாவின் விசே த்தன்மை என்னவாக இருக்கும்? ஏனெனில், நிகழ்காலத்தின் பழக்க வழக்கத்தின் அடிப்படையில் அதிக அன்புடையவர் மீது விரும்பாமல் கூட அன்பினால் கவர்ந்திழுக்கப்படுகின்றனர். அதைத்தான் உங்கள் பாஷையில் (அட்டேச்மென்ட்) பற்று என்று சொல்கிறீர்கள். ஏனென்றால் அன்பு உள்ளது என்றால் அட்டேச்மென்ட் ஏற்படும் அல்லவா ஆனால் ரியல் மற்றும் ராயல் அன்பின் அடையாளம். எந்தளவிற்கு ஒருவர் அன்பாக இருப்பாரோ அந்தளவிற்கு விலகியும் இருப்பார். இதைத்தான் உண்மை அன்பு, சம்பூர்ண அன்பு என்று சொல்லப்படும். அப்படிப்பட்டவர் முக மலர்ச்சியுடனும் இருப்பார். கவர்ந்திழுப்பவராகவும் இருப்பார் ஆனால் எல்லைக்குட்பட்ட நிலையில் கவர்ந்திழுப்பவராக இருக்க மாட்டார். எனவே ரியல் மற்றும் ராயலின் அடையாளம் என்னவாக இருக்கும்? அதி பியாரா, அதி நியாரா.

ராயல்டி ஆத்மாவிடம் மேலும் உள்ள விசேஷத்தன்மை அந்த ஆத்மாவிடம் எந்த விதமான யாசிப்பும் இராது. ஸ்தூலமாகவோ, சூட்சுமமாகவோ கேட்கும் சம்ஸ்காரம் இருக்காது. ஏனெனில் ராயல் ஆத்மா சதா சம்பன்னமாக முழுமை நிலையில் இருப்பர். ஒன்று வெளி முகமாக முழுமைத் தன்மை ஸ்தூலமான வஸ்துக்களால், ஸ்தூலமான சாதனங்களால் நிரம்பிய நிலை. மற்றொன்று மனதால் முழுமையாக நிரம்பியிருந்தது. மனதால் நிரம்பியிருப்பவர்கள், அவர்களிடம் ஸ்தூலமான பொருட்கள், சாதனங்கள் இல்லாமல் இருந்தாலும் கூட மனம் நிரம்பியிருக்கும் காரணத்தால் ஒருபோதும் தன்னிடம் குறை என்பதே உணரமாட்டார்கள். இல்லாமல் இருந்தாலும் இருப்பதாகவே அனுபவம் செய்வார்கள். எவருடைய மனம் முழுமை பெறாமல் இருக்குமோ அந்த ஆத்மா வெளி முகமாக எத்தனை தான் சாதனங்கள், வஸ்துக்கள் நிரம்பியிருந்தாலும் அவர் ஒருபோதும் தன்னை முழுமை பெற்றவர் என உணர மாட்டார். அப்படிப்பட்ட ஆத்மா சதா ஆசையின் காரணத்தால் வேண்டும், வேண்டும் என்ற பாடல் பாடிக் கொண்டேயிருப்பார். ஒவ்வொரு விஷயத்திலும் இது நடக்க வேண்டும், இது செய்ய வேண்டும், இது கிடைக்க வேண்டும், இது மாற வேண்டும்... ஒவ்வொரு சமயமும் இதே பாடலை பாடிக் கொண்டிருப்பர் ஆனால் மனதால் நிரம்பிய ஆத்மா சதா இதே பாடலை பாடிக் கொண்டிருப்பார் அனைத்தும் அடைந்து விட்டேன், கிடைத்து விட்டது. இது நடக்க வேண்டும் இது செய்ய வேண்டும், இது வேண்டும், வேண்டும் என்பது கூட ராயல் யாசிப்பு சம்ஸ்காரம் ஆகும். எல்லையில்லா சேவை பொருட்டு இது நடக்க வேண்டும், இது செய்ய வேண்டும் என்று நினைப்பது வேறு விஷயம் ஆனால் தனக்காக எல்லைக்குட்பட்ட பிராப்திகளின் அர்த்தத்தில் வேண்டும், வேண்டும் என்பது இது ராயல் பிச்சை. பெயர் வேண்டும், புகழ் வேண்டும், கௌரவம் வேண்டும், அன்பு வேண்டும், கேட்க வேண்டும்.. இவை யாவும் எல்லைக்குட்பட்ட விஷயங்களாகும். ராயல் ஆத்மாவிடம் அம்சம் அளவும் இந்த சம்ஸ்காரம் இருக்காது. புரிந்ததா. ராயல்ட்டி என்றால் என்ன?

தபஸ்யாவின் அட்டவனையில் இவற்றையெல்லாம் சோதனை செய்ய வேண்டும். நான் யாரையும் திட்டவில்லை, கோபப்படவில்லை இதை மட்டும் பார்த்தால் போதாது. இவையனைத்தையும் சோதனை செய்ய வேண்டும். பிறகு பரிசு பெற வேண்டும். தபஸ்யாவின் அர்த்தமே

சம்பூர்ண பவித்திரம் ஆவது எனவே பவித்திரத்தாவின் பர்சனாலிட்டி, பவித்திரத் தாவின் ராயல்டி எதுவரையில் நடை முறையில் உள்ளது என்பதை சோதனை செய்யுங்கள். இதைத்தான் தபஸ்வி ராஜ் என அழைக்கப்படும் புரிந்ததா? ராயல்டி என்றால் என்ன?

ராயல் ஆத்மாவின் முகத்திலும், நடத்தையிலும் இரண்டிலுமே சத்தியத்தின் பண்பு அனுபவம் செய்ய வைப்பார்கள். அப்படிப்பட்ட ராயல் ஆத்மாக்களை பண்பின் தேவி (பண்பின் இருப்பிடம்) என்று சொல்லப்படும். அவர்கள் பேசுவது, பார்ப்பது, உண்பது, அருந்துவது, அமருவது எழுவது, ஒவ்வொரு செயலிலும் சத்யதா, பண்பு தானாகவே தென்படும். நான் சத்தியத்தை நிரூபிக்கின்றேன் ஆனால் பண்பே இல்லை என்று இருக்க முடியாது. சில குழந்தைகள் சொல்கிறார்கள் எனக்கு கோபம் வருவதில்லை ஆனால் யாராவது பொய் பேசினால் கோபம் வந்து விடுகிறது. அவர் பொய் பேசினார், நீங்கள் கோபத்துடன் பேசினீர்கள், இருவரில் யார் சரி? சத்யத்தை நிரூபிப்பவர் சதா பண்புள்ளவர்களாக இருப்பார். சிலர் புத்திசாலியாக செய்கிறார்கள், சொல்கிறார்கள் நான் கோபப்படவில்லை, எனது சப்தமே பெரியது, எனது குரலே இப்படி உள்ளது. அறிவியல் சாதனங்கள் மூலமாக சப்தத்தை குறைக்கவோ, கூட்டவோ முடியும் என்றால் என்ன அமைதி சக்தி மூலமாக தனது குரல் சப்தத்தை வேகத்தை குறைக்கவோ, கூட்டவோ முடியாதா? அப்படியானால் இதை விட டேப் ரிக்கார்டு, மைக் நல்லது. அதன் சப்தத்தை குறைக்கவோ, கூட்டவோ முடியும். எனவே சோதனை செய்யுங்கள் சத்யத்தின் கூடவே பண்பும் உள்ளதா? மாறாக பண்பு இல்லை யென்றால், சத்யமும் கிடையாது. எனவே தூய்மையின் ராயல்ட்டி சதா வெளிப்படையாக (பிரத்யட்சமாக) தென்பட வேண்டும். உள்ளே ராயல்ட்டி உள்ளது. வெளியில் தென்படவில்லை என்றிருக்க முடியாது. உள்ளே இருந்தால் கண்டிப்பாக வெளியில் தென்படும். சத்யத்தாவின் ராயல்ட்டியை யாரும் மறைக்க முடியாது. இதில் குப்தமாக இருக்க வேண்டாம். சிலர் சொல்கிறார்கள் குப்த புருஷார்த்தி நான். எனவே குப்தமாக உள்ளது ஆனால் எப்படி சூரியனை யாரும் மறைக்க முடியாதோ, அப்படியே சத்யம் என்ற சூரியனையும் எவரும் மறைக்க முடியாது. எந்த காரணமும், எந்த மனிதரும் மறைக்க முடியாது. சத்தியம் சதா சத்தியம் தான். சத்தியம் அனைத்திலும் உயர்ந்த மகான் சக்தி ஆகும். சத்தியம்

நிரூபிப்பதால் நிரூபணம் ஆகாது, சத்தியம் என்ற சக்திக்கு தானாகவே நிரூபணம் ஆகும் ஸித்தி உள்ளது. சத்தியத்தை எவராவது நிரூபிக்க விரும்பினால் அந்த நிருபணம் பிடிவாதமாகி விடும். எனவே சத்தியம் தானாகவே நிருபணம் ஆகிறது. அதனை நிரூபிக்க வேண்டிய அவசியம் இல்லை. தபஸ்யா ஆண்டில் என்ன காண்பிக்க வேண்டும்? தூய்மையில் பர்சனாலிட்டி மற்றும் ராயல்ட்டி. நல்லது.

உள்நாடு, அயல்நாடுகளிலிருந்து அனைத்து குழந்தைகளின் கடிதம், அன்பு நினைவுகள், சுய முயற்சி மற்றும் சேவையின் செய்திகள் மனதின் ஆன்மீக உரையாடல்களையாவும் பாப்தாதாவிடம் வந்து சேர்ந்து கொண்டிருக்கின்றது. சேர்ந்து விட்டது. பாப்தாதாவும் அனைத்து குழந்தைகளின் பெயர் உட்பட அன்பு நினைவுகளை கொடுத்துக் கொண்டிருக்கின்றார். ஒவ்வொருவரும் புரிந்து கொள்ளுங்கள் முதலில் எனக்கு பாபா நினைவு தருகின்றார். ஏனெனில் பாப்தாதா அன்பு நினைவு களுக்கான பதில் அவ்யக்த ரூபத்தில் அதே நொடியில் தருகிறார் ஆனால் இருந்தாலும் சாகார விதிப்படி குழந்தைகள் சாகாரத்தில் கடிதம் எழுதுகின்றனர். அன்பு நினைவுகளை அனுப்புகின்றார். எனவே பாப்தாதாவும் சாகார விதிப்படி சாகார ரூபத்தில் கூட கைமாறாக அன்பு நினைவுகளை தருகின்றார். பாப்தாதா தெரிந்துள்ளார் நாலாபுறமும் ஊக்கம் உற்சாகத்துடன் தபஸ்யாவின் மற்றும் மனதின் வைப்ரேஷன் மூலம் சேவை மிக நன்றாக இருக்கின்றது. மேலும் நன்றாக இருக்கும். இப்பொழுது இன்னும் ஆழமான ரகசியம் வாய்ந்த விஷயங்களை முன்னால் வைத்து முயற்சியையும், சேவையையும் ஆழமாக தெளிவாகவும் உயர்த்திக் கொண்டே செல்லுங்கள். அனைத்து குழந்தை களுக்கும், எதிரில் அமர்ந்திருப்பவருக்கும் மற்றும் ஆகாரத்தின் நினைவால் பாபாவின் முன்பு அமர்ந்திருப்பவருக்கும் அனைத்து குழந்தைகளுக்கும் அதாவது சதா பாபாவின் உடனிருப்பவர்களின் கண்களில், வாயில், மனதில் சதா குழந்தைகளின் பாபா இருக்கின்றார், மற்றும் பாபாவின் குழந்தைகள் உள்ளனர்.

இப்படிப்பட்ட சதா நினைவில் மூழ்கியிருக்கும் சிரேஷ்ட ஆத்மாக்களுக்கு, சதா தூய்மையின் உண்மை மற்றும் ராயல் தன்மையில் இருக்கும் ஆத்மாக்களுக்கு, சதா மனதால் சம்பன்ன

முழுமையில் இருக்கும் ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகளும் நமஸ்காரமும்!

**வரதானம்: பியூரிட்டியின் ராயல்ட்டி மூலமாக பிராமண வாழ்வின் விசேஷத்தை பிரத்யட்சம் செய்யும் சம்பூர்ண பவித்திரம் ஆகுக!**

பியூரிட்டியின் ராயல்ட்டிதான் பிராமண வாழ்வின் விசேஷமாகும். யாரேனும் ராயல் குடும்பத்தின் குழந்தையாக இருந்தால் அவரது முகத்திலும், நடத்தையிலும் இவர் ராயல் குலத்தவர் என்று தெரியவருகிறது. அது போல பிராமண வாழ்வின் வேறுபாடு தூய்மையின் பொலிவில் உள்ளது. எப்பொழுது எண்ணத்தில் கூட தூய்மையின்மையின் பெயர், அடையாளம் இல்லாமல் இருக்குமோ அப்போது தான் முகத்திலும், நடத்தையிலும் தூய்மையின் பொலிவு தென்படும். பியூரிட்டி என்றால் எந்தவிதமான விகாரம் மற்றும் அசுத்தத்தின் பிரபாவமும் இல்லாத நிலை. அப்பொழுது தான் சம்பூர்ண பவித்திரம்.

**சுலோகன்: வீணானவற்றை நல்லவையாக மாற்றி விடுபவர் எவரோ அவரே தூய அன்னப்பறவை (ஹோலி ஹன்ஸ்)!**

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺ ✺✺✺✺✺✺✺✺

# 18.12.1991 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# ஒவ்வொரு செயலிலும் நேர்மையை பிரயோகம் செய்வதே தபஸ்யா!

இன்று பாப்தாதா நாலாபுறமும் உள்ள அனைத்து தபஸ்வி குமார் மற்றும் தபஸ்வி குமாரிகளிடம் உள்ள தபஸ்யாவின் விசேஷ அடையாளத்தை பார்த்துக் கொண்டிருக்கின்றார். தபஸ்வி ஆத்மாக்களின் விசேஷத் தன்மைகளைப் பற்றி முன்பு கூட கூறியுள்ளார். இன்று இன்னும் சில விசேஷத் தன்மைகளை கூறுகின்றார். தபஸ்வி என்றால் 'சதா நேர்மையான ஆத்மா' நேர்மையே தபஸ்வியின் அடையாளம். நேர்மையான ஆத்மா என்றால் ஒவ்வொரு செயலிலும் ஸ்ரீமத்படி நடப்பதில் நேர்மையாக இருப்பார். நேர்மை என்றால் வாக்கை நிறைவேற்றுபவர் மற்றும் நம்பிக்கைக்குரியவர். ஸ்ரீமத்படி நடப்பதில் நேர்மையானவர் என்றால் வாக்கை நிறைவேற்றுபவர். நேர்மையான ஆத்மா இயல்பாகவே ஒவ்வொரு அடியும் ஸ்ரீமத்தின் அறிகுறியின்படி எடுத்து வைப்பார். அவரது ஒவ்வொரு அடியும் தானாகவே ஸ்ரீமத்தின் அறிகுறியின்படியே நடக்கும். எப்படி அறிவியல் சக்தி மூலமாக சில பொருட்கள் சைகையின் மூலம் தானாகவே இயங்குகிறது. இயக்க வேண்டியதில்லை, ஒளி மூலமாகவோ, வைபரேசன் மூலமாகவோ ஸ்விட்ச் ஆன் செய்தவுடனேயே இயங்கிக் கொண்டே இருக்கின்றது ஆனால் அறிவியல் சக்தி அழியக் கூடியது. எனவே அற்ப காலத்திற்கு இயங்குகிறது. அழியாத பாபாவின் அமைதி சக்தி மூலமாக இந்த பிராமண வாழ்வில் சதா மற்றும் தானாகவே சுலபமாக நடைபெற்றுக் கொண்டேயிருக்கும். பிராமண பிறவி கிடைத்தவுடனேயே திவ்ய புத்தியில் பாப்தாதா ஸ்ரீமத் நிரப்பி விட்டார். நேர்மையான ஆத்மா அதே ஸ்ரீமத்தின் சைகையின்படி இயற்கையாகவே சுலபமாக நடந்து கொண்டிருப்பார். எனவே நேர்மையின் முதல் அடையாளம் ஒவ்வொரு நொடியும் ஒவ்வொரு அடியும் ஸ்ரீமத்படி மிக துல்லியமாக நடப்பது. அனைவரும் நடக்கின்றனர், ஆனால் நடப்பதில் கூட அனேக

விதமான வேறு பாடுகள் வந்து விடுகிறது. சிலர் சுலபமாக மற்றும் தீவிர வேகத்தில் செல்கின்றனர். ஏனெனில் அந்த ஆத்மாவிற்கு ஸ்ரீமத் மிகத் தெளிவாக சதா நினைவில் இருக்கும் காரணத்தால் திறமையானவராக இருக் கின்றார். இது முதல் நம்பர் நேர்மை நம்பர் ஒன் ஆத்மாவிற்கு இது ஸ்ரீமத்தா? இல்லையா? என்று யோசிக்க வேண்டியதில்லை, ஏனெனில் தெளிவாக இருக்கின்றார் பிற ஆத்மாக்களுக்கு தெளிவு இல்லாத காரணத்தால் சில சமயம் இது சரியா, தவறா என்று யோசிக்க வேண்டி உள்ளது. எனவே தீவிர வேகமில்லாமல் இடையிலேயே இருந்து விடுகின்றனர். இதுமட்டுமல்லாமல் சிலர் சிந்திக்கின்றனர், களைப்படைந்து விடுகின்றனர். எல்லோருமே நடக்கின்றனர் ஆனால் சிந்திப்பவர், களைப்படைபவர் இரண்டாவது நம்பருக்கு வந்து விடுகின்றனர் ஏன் களைப்படைகின்றனர்? போகப் போக ஸ்ரீமத்தின் சைகைகளில் தன் மன கருத்தையும் (மன்மத்) பிறர் கருத்துக்களையும் (பரமத்) கலந்து விடுகின்றனர், எனவே தெளிவான மற்றும் நேர் வழியிலிருந்து விலகி தாறுமாறான வழியில் சென்று விடுகின்றனர். முடிவில் சென்ற வழியிலேயே திரும்பி வர வேண்டியுள்ளது. ஏனெனில் குறிக்கோளுக்கான தெளிவான நேர் வழியும், சுலபமான வழியும் ஒன்று தான். நேர்வழியை கோணலாக்கி விடுகின்றனர். எனவே நீங்களே சிந்தித்துப் பாருங்கள் தாறுமாறான வழியில் செல்பவர் எதுவரையில் செல்வார், எவ்வளவு வேகத்தில் செல்வார்? மேலும் பரிணாமம் என்னவாக இருக்கும்? களைப் படைவதும், நிராசையடைந்து திரும்ப வேண்டியது தான். எனவே இரண்டாம் நம்பர் ஆகின்றனர். நாம் நடந்து கொண்டு தானே இருக்கின்றோம், இதில் மட்டும் குஷியடைந்து விடாதீர்கள் ஆனால் தனது நடத்தையையும், வேகத்தையும் இரண்டையும் சோதனை செய்யுங்கள். இப்பொழுது புரிந்ததா? நேர்மை என்று எதனை சொல்லப்படுகிறது? நேர்மையான ஆத்மாவின் அடையாளம் -அவர் ஒருபொழுதும் எந்த பொக்கிஷத்தையும் வீண் செய்ய மாட்டார். ஸ்தூலமான செல்வம் மற்றும் பொக்கிஷங்களின் விஷயங்கள் அல்ல ஆனால் இன்னும் அனேக கஜானாக்கள் உங்களுக்கு கிடைத்திருக்கிறது. நேர்மையானவர் சங்கமயுகத்து சமயம் என்ற பொக்கிஷத்தை ஒரு விநாடியும் வீண் செய்ய மாட்டார். ஏனெனில், சங்கமயுகத்தின் ஒரு விநாடி, ஒரு வருடத்தை விட உயர்வானது. எப்படி ஏழை ஆத்மாவின் ஸ்தூலமான செல்வம் எட்டணா

எண்ணூறு ரூபாய்க்கு சமம், ஏனெனில் எட்டணாவில் உண்மையான உள்ளத்தின் பாவனையால் எண்ணூறு ரூபாயை விட அதிகமாக்குகிறது. அது போலவே சங்கம யுகத்தின் சமயம் ஒரு விநாடி அவ்வளவு பெரியது. ஏனெனில் ஒரு விநாடியில் பல கோடி அளவிற்கு சேமிப்பு ஆகிறது. ஒரு விநாடியை இழந்தால் பல கோடி வருமானத்திற்கான சமயத்தை இழந்ததாகும் அது போலவே சங்கல்ப கஜானா, ஞான செல்வம் எனும் கஜானா, சர்வ சக்திகள், சர்வ குணங்களெனும் கஜானா இவைகளை வீண் செய்ய மாட்டார்கள். மாறாக அனைத்து சக்திகளையும் அனைத்து குணங்களையும், ஞானத்தையும் தனக்காகவும், பிறருக்காகவும் செயலில் பயன்படுத்தவில்லையென்றால் இதையும் வீண் என்றே சொல்லப்படும். வள்ளல் கொடுத்தார் ஆனால் பெறுபவர் அதனை தாரனை செய்யவில்லை என்றால் அது வீண் தானே! நேர்மையானவர் செல்வங்களை பிராப்தம் செய்து விட்டு அதை அப்படியே வைத்திருக்க மாட்டார். நேர்மையின் அடையாளம் பொக்கிஷங்களை அபிவிருத்தி செய்வது. அபிவிருத்திக்கு சாதனமே அதனை காரியத்தில் பயன்படுத்துவது தான். ஞான தனத்தை கூட சமயத்திற்கேற்ப அனைத்து ஆத்மாக்களுக்காகவும் அல்லது சுய முன்னேற்றத்திற்காகவும் பயன்படுத்தவில்லை என்றால் அந்த கஜானா ஒருபோதும் அதிகரிக்காது. எந்த ஒரு செயலிலும் இலாபத்தை செய்து காட்டுபவர் தான் நேர்மையான மேனேஜர் அல்லது டைரக்டர் என்று அழைக்கப்படுவார். முன்னேற்றம் செய்து காண்பிக்க வேண்டும். அது போலவே சங்கல்பம் எனும் சுஜானாவை குணங்களை, சக்திகளை காரியத்தில் ஈடுபடுத்தி இலாபம் செய்விப்பவரா? அல்லது வீண் செய்பவரா? நேர்மையின் அடையாளம் வீண் செய்யக்கூடாது. இலாபம் உருவாக்க வேண்டும். தனது உடல், மனம் மற்றும் ஸ்தூல செல்வம் இவை மூன்றும் பாபா கொடுத்த கஜானா. நீங்கள் அனைவரும் உடல், மனம், செல்வம் மற்றும் வஸ்து என்னவெல்லாம் இருந்ததோ அவற்றை அர்ப்பணம் செய்து விட்டீர்களா? எல்லாம் உனது என சங்கல்பம் செய்து விட்டீர்களா? அல்லது சிறிது எனது, சிறிது பாபாவினுடையது அப்படியா? சிறிது செல்வம் ஒதுக்கி கைச் செலவிற்காகவும், எதிர் காலத்திற்காகவும் வைத்துள்ளீர்களா. எதிர் காலத்திற்காக ஒதுக்கி வைப்பது புத்திசாலித்தனம் தான்.

எந்தளவிற்கு எனது என்றிருக்குமோ அந்தளவிற்கு அங்கு அதிக விஷயங்களில் தொல்லைகள் ஏற்படும். ஏனெனில் அவற்றை மறைக்க வேண்டி வரும் பக்தி மார்க்கத்தைச் சார்ந்தவர்கள் வருணிக்கின்றார்கள். எனது என்றாலே தொல்லை தான். எனவே எப்பொழுது அனைத்தும் உனது என்று சொல்லி விட்டீர்களோ, அது உடலோ, மனமோ, செல்வமோ, பொருளோ, செல்வம் மட்டும் அல்ல. வஸ்துக்களும் கூட செல்வமே வஸ்து எதனால் உருவாக்கப்பட்டது? செல்வத்தால் உருவாக்கப்பட்டது தானே, எனவே எந்த ஒரு வஸ்துவாயினும், அது ஸ்தூல தனமோ, மனதின் சங்கல்பம் மற்றும் உடலாலும் வீண் செயல் செய்வது அதாவது உடல் மூலமாக நேரத்தை வீண் செய்வது இதுவும் வீணான நஷ்டக் கணக்கில் தான் சேர்க்கப்படும். எனவே நேர்மையானவர் உடலையும் வீணான செயலில் ஈடுபடுத்த மாட்டார். எண்ணத்தையும் வீணாக்க மாட்டார். நீங்கள் எங்கிருந்தாலும், இல்லறத்திலோ, சென்டரிலோ, மதுபனிலோ அனைவருடைய உடல்-மனம்-பொருள் யாவும் பாபாவுடையது தான் அல்லது இல்லறத்தில் உள்ளவர்கள் நாங்கள் சமர்ப்பணம் ஆகவில்லையே. எனவே இவையெல்லாம் எனது தான் என்று நினைக்கின்றீர்களா? இல்லை இது பாபாவின் அடமானப் பொருள். நேர்மையானவர் என்றால் அடமானப் பொருளினை ஒருபோதும் தவறாக பயன்படுத்த மாட்டார். சிறிய பொருளையும் வீண் செய்ய மாட்டார். சில சமயங்களில் தனது புத்தியின் சோம்பலின் காரணத்தால் மற்றும் உடல் மூலம் சோம்பலான செயல் செய்வதால் சிறிய சிறிய பொருட்களும் வீண் செய்யப்படுகின்றது. பிறகு சிந்திக்கின்றனர் நான் தெரிந்து செய்யவில்லை, இப்படி நடந்து விட்டது அதாவது சோம்பல் தனம். அது புத்தியாலோ, தேக உழைப்பிலோ ஏற்பட்ட சோம்பலாக இருக்கலாம், இந்த இரு விதமான சோம்பலும் வீண் செய்து விடுகின்றது. எனவே வீண் செய்யக்கூடாது. ஒன்றை பத்து மடங்காக பெருக்க வேண்டும். மாறாக வீண் செய்யக் கூடாது. இதற்காக பாப்தாதா சதா ஒரு சுலோகன் சொல்கிறார், குறைந்த செலவில் அதிக லாபம். இது அதிகரிப்பதாகும். அது வீண் செய்வதாகும். நேர்மை என்றால் உடல்-மனம்-பொருள் அனைத்தையும் சதா இலாப கரமாக செயல்படுத்துவது. இது தான் நேர்மையான ஆத்மாவின் அடையாளம். எனவே தபஸ்வி என்றாலே நேர்மையானவரின் அனைத்து விசேஷத் தன்மைகளையும் ஒவ்வொரு செயலிலும் பிரயோகம் செய்வது. மாறாக எல்லாம் சேமித்து

வைத்துள்ளேன், எல்லாம் தெரிந்து வைத்துள்ளேன் என்பது மட்டும் அல்ல. தபஸ்யா, யோகம் இவற்றின் அர்த்தமே பிரயோகம் செய்வதாகும். அப்படி இந்த விசேஷத் தன்மைகளை பிரயோகம் செய்யவில்லை என்றால் பிரயோகியும் அல்ல, யோகியும் அல்ல. இந்த அனைத்து கஜானாக்களையும் பாப்தாதா பிரயோகம் செய்வதற்காகவே கொடுத்துள்ளார். மேலும் பிரயோகம் செய்வதற்காகவே கொடுத்துள்ளார். மேலும் பிரயோகம் செய்வீர்களோ, பிரயோகத்தின் அடையாளம் முன்னேற்றம். அப்படி முன்னேற்றம் இல்லை என்றால் பிரயோகி அல்ல. சில ஆத்மாக்கள் கூட இப்படி தன்னை புரிந்து கொள்கின்றார்கள். முன்னேற்றமும் இல்லை, தொய்வடையவும் (பின்னேற்றமும்) இல்லை. எப்படி இருந்ததோ அப்படியே இருக்கின்றது. இன்னும் சிலர் இப்படியும் சொல்கின்றனர். ஆரம்பத்தில் மிக நன்றாக இருந்தது, போதை நன்றாக இருந்தது. இப்போது அந்த போதை (ஆர்வம்) குறைந்து விட்டது. இது முன்னேற்றமா, என்ன ஆயிற்று? பறக்கும் கலையா?, நிற்கும் கலையா? எனவே பிரயோகி ஆகுங்கள். நேர்மையின் அர்த்தமே முன்னேற்றம் செய்யும் பிரயோகி, இப்படி பிரயோகி ஆகியுள்ளீர்களா? அல்லது உள்ளே அடக்கி வைத்துள்ளீர்களா? கஜானா உள்ளே சேமித்தே வைக்கப்பட்டுள்ளது. செயலில் வரவில்லை. இப்படி இருப்பது நேர்மையா? நேர்மையாக இருப்பவர் மீது பாபாவுடைய பரிவாரத்தினுடைய உள்ளத்தின் அன்பும் நம்பிக்கையும் இயல்பாகவே இருக்கும். நம்பிக்கை இருப்பதால் முழு அதிகாரமும் அவரிடம் கொடுத்து விடுவார்கள். நேர்மையான ஆத்மாவிற்கு தானாகவே பாபா மற்றும் பரிவாரத்தின் அன்பு அனுபவம் ஆகும். பெரியவர், சிறியவர், சம வயதுடையவர் அனைவருக்கும் நம்பிக்கைக்கு பாத்திரமானவர் என்பது அனுபவம் ஆகும். இப்படி அன்பிற்கும், நம்பிக்கைக்கும் எவ்வளவு தூரம் பாத்திரமாகி உள்ளீர்கள். இதையும் சோதனை செய்யுங்கள். இதனால் என் மீது நம்பிக்கை இல்லை என்று அலட்சிய மாக இருந்து விடாதீர்கள். நான் எப்படி நம்பிக்கைக்கு பாத்திரமாவது, தன்னை நம்பிக்கைக்கு பாத்திரமாக மாற்றிக் கொள்க. சிலர் இப்படியும் சில சமயங்களில் சொல்கின்றனர். நான் நல்லவன் தான், ஆனால் என்மீது நம்பிக்கை இல்லை. பிறகு அதற்கான காரணங்கள் மிக நீளமாக சொல்கின்றனர். சில காரணங்கள் உள்ளன. பல காரணங்கள் உருவாக்கவும் படுகின்றது ஆனால் நேர்மையானவரின் உள்ளமும், புத்தியும் கூட நேர்மையாக இருக்க

வேண்டும். இல்லையேல் புத்தியில் கூட ஏற்றத் தாழ்வுகளை ஏற்படுத்துகின்றனர். எனவே உள்ளத்திலும் நேர்மை, புத்தியிலும் நேர்மை வேண்டும். இப்படி எல்லா வகையிலும் நேர்மையிருந்தால் அந்த நேர்மையானது நம்பிக்கையில்லாதவரையும் இன்று இல்லை என்றாலும் நாளை நம்பிக்கையில் கொண்டு வந்து விடும். இதற்காக பழமொழி உள்ளது. சத்யம் என்ற படகு ஆடும் அசையும் ஆனால் கவிழ்ந்து விடாது எனவே நம்பிக்கை என்ற படகு சத்தியமானது. எனவே ஆட்டம் கொள்ளும் ஆனால் நம்பிக்கைக்கு பாத்திரமாகும். அதாவது மூழ்காது. எனவே சத்தியத்தின் தைரியத்தால் நம்பிக்கைக்கு பாத்திரமாக முடியும். முன்பும் கூறினேன் அல்லவா, சத்தியத்தை ஊர்ஜிதம் செய்ய வேண்டியதில்லை சத்தியம் தானாகவே ஊர்ஜிதம் ஆகும். சத்யத்தை ஊர்ஜிதம் செய்ய வேண்டாம், ஸித்தி சொரூடம் ஆகுங்கள். எனவே சமயத்தின் வேகத்திற்கேற்ப இப்பொழுது தபஸ்யாவின் அடியை சுலபமாகவும் தீவிர வேகத்திலும் முன்னால் வைத்து செல்க. புரிந்ததா? தபஸ்யா ஆண்டில் என்ன செய்ய வேண்டும்? இப்பொழுதும் சிறிது சமயம் மீதமுள்ளது. இந்த அனைத்து விதிகளையும் தாரனை செய்து ஸித்தி சொரூபம் ஆகுக. நல்லது.

அனைத்து நேர்மையான ஆத்மாக்களுக்கு, சதா அனைத்து பொக்கிஷங்களையும் செயலில் பயன்படுத்தி முன்னேறும் ஆத்மாக் களுக்கு, சதா, உடல்-மனம்-பொருள் இவைகளை யதார்த்தமான விதி மூலம் செயலில் ஈடுபடுத்தும் ஆத்மாக்களுக்கு, சதா தன்னை நம்பிக்கைக்கும், அன்பிற்கும் பாத்திரமாக்கும் ஆத்மாக்களுக்கு, சதா வீணானவற்றை நல்லவையாக மாற்றி விடும் சிரேஷ்ட ஆத்மாக்களுக்கு உள்நாடு மற்றும் அயல் நாடுகளில் தூரத்திலும் மற்றும் அருகாமையிலும் அமர்ந்துள்ள ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரமும்.

வரதானம்: ஒவ்வொரு விநாடியும், ஒவ்வொரு பொக்கிஷத்தையும் வெற்றி பெறச் செய்து வெற்றியின் குஷியினை அனுபவம் செய்யும் வெற்றி மூர்த்தி பவ!

வெற்றி மூர்த்தி ஆவதற்கு விசேஷ சாதனம், ஒவ்வொரு விநாடி யையும் ஒவ்வொரு சுவாசத்தையும் ஒவ்வொரு பொக்கிஷத்தையும்

வெற்றிகரமாக பயன்படுத்துவதாகும். ஒருக்கால் சங்கல்பம், சொல், செயல், தொடர்வு, உறவு இவை அனைத்திலும் வெற்றி அனுபவம் செய்யவேண்டுமென்றால் இலாபகரமாக செயல்படுத்திக் கொண்டே செல்லுங்கள். அதை தனக்காகவோ அனைத்து ஆத்மாக்களுக் காகவோ இலாப கரமாக செயல்படுத்தினால் தானாகவே வெற்றியின் குஷி அனுபவம் செய்து கொண்டேயிருப்பீர்கள். ஏனெனில் இலாப கரமான முறையில் செயல்படுத்துவது என்றால் நிகழ் காடலத்தில் வெற்றி பெறுவதும் மற்றும் எதிர்காலத்திற்காக சேமிப்பதும் ஆகும்.

**சுலோகன்:** எப்பொழுது எண்ணத்திலும் கூட எந்த கவர்ச்சியும் கவர்ந்திழுக்கவில்லையோ அப்பொழுது சம்பூர்ணத் (முழுமையின்) தன்மையின் சமீபம் என்பது சொல்லப்படும்!

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋
❋❋❋❋❋❋❋❋

# 31.12.1991 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# உண்மையான சார்ட்டின் (அட்டவணை) அர்த்தம் முன்னேற்றம் மற்றும் மாற்றம்!

இன்று பாப்தாதா தன்னுடைய புது உலகப்படைப்புக் குழந்தை களைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். இன்றைய நாள் புது வருட ஆரம்பமாக முழு உலகிலும் கொண்டாடுகிறார்கள். அவர்கள் புது வருடத்தைக் கொண்டாடுகிறார்கள். மேலும் பிராமண ஆத்மாக்கள் நீங்கள் புதிய சங்கம யுகத்தில் ஒவ்வொரு நாளையும் புதியது என்று புரிந்து கொண்டாடிக் கொண்டிருக்கிறீர்கள், அவர்கள் ஒரு நாள் கொண்டாடுகிறார்கள் மேலும் நீங்கள் ஒவ்வொரு நாளையும் புதியதாக அனுபவம் செய்கிறீர்கள். அது எல்லைக்குட்பட்ட வருடத்தின் சக்கரம் மேலும் இது எல்லைக்கப்பாற்பட்ட படைப்புச் சக்கரத்தின் புதிய சங்கமயுகம். சங்கமயுகம் அனைத்து யுகங்களிலும் அனைத்து விதமான புதுமை கொண்டு வருவதற்கான யுகமாகும். சங்கமயுக பிராமண வாழ்க்கை புது வாழ்க்கை என்று நீங்கள் அனைவரும் அனுபவம் செய்கிறீர்கள். புதிய ஞானம் மூலமாக புதிய மனப்பாங்கு, புதிய பார்வை மேலும் புதுப்படைப்பில் வந்து விட்டீர்கள். இரவு பகல், ஒவ்வொரு நேரமும் ஒவ்வொரு நொடியும் புதியதாக புதியதாகப் படுகிறது. உறவுகள் கூட எவ்வளவு புதியதாகி விட்டது. பழைய உறவுகளுக்கும் பிராமண உறவிற்கும் எவ்வளவு வித்தியாசம் இருக்கிறது. பழைய உறவுகளின் பட்டியலை புத்தியில் கொண்டு வந்தால் எவ்வளவு நீளமாக இருக்கிறது. ஆனால் சங்கமயுக புது யுகத்தின் புதிய உறவுகள் எத்தனை இருக்கின்றன? நீளமான பட்டியலா என்ன? பாப்தாதா மற்றும் சகோதர சகோதரி, மேலும் எவ்வளவு சுயநலமற்ற அன்பான உறவு அவைகள் அனேக சுயநலமான உறவுகள். அப்படி புது யுகம், சிறிய புதிய பிராமண உலகம் தான் மிகவும் பிடித்தமானது.

உலகிலுள்ளவர்கள் ஒரு நாளைக்கு மட்டும் ஒருவர் இன்னொருவருக்கு வாழ்த்துக்கள் கூறுகிறார்கள் மேலும் நீங்கள் என்ன செய்கிறீர்கள்?

பாப்தாதா என்ன செய்கிறார்? ஒவ்வொரு வினாடியும், ஒவ்வொரு நேரமும், ஒவ்வொரு ஆத்மாவிற்காக சுப பாவனை மற்றும் சுபகாமனாவின் வாழ்த்துக்கள் கொடுக்கிறார். எப்பொழுதும் யாருக்காவது எந்த ஒரு திருவிழா நாளில் வாழ்த்துக்கள். கூறுகிறார்கள் என்றால் என்ன கூறுகிறார்கள்? குஷியாக இருங்கள், சுகமாக இருங்கள், சக்திசாலியாக இருங்கள், ஆரோக்கியமாக இருங்கள். அப்படியானால் ஒவ்வொரு நேரமும் நீங்கள் என்ன சேவை செய்கிறீர்கள்? ஆத்மாக்களுக்கு புது வாழ்க்கை கொடுக்கிறீர்கள். உங்கள் அனைவருக்கும் பாப்தாதா புது வாழ்க்கை கொடுத்திருக்கிறார் இல்லையா? மேலும் இந்த புது வாழ்க்கையில் இந்த அனைத்து வாழ்த்துக்களும் நிரந்தரமாகக் கிடைத்தே விடுகிறது. உங்களைப் போல அதிர்ஷ்டசாலி குஷி என்ற பொக்கிஷத்தால் நிரம்பியவர்கள், எப்பொழுதும் சுகமாக இருப்பவர்கள் வேறு யாரும் இருக்க முடியுமா? இந்தப் புதுமையின் விசேஷத் தன்மை உங்களுடைய தேவதை வாழ்க்கையில் கூட இல்லை. அப்படி ஒவ்வொரு நேரமும் பாப்தாதா மூலமாக வாழ்த்துக்கள் மற்றும் பாராட்டுக்கள் தானாகவே கிடைத்துக் கொண்டே இருக்கிறது. உலகிலுள்ளவர்கள் ஆடுவார்கள், பாடுவார்கள் மற்றும் கொஞ்சம் சாப்பிடுவார்கள். நீங்கள் என்ன செய்கிறீர்கள்? ஒவ்வொரு விநாடியும் ஆடிக் கொண்டும் பாடிக் கொண்டும் இருக்கிறீர்கள். மேலும் ஒவ்வொரு நாளும் பிரம்மா போஜனம் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறீர்கள். மக்கள் எப்பொழுதும் பார்ட்டி ஏற்பாடு செய்கிறார்கள். மேலும் உங்களுக்கு எப்பொழுதும் குழுக்களின் பார்ட்டி நடந்து கொண்டே இருக்கிறது. பார்ட்டியில் சந்திப்புகள் ஏற்படுகிறது. இல்லையா? பிராமணர்கள் உங்களுக்கு அமிர்தவேளையிலிருந்து பார்ட்டி ஆரம்பமாகி விடுகிறது. முதலில் பாப்தாதாவுடன் கொண்டாடுகிறீர்கள். ஒருவரில் அனேக சம்பந்தம் மற்றும் சொரூபத்தில் கொண்டாடுகிறீர்கள். பின்பு பிராமணன் எப்பொழுது உங்களுக்குள் வகுப்பு இருக்கிறதோ அப்பொழுது குழுவில் சந்திக்கிறீர்கள் இல்லையா? மேலும் முரளி கேட்டுக் கொண்டே ஆடுகிறீர்கள், பாடுகிறீர்கள். மேலும் ஒவ்வொரு நேரமும் உற்சாகம் நிரம்பிய வாழ்க்கையில் பறந்து கொண்டே இருக்கிறீர்கள். பிராமண வாழ்க்கையின் மூச்சே உற்சாகம் தான். ஒருவேளை உற்சாகம் குறைந்தது என்றால் பிராமண வாழ்க்கை வாழ்வதற்கான மகிழ்ச்சி இருப்பதில்லை. எப்படி உடலில் கூட மூச்சு சரியாக ஓடிக்

கொண்டிருந்தால் ஆரோக்கியமாக இருக்கிறார் என்று கூறுவார்கள். ஒரு வேளை எப்பொழுதாவது மிக வேகமாகவும் அல்லது எப்பொழுதாவது மெதுவாகவும் சென்றால் ஆரோக்கியம் என்று சொல்ல முடியாது இல்லையா? பிராமண வாழ்க்கை என்றால் உற்சாகம் சோர்வு கிடையாது எப்பொழுது அனைத்து ஆசைகளையும் நிறைவேற்றும் தந்தையினுடையவர்கள் ஆகி விட்டீர்களோ, பின்பு சோர்வு எங்கிருந்து வந்தது? உங்களுடைய வேலையே நம்பிக்கையிழந்தவர்களை நம்பிக்கையுடையவர்களாக ஆக்குவது இது தான் சேவை இல்லையா? இவ்வுலகின் எல்லைக்குட்பட்ட சக்கரத்தின்படி நீங்களும் இந்த நாளுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறீர்கள், ஆனால் உண்மையிலேயே பிராமண ஆத்மாக்கள் உங்கள் அனைவருக்கும் சங்கமயுகமே புதுமை யான யுகம் தான். புது உலகத்தையும் இப்பொழுது உருவாக்குகிறீர்கள். புது உலகின் ஞானம் இந்த நேரம் தான் ஆத்மாக்கள் உங்களிடம் இருக்கிறது. அங்கு புது உலகில் புதிய மற்றும் பழைய உலகின் ஞானம் இருக்காது. புதிய யுகத்தில் புது உலகம் ஸ்தாபனை செய்கிறீர்கள்.

அனைவரும் தபஸ்யா வருடத்தில் தபஸ்யா மூலமாகத் தன்னுள் ஆன்மீகப் புதுமையைக் கொண்டு வந்திருக்கிறீர்களா? அல்லது அதே பழைய கதை தானா? பழைய கதை என்ன? யோகா நன்றாக இருக்கிறது அனுபவமும் நன்றாக ஆகிறது முன்னேறிக் கொண்டும் இருக்கிறோம், தாரணையிலும் மிகுந்த மாற்றம் இருக்கிறது, கவனமும் மிகவும் நன்றாக இருக்கிறது, சேவையிலும் வளர்ச்சி நன்றாக இருக்கிறது.... ஆனால், ஆனால் என்ற வால் வந்து விடுகிறது. எப்பொழுதாவது அப்படி ஆகி விடுகிறது. இந்த எப்பொழுதாவது என்ற வாலை எப்பொழுது முடிவு கட்டுவீர்கள்? தபஸ்யா வருடத்தில் இந்த புதுமையைத் தான் கொண்டு வாருங்கள். முயற்சி மற்றும் சேவையின் வெற்றிக்கு திருப்தியின் சதவிகிதம் சில நேரம் உயர்ந்ததாகவும், சில நேரம் தாழ்ந்ததாகவும், இதில் எப்பொழுதும் உயர்ந்த சதவிகிதம் என்ற புதுமையைக் கொண்டு வாருங்கள். எப்படி இன்றைய டாக்டர்கள் அதிகமாக எதைச் சோதனை செய்கிறார்கள்? மிகவும் அதிகமான இன்றைய நாட்களில் இரத்த அழுத்தம் அதிகமாக சோதனை செய்கிறார்கள். ஒரு வேளை இரத்த அழுத்தம் எப்போதாவது அதிகமாகவும், எப்போதாவது குறைவாகவும் இருந்தால் என்ன ஆகும்?

அப்படி பாப்தாதா முயற்சி செய்வதின் அழுத்தத்தைப் பார்க்கிறார். மிகவும் நன்றாக இருக்கிறது, ஆனால் சில நேரம் ஜம்ப் ஆகிறது. இந்த எப்பொழுதாவது என்ற வார்த்தையை முடிவு கட்டுங்கள். இப்பொழுது அனைவரும் வெகுமதி வாங்குவதற்காகத் தயாராகிக் கொண்டிருக்கிறீர்கள் இல்லையா? இந்த முழு சபையில் யார் தன்னை வெகுமதி வாங்குவதற்குத் தகுதியானவர் என்று நினைக்கிறார்கள்? எப்பொழுதாவது என்பவர்கள் வெகுமதி வாங்க முடியுமா? வெகுமதி வாங்குவதற்கு முன்பு இந்த 6-மாதத்திற்குள் மூன்று விதமான திருப்தி அடைந்திருக்கிறீர்களா? என்ற இந்த விசேஷத்தைப் பாருங்கள்.

முதலாவது, தானே தன்னுடைய சாட்சியாக ஆகி சோதனை செய்யுங்கள். தன்னுடைய சார்ட்டில், தான் உண்மையான மனது. உண்மையான உள்ளத்தால் திருப்தியாக இருக்கிறேனா?

இரண்டாவது, எந்த விதிப்படி பாப்தாதாவை நினைவு செய்வதின் சதவிகிதத்தை விரும்புகிறார்கள் அந்த விதிப்படி மனம், சொல், செயல் உறவு நெருக்கத்தின் சார்ட் முழுமையாக இருந்ததா? அதாவது தந்தையும் திருப்தியாக இருக்கட்டும்.

மூன்றாவது, பிராமண குடும்பம் என்னுடைய உயர்ந்த யோகி வாழ்க்கையில் திருப்தியாக இருக்கிறதா?

அப்படி மூன்று விதமான திருப்தியை அனுபவம் செய்வது என்றால் பரிசுக்குத் தகுதியாக்குவது விதிப்படி கட்டளைப்படி நடப்பவராகி சார்ட் எழுதும் கட்டளையைக் கடைப்பிடித்தீர்களா? அந்த மாதிரி கட்டளைப்படி நடப்பவர்களுக்குத்தான் மதிப்பெண்கள் கிடைக்கிறது ஆனால் யார் கட்டளைப்படி நடப்பவராகி சார்ட் எழுது வதின் கூடவே முயற்சி செய்வதின் விதி மற்றும் வளர்ச்சிக்கும் மதிப்பெண்கள் வாங்குகிறாரோ, அவர்களுக்குத் தான் முழுமையாக மதிப்பெண் கிடைக்கிறது. யார் இந்த நியமத்தைக் கடைப்பிடித்தார்களோ, யார் மிகவும் துல்லியமாக சார்ட் எழுதினார்களோ அவர்களும் பாப்தாதா மூலமாக பிராமண குடும்பத்தின் மூலமாக பாராட்டுக் களைப் பெறுவதற்குத் தகுதியாகுகிறார்கள். ஆனால் வெகுமதி வாங்கு வதற்கு அனைவரின் திருப்தியின் பாராட்டுக்கள் பெறுபவர் தகுதியாகிறார்.

சரியான தபஸ்யாவின் அடையாளம் செயல், சம்பந்தம் மற்றும் சம்ஸ்காரம் இந்த மூன்றிலும் புதுமையின் விசேஷத்தை தானும் அனுபவம் செய்வது மேலும் மற்றவர்களுக்கும் அனுபவம் செய்விப்பது என்பதாகும். சூழ்நிலைகள் ஒருவர் மூலமாக அல்லது இயற்கை மூலமாக அல்லது மாயா மூலமாக வருவது என்பது இந்த பிராமண வாழ்க்கையில் வரத்தான் செய்யும். ஆனால் சுய ஸ்திதியின் சக்தியானது பரஸ்திதி (சூழ்நிலை)யின் பிரபாவத்தை ஒரு பொழுது. போக்கான சாலையோரக் காட்சி எதிரில் வந்து சென்று விட்டது என்பது போல் அந்த மாதிரி முடித்து விட வேண்டும். எண்ணத்தில் சூழ்நிலையின் குழப்பத்தின் அனுபவம் ஆக வேண்டாம். நினைவு யாத்திரை எளிதாகவும் இருக்கட்டும் சக்திசாலியாகவும் இருக்கட்டும். சக்திசாலியான நினைவு ஒரே நேரத்தில் இரட்டை அனுபவம் செய்விக்கிறது. ஒரு பக்கம் நினைவு அக்னியாகி பஸ்மம் செய்யும் வேலையைச் செய்கிறது, மற்றும் காரியம் செய்கிறது. மேலும் இன்னொரு பக்கம் குஷி மற்றும் லேசான தன்மையை அனுபவம் செய்விக்கிறது. அந்த மாதிரி விதிப்படி செய்யும் சக்திசாலியான நினைவைத் தான் சரியான நினைவு என்று கூறப்படுகிறது. இருந்தாலும் பாப்தாதா குழந்தை களின் ஊக்கம் மற்றும் ஈடுபாட்டைப் பார்த்து குஷியடைகிறார். அதிகமானவர்களுக்கு இலட்சியம் நன்றாக இருந்தது. நினைவு செய்வதில் நல்ல எண்ணில் வந்திருக்கிறீர்கள் நினைவின் கூடவே சக்தி நிறைந்தவராக இருப்பதில் வரிசைக்கிரமமாக இருக்கிறீர்கள். நினைவு மற்றும் சக்தி நிறைந்த நிலை இரண்டும் கூடவே இருக்க வேண்டும். இதைத்தான் முதல் நம்பர் பரிசுக்குத் தகுதியானவர் என்று கூறுவது நினைவு எப்பொழுதும் இருந்து சக்தி நிறைந்த நிலை எப்பொழுதாவது சதவிகிதத்தில் இருக்கிறது என்றால் இதை வரிசைக்கிரம பட்டியலில் இருக்கிறார் என்று கூறப்படும். புரிந்ததா? சரியாக சார்ட் வைப்பவர்களின் பெயரின் மாலையும் உருவாகும். இப் பொழுது கூட அதிகம் இல்லையென்றாலும் கொஞ்சக் காலம் இருக்கிறது. இந்தக் கொஞ்சக் காலத்திலும் விதிப்பூர்வமாக முயற்சியில் வளர்ச்சியடைந்து தன்னுடைய மனம், புத்தி செயல் மற்றும் சம்பந்தத்தை எப்பொழுதும் ஆடாத அசையாததாக ஆக்கினீர்கள் என்றால் இந்த கொஞ்ச காலத்து ஆடாத அசையாத நிலையின் முயற்சி வரக்கூடிய நாட்களில் மிகவும் உதவியாக இருக்கும். மேலும் வெற்றியின் குஷியைத் தானும் அனுபவம்

செய்வார்கள் மற்றும் மற்றவர்கள் மூலமாகவும் திருப்தியின் ஆசீர்வாதங்களை அடைவார்கள். எனவே காலம் கடந்து விட்டது என்று நினைக்காதீர்கள். இப்பொழுது கூட நிகழ்காலத்தையும் எதிர்காலத்தையும் உயர்ந்ததாக ஆக்க முடியும்.
இப்பொழுது கூட நினைவு மாதம் அதிகப்படியான வரதானம் அடைவதற்கான மாதமாகும். எப்படி தபஸ்யா வருடத்திற்கு வாய்ப்பு கிடைத்ததோ அதே போல் நினைவு மாதத்திற்கும் வாய்ப்பு கிடைத் திருக்கிறது. ஒருவேளை இந்த மாதத்தின் 30-நாளில் கூட எளிதாக இயல்பாக சக்திசாலி மற்றும் வெற்றி ஆத்மாவின் அனுபவம் செய்தீர்கள் என்றால் கூட நிரந்தரமாக இயற்கையான சம்ஸ்காரத்தை உருவாக்குவதற்கான அன்பளிப்பை அடைய முடியும். என்ன வந்தாலும், என்ன செய்தாலும், சூழ்நிலை என்ற மிகப்பெரிய மலை போன்ற சோதனை வந்தாலும், சம்ஸ்கார மோதல் என்ற மேகம் கூட வந்தாலும், இயற்கையும் சோதனையாக இருந்தாலும் அங்கதனுக்கு சமமாக மனம், புத்தி என்ற கால்கள் அசையக்கூடாது, ஸ்திரமாக இருக்க வேண்டும். கடந்த காலத்தில் ஏதாவது குழப்பம் நடந்திருந் தாலும் அதை எண்ணத்தில் கூட நினைவில் கொண்டு வர வேண்டாம். முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் நிகழ்காலத்தை தந்தைக்குச் சமமாக உயர்ந்ததாகவும் எளிதானதாகவும் ஆக்க வேண்டும் மேலும் எதிர்காலத்தை எப்பொழுதும் வெற்றியின் அதிகாரத்தோடு பார்க்க வேண்டும். இந்த விதி மூலமாக வெற்றியை அடைய வேண்டும். நாளையிலிருந்து அல்ல, இப்பொழுதிலிருந்தே செய்ய வேண்டும். நினைவு மாதத்தின் கொஞ்ச காலத்தை வெகு காலத்து சம்ஸ்காரமாக ஆக்குங்கள் இந்த விசேஷ வரதானத்தை விதிப்படி அடைய வேண்டும். வரதானம் இருக்கிறது என்றால் அலட்சியமாக இருக்கலாம் என்று அர்த்தம் இல்லை. அலட்சியமாக ஆகாமல் சுலபமான முயற்சியாளர் ஆகுங்கள். நல்லது.

குமாரிகளின் குழு அமர்ந்திருக்கிறது. நல்லது. முன்னால் அமருவதற்கான வாய்ப்பு ஏன் கிடைத்திருக்கிறது? எப்பொழுதும் முன்னுக்கு இருக்க வேண்டும். எனவே முன்னால் அமரும் வாய்ப்பு கிடைத்திருக்கிறது. புரிந்ததா? பழுத்த பழமாக வெளிப்பட வேண்டும், பிஞ்சாக விழுந்து விடாதீர்கள். அனைவரும் படிப்பை முடித்து விட்டு சென்டருக்கு போவீர்களா? அல்லது வீட்டிற்குப் போவீர்களா?

ஒருவேளை அம்மா, அப்பா வீட்டிற்கு வா என்று கூறினால் என்ன செய்வீர்கள்? ஒருவேளை தனக்குத் தைரியம் இருந்தால் யாரும் தடுக்க முடியாது. கொஞ்சம் கொஞ்சம் கவர்ச்சி இழுத்தால், தடுப்பவர்கள் தடுப்பார்கள்.

நல்லது. புது வருடம் கொண்டாடுவதற்காக அனைவரும் ஓடி வந்து விட்டீர்கள். புது வருடம் கொண்டாடுவது என்றால் ஒவ்வொரு நேரத்தையும் புதியதாக மாற்றுவது. ஒவ்வொரு நேரமும் தன்னுள் ஆன்மீகப் புதுமையைக் கொண்டு வர வேண்டும்.

நல்லது. நாலா புறமுமுள்ள அனைத்து அன்பிற்குரிய சகயோகிக் குழந்தைகளும் இன்றைய நாளின் மகத்துவத்தைத் தெரிந்து விசேஷமாக உள்ளத்தால் அல்லது கடிதங்கள் மூலமாக வாழ்த்து அட்டைகள் மூலமாக விசேஷமாக நினைவு செய்கிறார்கள். மேலும் பாப்தாதாவிடம் அவைகள் தபால் பெட்டியில் போடும் முன்பே வந்து சேர்ந்து விடுகின்றன. நினைத்தீர்கள் மேலும் வந்து சேர்ந்து விடுகிறது. எனவே அனேக குழந்தைகளின், சகயோகிகளின் வாழ்த்துக் கார்டுகள் பின்னால் வந்து சேருகிறது ஆனால் பாப்தாதா முதலிலேயே அனைவருக்கும் புது யுகத்தில் புது நாளைக் கொண்டாடுவதற்கு வாழ்த்துக்கள் கொடுக்கிறார். ஏதாவது விசேஷமான நிகழ்ச்சி நடந்தால் இன்றைய நாட்களில் மக்கள் என்ன செய்கிறார்கள்? தன்னுடைய டி.வி.யை ஆன் செய்து எதிரில் அமர்ந்து விடுகிறார்கள். அப்படி அனைத்து ஆன்மீகக் குழந்தைகள் தன்னுடைய புத்தியின் தரிசனம். என்ற சுவிச்சை ஆன் செய்து அமர்ந்திருக்கிறார்களா? பாப்தாதா நாலா புறமும் வாழ்த்துக்கள் பெறத் தகுதிக்குரிய குழந்தைகளுக்கு ஒவ்வொரு விநாடியின் வாழ்த்துக்களின் ஆசீர்வாதங்களை பிரதி உபாகரமாகக் கொடுத்துக் கொண்டிருக்கிறார். ஒவ்வொரு நேரத்தின் நினைவு மற்றும் அன்பு, இதே ஆசீர்வாதங்கள் குழந்தைகளின் உள்ளத்தின் ஊக்கம் உற்சாகத்தை அதிகரித்துக் கொண்டே இருக்கிறது. எனவே எப்பொழுதும் தன்னை எளிதாக முயற்சி செய்பவர் மற்றும் நிரந்தர முயற்சியாளர், எப்பொழுதும் விதி மூலமாக வளர்ச்சியை அடை வதற்குத் தகுதியான ஆத்மாக்களாகி பறந்து கொண்டே இருங்கள்.

அப்படி எப்பொழுதும் நிகழ்காலத்தை தந்தைக்குச் சமமாக ஆக்கக் கூடிய மேலும் எதிர்காலத்தை வெற்றி சொரூபமாக ஆக்கக் கூடிய உயர்ந்த பாராட்டுக்களுக்குரிய ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகளும் நமஸ்காரமும்.

**குழுக்களுடன் தனிப்பட்ட சந்திப்பு (சாரம்):**

பாரத தேசத்திற்கு மகிமை உங்களால்தான் ஆனது ஏனெனில் மகாத்மாக்கள் மூலம்தான் தேசமும் மகிமை அடைகிறது.

சதா தன்னை எல்லாம் பொக்கிஷங்கள் ஆளும் நிறைந்த ஆத்மா என அனுபவம் செய்யுங்கள் ஞானியின் விசேஷம் -முதலில் சிந்திப்பது, பின்பு செய்வது.

சதா தந்தையுடைய ஆசீர்வாதங்கள் தானாகவே பிராப்தி ஆவதற்கு சதா சமயம் மற்றும் கர்மத்தை சமநிலையில் வையுங்கள்.

நம்பர்-1'ல் வரக்கூடிய ஆத்மாவின் விசேஷம் தந்தையுடைய விசேஷமான ஸ்ரீமத்தை பின்பற்றுபவர் -வீணானதைப் பார்த்தாலும் பார்க்கக்கூடாது, வீணானதைக் கேட்டாலும் கேட்கக் கூடாது.

**இரவு 12-மணி ஆனதும் பாப்தாதா எல்லாக் குழந்தைகளுக்கும் புத்தாண்டு வாழ்த்துக்கள் அளித்தார்!** புத்தாண்டு என்றால் சதா நல்வாழ்த்துக்கள் பெறும் மற்றும் கொடுக்கும் ஆண்டு ஆகும். மாஸ்டர் வள்ளலாகி ஒவ்வொரு ஆத்மாவிற்கும் ஏதேனும் ஒரு சக்தி, குணங்கள், நல்லுணர்வுகள் மற்றும் நல்விருப்பங்களை வழங்கும் வள்ளல் ஆகுங்கள். பெறும் சங்கல்பம் கூடாது. எடுத்துக் கொண்டு, பிறகு கொடுப்பதை ஆசீர்வாதம் என்று சொல்வதில்லை, அது வியாபாரம் என்று சொல்லப்படும். எனவே, வள்ளலின் குழந்தைகள் மாஸ்டர் வள்ளல் ஆவீர்கள், யாராவது கொடுக்கட்டும், கொடுக்காமல் இருக்கட்டும் ஆனால் நீங்கள் கொடுத்தே ஆக வேண்டும். உங்களுக்குப் பிடிக்காத ஒன்றை யாராவது கொடுத்தால் என்ன செய்வீர்கள்? அதை ஏற்றுக் கொள்ள மாட்டீர்கள் அல்லது தன்னிடம் வைத்திருக்க மாட்டீர்கள் ஆனால் அவருக்கும் கொடுக்க வேண்டும். அவர் எனக்கு கூழாங்கல் கொடுத்தார் என்றால் நான் என்ன கொடுக்க வேண்டும்? என இப்படி இல்லை. கூழாங்கற்களை விடுங்கள், ஆனால் நீங்கள் ரத்தினங்களைக் கொடுங்கள். ஏனென்றால் நீங்கள் தந்தை ரத்னாகரின் குழந்தைகள். எனவே ஆசீர்வாதம் கொடுப்பது மற்றும் ஆசீர்வாதம்

பெறுவது -இந்த குறிப்பிட்ட லட்சியத்தை இந்த புத்தாண்டில் சதா வாழ்க்கையில் கடைப்பிடியுங்கள். பழைய சம்ஸ்காரங்களுக்கு விடைகொடுத்து விட்டோம் என்ற பாடலைப் பாடியது போல, நீங்கள் அனைவரும் விடைபெற்றீர்களா? நல்ல விதமாக அதற்கு டாட்டா காட்டினீர்களா அல்லது மீண்டும் வருமா? நல்லது. விடை பெற வாழ்த்துக்கள்! ஏதாவது வரும் போதெல்லாம், இந்த வாக்குறுதியை நினைவில் கொள்ளுங்கள் -நான் பிரியாவிடை கொடுத்து விட்டேன் நான் எப்படி கை குலுக்குவேன். எனவே தூரத்தில் இருந்தே அதற்கு நல்வாழ்த்துக்கள் மற்றும் நல்விருப்பங்களின் திருஷ்டி கொடுங்கள். நல்லது.

வரதானம்: நேரம் மற்றும் சூழ்நிலைக்கேற்றபடி தன்னுடைய உயர்ந்த நிலையை உருவாக்கக்கூடிய அஷ்ட சக்திகள் நிரம்பியவர் ஆகுக!

எந்தக் குழந்தை அஷ்ட சக்திகளால் நிரம்பியவர்களோ அவர்கள் ஒவ்வொரு காரியத்திலும் நேரத்திற்கேற்றபடி, சூழ்நிலைக்கேற்றபடி ஒவ்வொரு சக்தியையும் காரியத்தில் ஈடுபடுத்துவார்கள். அவர்களை அஷ்டசக்திகள், இஷ்ட மற்றும் அஷ்ட இரத்தினங்களாக ஆக்கி விடுகிறது. அந்த மாதிரி அஷ்ட சக்திகள் நிறைந்த ஆத்மாக்கள் எப்படி நேரமோ, எப்படி சூழ்நிலையோ அப்படி ஸ்திதியை (நிலையை) சுலபமாக உருவாக்கி விடுகிறார்கள் அவர்களுடைய ஒவ்வொரு அடியிலும் வெற்றி நிரம்பி இருக்கிறது எந்த ஒரு சூழ்நிலையும் அவர்களை உயர்ந்த நிலையிலிருந்து கீழே இறக்க முடியாது.

சுலோகன்: நான் என்ன காரியம் செய்வேனோ அதைப் பார்த்து மற்றவர்களும் செய்வார்கள் என்ற சுலோகன் எப்பொழுதும் நினைவில் இருந்தது என்றால் காரியம் உயர்ந்ததாகி விடும்!

✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵

## ஓம் சாந்தி சாந்தி சாந்தி!

## பொருளடக்கம்